




திருமந்திரமே
சிவமந்திரம் 6
Y. Tharjini
– கே.வி. குணசேகரம் –







உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனம்
23 - ஆவது குரு மகா சன்னிதானம்
சீர் வளர் சீர் சிவப்பிரகாச தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்

திருவாவடுதுறை - 609 803
நாகை மாவட்டம்
தொலைபேசி எண்: 04364 - 232021

நாள்: 7.7.2010

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க

**அருள் வாழ்த்துரை**

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

.... - அப்பர் தேவாரம்.

இலங்கைத் தமிழறிஞராகிய திருவாளர் கே. வி. குணசேகரம் அவர்கள் திருவருட்பயன் சாத்திரம் குறித்தும், மாயை குறித்தும் கதைகளுடன் கூடிய விளக்கங்கள் தந்து நூல்கள் வெளியிட்டிருப்பது கண்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

அரிய தத்துவக் கருத்துக்களை கதைகள் மூலமாக விளக்கி எளிதாக்குவதும், மனதில் நிலையாகத் தங்கிட வழிவகுப்பதும் பாராட்டுக்குரிய முயற்சி. பல இடங்களில் கதைகளும், கருத்துக்களும் பொருத்தமுற அமைந்துள்ளன. நுட்பமான தத்துவங்களைப் படிப்படியாக விளக்கித் தெளிவாக்குவதில் நூலாசிரியர் திறமை மிக்கவராக விளங்குகிறார். மேலும் ஆராய்ந்து அறிய வேண்டிய செய்திகளும் உள்ளன.

இலங்கைத் தமிழறிஞர் திருவாளர் கே.வி. குணசேகரம் அவர்களின் சைவத் தமிழ்ப்பணிகள் மேன்மேலும் சிறந்து தழைக்க வேண்டுமென நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களை சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

இணைப்பு: திருநீற்றுச்செல்வம்.

பெறுநர்: திரு. கே.வி. குணசேகரம் அவர்கள்,
பிள்ளையார் கோயிலடி,
கோப்பாய் மத்தி,
ஸ்ரீலங்கா.

திருவாவடுதுறை ஆதீனம் ★ திருவாவடுதுறை











# என்னுரை

**தி**ருமந்திரம் மூவாயிரம் திருப்பாடல்களைக் கொண்டது அந்த மூவாயிரம் திருப்பாடல்களையும் ஒன்பது தந்திரங்களாகத் திருமூலர் பிரித்துள்ளார். ஒவ்வொரு பாடலும் சிவபெருமானது பெருமைகளையே கூறுகின்றன. சைவசித்தாந்த முதல் நூலாக இது கொள்ளப்படுகிறது. பல இடங்களில் திருமூலர் தனது வரலாற்றைக் கூறுகிறார். தான் எவ்வாறு சிவபத்தனானேன் என்றும் தனது சீடர்களைப் பற்றியும் கூறுகிறார். சிவனை வழிபட்டு மெய்யுணர்வை அடைந்த ஆருயிர் திருவடியை அடைந்து சிவபெருமானோடு வேறுபாடின்றிக் கலந்து சிவமாகிறது என்று திருமந்திரம் கூறுகிறது.

**தி**ருமந்திரத்தைப் பின்பற்றித்தான் ஏனைய சைவசிந்தாந்த நூல் வெளிவந்தன. திருவருட்பயன், சிவஞானபோதம் போன்ற நூல்கள் திருமந்திரத்தின் சுருக்கமான சாரமாகும். நாயன்மாரின் தேவாரங்களில் கூறப்படும் கதைகள், சிவனின் வரலாறு, பெருமையாவும் திருமந்திரத்தில் கூறப்பட்டவையேயாகும். திருமந்திரம் சொல்லாத எதையும் வேறெந்த நூல்களும் கூறவில்லை. திருவாசகம் என்ற தேனின் சாராம்சம் திருமந்திரமேயாகும். திருமந்திரம் கடுமையான செய்யுள் அமைப்பைக் கொண்டது. அதை விளங்கிக் கொள்வது மிகவும் சிரமமானது.



திருச்சிற்றம்பலம்

**தி**ருமூலர் சைவசித்தாந்தக் கருத்துக்களை இலகுபடுத்தியோ, கதைகளாக ஆக்கியோ சிறுவர்களுக்குக் கொடுங்கள். அதுதான் நீங்கள் சைவசமயத்திற்குச் செய்யும் பெரும் தொண்டும் சேவையும் என்று கூறியுள்ளார். அதன்படி நான் திருவாசகம், சிவஞானபோதம், திருவருட்பயன், பகவத்கீதை, ஔவையாரின் நீதிநூல்கள், பழந்தமிழ் நூல்கள் என்பவற்றைற பல்லாயிரம் கதைகளாக்கிச் சிறுவர்களுக்குக் கொடுத்துள்ளேன். எனது ஐம்பது நூல்கள் நூலுருப்பெற்றன. அவற்றுள்ப் பத்து நூல்களை இந்துகலாச்சார அமைச்சு வெளியிட்டது. நான் சுமார் இருநூறு நூல்களை www.Gunasegaram.com என்ற இணையத்தில் இணைத்துள்ளேன். நாட்டின் சீரற்ற நிலை காரணமாகக் கடந்த இரண்டு வருடங்களாக நூல்களை வெளியிடவில்லை. தற்போது ‘திருமந்திரமே சிவமந்திரம்’ என்ற நூலை இணையத்தில் வெளியிடுகிறேன். இதை எனது தந்தையின் நூறு வருடப்பூர்த்தியடைந்தமைக்காக இவ் வருடம் வெளியிட விரும்புகிறேன். சிவனின் அருள் இருந்தால் வெளியாகும். இவற்றையெல்லாம் எழுதி எனது பணத்தைச் செலவு செய்து வெளியிடுவது எவ்வளவு சிரமமானது. வாசகர்கள் இலட்சம் பெர் வாசித்தும் ஒருவர் கூட விமர்சிக்கவில்லை. அதனால் யாரிடமும் அணிந்துரை பெறுவதில்லை. யாரும் எழுதாத கருத்துக்களையே நான் எழுதிவருகிறேன். அடுத்து ‘மந்திரமும் குறளும்’ என்ற தலைப்பில் ஒரு நூலை எழுதலாமென நினைக்கிறேன். திருமந்திரத்தின் பல பாடல்கள் சில மாற்றங்களுடன் திருக்குறளில் சேர்க்கப்பட்டுள்ளன. திருமந்திரம் சைவசிந்தாத்த நூல் அதுபோலத் திருக்குறளும் சைவசித்தாந்த நூலாகும். அக்கருத்தை இந்நூலில் விரிவாக எழுதலாம் என நினைக்கிறேன். எனது பல நூல்களைக் கணினிமயப்படுத்தித் தந்த செல்வி யோ. தர்ஜினி (கோப்பாய் ஆரியன் கிரியேஷன்ஸ் நிறுவனத்துக்கு) நன்றி கூறிக்கொள்கிறேன்.

நன்றி

கே.வி. குணசேகரம்

கோட்டக்கல்விப் பணிப்பாளர் (ஓய்வு)



திருச்சிற்றம்பலம்

**"திருமந்திரமே சிவகதிக்கு வித்தாகும்.**
**திருமந்திரமே சிவமாம் - அருமத்த**
**புந்திக்குளே நினைத்து போற்று மடியார் தமக்குச்**
**சந்திக்கும் தற்பரமே தான்"**

**எட்டாம் தந்திரம்**

**(சுப்பிராகமம்)**

## 1. உடலிற் பஞ்சபேதம்

**ஊ**டம்பாகிய மெய்ப்பைக்குள் உயிர் தங்கியிருக்கிறது. அதைக் காயப்பை என்றும் சொல்வர். அதற்குள் ஊன் முதலிய சரக்குகள் பல உள்ளன. இதை மாயைப்பை என்றும் சொல்வர். இவ்வுடம்பகத்தே உயிரோடு பேருயிராகிய சிவபெருமான் மறைந்திருக்கிறான். அச் சிவபெருமான் மாயப்பையான உடலை விட்டு நீங்கினால் உடம்பு அழிந்து விடும். இவ் உடம்பு இருவகைப்படும். ஒன்று பிறப்புடம்பு. இது மல ஆற்றல் கொண்டது. அவ் மல ஆற்றலை அகற்றுவதற்காகக் கண் முதலிய கருவிகளுடன் இறைவன் அமைத்துக் கொடுத்த உடம்பு சிறப்புடம்பு. பிறப்புடம்பை நுண்ணுடம்பு என்றும், சிறப்புடம்பை பருவுடம்பு என்றும் கூறுவர். இவ் நுண்ணுடம்பு உயிர் வீடுபேறு அடையும் வரை அழியாது இருக்கும். பருவுடம்பு வினைக்கேற்றப பிறப்புக்களை எடுக்கும். இது தாய் தந்தையாரின் கருவாயிலாக வருவது. நுண்ணுடம்பு ஓசை, உறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் பூத முதல்கள் ஐந்தும் இறுப்பு எழுற்சி, மனம் மூன்றும் சேர்ந்த எட்டும் கூடியதே உடலாகும். மேற்சொன்ன எட்டினுள் தன்மாத்திரைகள் ஐந்தும், மனம், எழுற்சி, இறுப்பு என்ற புலன்களும் அகப்புறக் கலன் அல்லது அந்தக் கரணம் என்று சொல்லப்படும். இவை ஆருயிருடன் தொன்மையிலேயே சேர்ந்தவை. இவை எட்டும் மலமாகும். இவையாவற்றையும் சிவபெருமான் ஆற்றியருள்வான். இவ்வுடம்பு ஏழுவகையான பொருட்களால் உருவானது. அவை சாரம், செந்நீர், ஊன், கொழுப்பு, எலும்பு, மச்சை, மூளை, சுக்கிலம், வெண்ணீர் என்பனவாகும். இவ் உண்மையை அறிந்த மெய்யுணர்வாளர்கள் இவ்வுடம்பைப் பெரிதாக மதிக்க மாட்டார்கள். மாயையின் காரியத்தில் காரியத்தை அறுபதாககக் காண்கின்றனர். அவை பூதங்கள் ஐந்தின் கூறுகள் இருபத்தைந்து, செய்கருவி ஐந்து, காற்றுப் பத்து, நாடி பத்து, ஓசை நான்கு, பற்று மூன்று, குணம் மூன்று என்பனவாகும். இவ் உடல் சிவபெருமானுக்குப் பிடித்த உடம்பாகும். ஒவ்வொரு உயிரும் தன்கையால் எண்சாண் உயரமுடையது. அத்தகைய உடலில் கண், கால் முதலிய உறுப்புக்களும், புலன்களும், புறக்கருவிகள் அறுபதும், அகப்புறக்கருவிகள் எட்டும் ஆகிய அறுபத்தெட்டு உறுப்புக்களுடன் கூடியது இவ் உடம்பு. இவ் உடம்பு பருவுடல், நுண்ணுடல், போர்வையுடல், முதலுடல் என





நான்கு வகைப்படும். நுண்ணுடல் தன்மாத்திரைகள் ஐந்து மனம், எழுற்சி, இறுப்பு என எட்டாகும். போர்வையுடல் குணம், விழைவு, உணர்வு, உழைப்பு, ஊழ், ஊழி என ஆறாகும்.

**நா**ல்வகையான உடம்புகளுக்கும் உயிராக விளங்குபவன் சிவன். உடம்பும் அதனுள்க் காணப்படும் நீரும், உயிரும், கதிரவனின் நிழலும் கடவுள் ஆகும். இதைத் திருவருள் கைவரப் பெற்ற சிவனடியார்களே அறிவர். வழிகள் எழுத்து, சொல், மறை, தத்துவமெய்கள், உலகம், கலைகள் என ஆறு முடிவினை உடையவை முன் கூறிய மூன்றும் சொல்லுலகாகும். அதன் பின் கூறிய மூன்றும் பொருளுலகாகும். இவற்றிற்கெல்லாம் முதன்மையான மெய்ப்பொருள் சிவபெருமான். அதனால் அச் சிவத்துடன் கூடினோர் பதினெட்டும் கூடினவராவர். கூடுதல் என்பது இடையறாது திருவைந்தெழுத்தை எண்ணுதலாகும். நீக்கல, நிலைப்பித்தல், நுகர்வித்தல், அமைதியாக்கல், அப்பலாக்கல் எனக் கலைகள் ஐந்தாகும். பதினெட்டு என்பன வளி பத்து, நுண்ணுடம்பு எட்டு என்பனவே பருமை மிகுந்த பருவுடலையும், அகத்தே அமைந்த நுண்ணுடலையும் உழைப்புக்குகந்த முதலுடலையும் தந்தருளிய சிவபெருமான் மாமாயையில் ஒடுங்குபவன். மாயவுடம்பான இவ்வுடல் சிவபெருமானின் திருவடியில் ஒடுங்கும். பகைவரைத் தாக்கும் தன்மை வாய்ந்த பாய்மாவாகிய குதிரை தொலைவான இடங்களுக்கு விரைந்து செல்லும் தன்மை வாய்ந்தது. அதுபோல ஆருயிரும் தனது போர்வையான உடலை வினைக்கீடாக மாற்றிக் கொள்ளும். ஆருயிர் வினைக்கீடாகவே பருவுடம்பைப் பெறும். இரு வினைப்பயனுள் தீவினைப் பயனின் ஒரு பகுதியை விண்ணுலகில் நுகரும். அப்போது அவ்வுயிர் தான் செய்த வினைப்பயனையே இப்போது அனுபவிக்கிறேன் என்ற நினைவும், அதனை எடுத்துரைத்து அழுத்துவிக்கும் ஞாமனாரின் ஏவலர் செய்யும் செய்கையையும் எண்ணி எண்ணித் துன்புறும். இதுபோல் நல்வினைப் பயனை நுகராலாமோ எனத் தெரியவில்லை. இன்பப் பயனை நுகரும் தேவர்கள் தம்மை மறந்து செயலாற்றுவர். அவர்கள் தடை செய்யவோ, நன்மை தீமைகளை உணர்த்தவோ தேவருலகில் யாருமின்மையால் அவர்கள் தன்னிலை மறந்திருப்பர். ஆனால் மண்ணுலகில் தீமை செய்வோரைத் திருந்துவதற்காக உணர்ந்து வாழும் ஊட்டுவாரும் காணப்படுகின்றனர்.

**ஆ**ருயிர் இருவினைப் பயனை நுகர்வதற்காகவே உடலைத் துறக்கிறது. அதன்பின் உயிர் சொர்க்கத்திற்கும், நரகத்திற்கும் சென்று தான் செய்த நல்வினைகளையும், தீவினைகளையும் அறிந்து கொள்ளும். அங்கு யாவற்றையும் அறிந்த பின்பு அதற்கு ஏற்ற உடல் கொடுக்கப்படும். அல்லது சொர்க்கத்திற்குச் செல்லும். ஞானத்திற் சரியை என்று சொல்லப்படும் அறிவிற் சீலத்தவர்களுக்குச் சிவனே உடம்பாவான். அறிவில் நோன்பினர்க்கு அருளோன் உடம்பாவான். அறிவிற் செறிவினர்க்கு அன்னையும் அத்தனுமாகிய விந்தும் நாதமும் உடம்பாகும். அறிவின் அறிவினரான மோனிக்கு உடம்பு பாழாகும். இவருக்குத் திருவடிப்பேறே கிடைக்கும்.

**ஆ**ணவமாகிய ஒரு மலத்தை மட்டும் உடையவர் விஞ்ஞான கலர் எனப்படுவார். இச் சொல்கட்டற்றவர் எனப்பொருள் தரும். இவர்களுக்கும் கன்மத்திற்கும் மாயைக்கும் தொடர்பிராது.





இவரை ஆணவம் மட்டும் பிணித்திருக்கும். இவருக்கடுத்தவர் கன்மம், மாயை என்ற இரு மலங்களால் பிணிக்கப்பட்டவராவர். இவர்களுக்கடுத்தவர் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களாலும் பிணிக்கப்பட்டவராவர். திருவடியுணர்வுள்ளவர்களுக்குச் சிவனடியே உடம்பாகும். நிலையில்லாத மாயாகாரிய உடம்பை மிக்க மதிப்பான பொருள் என்று பலரும் மதிக்கின்றனர். உண்மை அதுவல்ல. மும்மலங்களைத் தன்னகத்தே கொண்ட உடலை மலம் என்பர். உள்ளம் தூய்மையடையச் 'சிவசிவ' என்ற தமிழ் மறையை எண்ண வேண்டும். தூய உள்ளம் திருவுள்ளமாகும். அங்கே சிவபெருமான் விரும்பி மகிழ்வுடன் வீற்றிருப்பார்.

## ௨. உடல் விடல்

**து**ன்பங்களுக்கு உரித்தானது உடம்பு. அவ் உடம்புள்த் தங்கும் உயிர் அவற்றின் வழி உலகிற்குச் செல்லாது அதை மேல்நிலை அடையச் செய்தல் வேண்டும். அதற்கு உலகின் முதல்வனான சிவபெருமானின் திருவடியினைத் தூய உள்ளத்துடன் நினைத்து புகழ்ந்து போற்ற வேண்டும். அவ்வாறு இடைவிடாது செய்து வருவோர்க்குத் துன்பத்தையே தரும் உடம்பின் பற்று படிப்படியாக அழிந்து பின் முழுமையாக அழிந்துவிடும். உயிர் உடலைவிட்டு நீங்கும் காலம் வந்ததும் செவி, கண் முதலிய உறுப்புக்கள் செயலற்று அழியும். இறுதிக்காலமான அக்காலத்தில் அனுஷ்டிக்கும் நோன்பாலும், செய்யும் தானதர்மங்களாலும் அவ்வுயிரோ அல்லது உடலோ பயன் பெறாது. ஆனால் சிவபெருமான் எவ்வேளையிலும் உறுதுணையாக இருப்பான். மிகமிக நுண்ணிய இடையையும் கவர்ச்சியான அழகுமிக்க உடலழகையும் கொண்ட பெண்கள் மீது கொண்ட காமம் நெஞ்சை அலைக்கழித்துத் துன்புறுத்துமே தவிர இன்பம் தராது என்று உணர்பவர்கள் திண்மையுடையவராவர். அவர்கள் இவ்வுடம்மைப் பெரும் சுமையாகவே கருதுவர். அப்படியானவர்களின் சித்தம் சிவன் மீதே படிந்திருக்கும். அதனால் அவர்கள் திருவடியை அடைந்து பேரின்பமடைவர்.

## ௩. அவத்தைபேதம் (கீழாலவத்தை)

**பு**ருவநடுவில் அறிதற் கருவி ஐந்து, செய்தற் கருவி ஐந்து, வளி பத்து, அகப்புறக் கலன்கள் நான்கு, ஆள் ஒன்று ஆகிய இருபத்தைந்து கருவிகள் தொழிற்படும். இந்நிலை நனவுநிலையாகும். கண்டத்தில் பதின்நான்கு கருவிகள் தொழிற்படும். இந்நிலை கனவு நிலையாகும். நெஞ்சில் எண்ணமும், ஆளும் என்ற இரு கருவிகள் தொழிற்படும். இந்நிலை உறக்க நிலையாகும். கொப்பூழில் நிலைத்தவனாகிய ஆள் தொழிற்படும். இந்நிலை பேருறக்க நிலையாகும். இதைத் துரியநிலை என்றும் கூறுவர். அருஞ்சைவர் மெய் முப்பத்தாறு. இவற்றில் ஒன்றில் செயற்படும் ஆருயிர் தினமும் ஐயப்பாடு எய்தும். அதில் முதல் நிலையான கனவுநிலை, நனவில் கனவு, நனவிற் கனவு, நனவில் உறக்கம், நனவில் பேருறக்கம், நனவில்





உயிர்ப்படங்கள் என ஐந்து வகைப்படும். நனவில் உறக்கம், நனவில் பேருறக்கம், நனவில் உயிர்ப்படங்கள் என நனவில் மூன்று உண்டு, பருவுடல், நுண்ணுடல் இரண்டும் அறிதற்கருவிகளையும், ஐம்புலன்களையும், அவற்றை ஏற்றுக்கொள்ளும் பொறிகளையும், செய்தற்கருவிகளையும், இந்திரியங்கள் பத்தையும், அவற்றின் செயற்பாடுகளையும், மாத்திரைகளையும், அகப்புறக் கலன்களையும், பத்துக் காற்றுக்களையும் ஏற்றுக்கொள்ளும்.

**நி**லம் பொன்மை நிறமுடையது. நீரின் வண்ணம் வெண்மை, நெருப்பின் வண்மை செம்மை, காற்றின் வர்ணம் கருமை, வானத்தின் வர்ணம் புகைமை, நிலம், நீர், நெருப்பு மூன்றும் உயிர்களுக்கு வெளிப்படையாகத் தோன்றும். காற்று தொழிலால் புலனாகும், வானம் உணர்வால் புலனாகும், பூதங்கள் ஐந்தும், பொறிகள் ஐந்தும் குற்றத்தை உண்டு பண்ணும் புறக்கருவிகளாகும். இவற்றால் நிகழும் குணங்களுக்கும், செயல்களுக்கும் மலமே காரணமாகும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு விரிந்தகருவிகள் தொண்ணூற்றாறாகும். ஆருயிர்கள் நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்படங்கல் ஆகிய ஐந்து இடங்களில் ஐம்பாடு எய்தும். இருபத்தைந்து கருவிகள் யானையை ஒக்கும். பேசல், நடத்தல், கொடுத்தல், கழித்தல், என்றும் இன்புறுக் கருவிகள் விரைந்து செல்லும் காலாட்களாகும். ஓசை, உறு, ஒளி, சுவை, நாளும் கருவிகள் ஐந்தும் விரைந்து செல்லும் குதிரைகளாகும். மிடற்றில் உள்ள ஓசைகள் நான்கும் அமைச்சரை ஒக்கும். பிறப்புக்காலம் தொட்டு ஊழிக்காலம் வரை மாறாதிருக்கும் நுண்ணுடல் ஓய்வின்றித் துன்பப்படுத்தும் உடம்பாகும். அவ் உடம்பு இருவினைகளுக்கீடாக அடுத்தடுத்துப் பிறந்திறக்கும். பருவுடலைத் தழுவி இவ் இரு உடம்புகளுக்குள்ளும் இவற்றிற்கு வேறாக ஓர் உயிர் உண்டு அவ்வுயிர் உலகப்பற்றற்று சிவபெருமானை அடைவதற்காகவே சிவபெருமான் கொடுத்தருளினான். இதை உணர்ந்தால் உடம்போடு உயிருக்குள்ள தொடர்பை அறியலாம். இதனை அறியாதவர் இறைச்சி எலும்பு முதலியன என்றுமில்லாத சைவர்கள் இருந்து வாழும் மடத்துள்ப் புகுந்த நாய்போல மயங்குகின்றனர்.

**இ**வ் உடம்பைச் சிவ நினைவால் திருவெண்ணீறு, சிவமணி பூண்டு சிவனடியாராகிய நடமாடும் திருக்கோவில்களைச் சிவனென எண்ணி வழிபட்டால் சிவவுடலாக மாற்றிக் கொள்ளலாம். அவ்வாறு அமைத்தால் பிறப்பையும் இறப்பையும் ‘சி’கரம் அகற்றும். இதைப் பேசாமறை, அசைமறை எனப்படும். சிவபெருமான் அருளிய பொருளும் நெறியும் பதினெட்டாகும். அவை அறம், பொருள், இன்பம், வீடு எனவும். சீலம், நோன்பு, செறிவு, அறிவு எனவும் கூறப்படுகிறது. அவ்வாறு அருளிவிட்டு எனது உள்ளத்தில் ஆரியன் என்றும் நிறைந்த ஆசானாய் வீற்றிருக்கிறான். அவன் உள்ளிருந்து உணர்த்தும் கலைகள் அறுபத்து நான்காகும். அதனால் மனம் சிவனைத் தவிர வேறு எதையும் எண்ணாது. அத்துடன் திருவடியில் அடங்கியிருக்குமாறும் அருள் புரிந்தான். மண்ணும் அதில் இருக்கும் நீரும், தீயும், காற்றும், வானமும், மனம், இறுப்பு, எழுச்சி ஆகிய எட்டினதும் உண்மையை உணர்ந்தால் பூதங்களை வென்ற தன்மை உண்டாகும். ஐம்பூதங்களில் முதலாவதாக உள்ளது வானம். ஓசை, ஊறு என்ற இரண்டும் காற்றில் நிற்பது. ஓசை, ஊறு, ஒளி என்பன தீயில் நிற்பன. ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்பன பூமியில்





நிற்பன. சிவபெருமானின் உன் முகத்தில் முன்நாட்களில் இவை இவ்வாறு கலந்து விரிவு எய்துவதில்லை. கன்னியாகிய மாமாயையைச் சிவபெருமான் காத்தளித்தருளினன். அதனால் இவ்வுலகம் இயங்கி வருகிறது.

**க**னவின் உண்டாகும் நிலைகள் ஐந்தாகும். பலன்கள் ஐந்து, அந்தக் கரணங்கள் நான்கு, இவற்றின் உண்மைத் தன்மையைத் திருவருளால் உணர்ந்தால், பரபரப்பான புலிபோலப் பாயும் மனம் திருவடியில் அடங்கும். மனம் அடங்காதவர்கள் பதின்நான்கு பொறிகளில் பத்தை விட்டு விட்டு எண்ணம், மனம், எழுச்சி, இறுப்பு என்றும் அகப்புறக்கலன்கள் நான்குடன் முன்னைய வாழ்வின் பசைத் தொடர்பால் கழுத்திலே கனவு கண்டனர். கனவின் நிலைக்களமாகிய கண்டத்தை விட்டுக்கீழே இறங்கி நெஞ்சத்திடத்துப் புகுந்து உலகியற் பெருமையும், அறிவும் அழிந்து உயிர் நிற்கும். அப்போது அது மயக்கத்தில் இருக்கும். அங்கு அவ்வுயிருக்கு அமைதி, ஆட்சி, அழுந்தல் என்ற குணங்கள் வெளிப்படாது அடங்கி நிற்கும். அதை அவ்வியக்கம் என்பர். உறக்க நிலைக்களமான நெஞ்சில் எண்ணமும், உயிர்ப்பும், ஆளும் ஆகிய மூன்று கருவிகளும் தொழிற்படும். பேருறக்க நிலையான கொப்பூழில் உயிர்ப்பும், ஆளும் செயற்படும். மூலத்திடத்தில் ஆள் மட்டும் செயற்படும். இங்கு ஆருயிர் ஆள் என்னும் கருவியுடன் கூடித் திரிபுணர்ச்சிப் பண்பை நுகரும். இவ் உண்மையை அவ்வுயிர் விழித்தெழுந்து இன்புறத்துயின்றேன் என்று சொல்வதன் மூலம் உணர்ந்து கொள்ளலாம். பேருறக்க நிலையில் ஆருயிரின் உள்ளமானது எழுந்து மிக வேகமாகச் சென்று ஓசையுடன் மூலத்திடத்து அறியாமையைப் பெறும். தனது செயலை மூலத்திடத்தில் விட்டு விட்டு மூலத்திடத்தில் தனித்து நிற்கும். பேசா எழுத்தாகிய 'ம்' என்பது ஊமை எழுத்தாகும். அதை வாய் திறந்து பேசுவதில்லை. இம் மகரம் ஓமொழியுள் உள்ளது. அகரவுகரங்கள் மகரத்தோடு சேர்ந்தால் 'ஓம்' என்றாகும். இவற்றுள் 'ஆ' ஆற்றலையும் 'உ' அறிவையும் குறிக்கும். ஆற்றல் சக்தி, அறிவு சிவம். ஆமை அரவங் கேட்டதும் தனது உறுப்புக்களை ஒடுக்குவது போல ஆருயிரும் ஓமொழிச் சிறப்பால் ஐந்து உறுப்புக்களையும் தீமையின் போது அடக்கியும் நன்மையின் போது விரிந்து நலனையும் புரியும். அப்போது உயிருக்குச் சிற்றறிவு இராது.

**பே**ருறக்கமான துரியம் சாக்கிரத்துள்ளே இருக்கும். நரிகள் என்று சொல்லப்படும் அறிதற்கருவிகள் ஐந்தும், செய்தற்கருவிகள் ஐந்தும், அகக்கலன்கள் நான்கும் சேர்ந்தால் பதின்நான்காகும். இக் கருவிகள் பதின்நான்கும் நுகர்ச்சியின்றி நஞ்சுண்டது போன்று அடங்கின. அப்பொறிகள் புலன் கொள்ளும். புலன்கள் பத்தும் குதிரையைப் போலப் பறந்தது. உயிர்படங்களாகிய இன்பநிலையை எப்படியானதென்று கூறமுடியாது. ஆருயிர் திருவடியை அடைந்து இன்புறும் வரை ஒட்டி நிற்கும் ஐந்து மலங்களையும் மாறா மலம் என்பர். இவை ஆருயிர்களின் ஐம்பாட்டிலும் உடன் நிற்கும். இவை நீங்காவிட்டால் மாயாகாரியமாகிய உடல், கலன் முதலியவற்றை இன்னும் வேகமாகச் செயற்படுத்த வேண்டும். அதனால் உடல் பக்குவப்படவில்லை. அதனால் உயிர் பிறந்திறந்து துன்புறும். மாயாகாரியங்கள் திருவருளைப் பெறும் வரை கழியாது. சிவபெருமானின் திருவருளைப் பெற்றால் அது வீடுபேறாகும். மாயையை





விலக்கிய உயிர்கள் பிறந்தால் அப்பிறப்பு சிவஞானப் பிறப்பாகும். அப்பிறப்பால் உண்டாகும் திருவடியுணர்வால் நேர்முத்தியான திருவடிப்பேறு வந்தமையும். ஆணவ மிகுதியால் ஆருயிருக்கு அதி மூடத்தனமான உறக்கம் உண்டாகும். அதனால் அவ்வுயிர் இருவினைக்கீடான கன்மங்களையே செய்யும். அதனால் கீழாவத்தை எய்தும். பின் இம்முறையாகச் செயற்பட்டு சிறப்பற்ற ஐம்பாட்டை எய்தும். நல்லாசானிடம் சென்று கற்கும் மாணவர்கள் பயிற்சி வசத்தால் உறங்கவும் முயல்வர். அதை உணர்ந்த நல்லாசான் கோபம் கொள்ளாது அன்பாக எழுப்பி நல்லவற்றை உரைப்பான். அப்போது ஒரு பிரம்பைக் கையில் வைத்திருப்பான். அப் பிரம்பு துன்புறுத்தாது இன்புறுத்தும். அதனால் அதைத் தேசாயதண்டு என்றனர். குரு மாணவனின் உடலில் தொடாது தேசாயதண்டால் தடவி எழுப்புவன். அதுபோலச் சிவபெருமானும் ஆணவ இருள் மண்டிக்கிடக்கும் ஆருயிர்களை தூமாயை என்று சொல்லப்படும் கைக் கருவியால் எழுப்பியருள்வன். அப்படிச் செய்வது அவன் உயிர்கள் மீது வைத்த பேரன்பினாலாகும்.

**நீ**ரும், நீர்க்குடமும் போன்றது என்று அறிவில்லாதவர்கள் புத்தியையும் ஆருயிரையும் கூறுவர். இரண்டும் ஒன்றல்ல. குடத்திற்கு நீர் எப்போதும் வரலாம். அது குடத்திற்குச் சொந்தமானதல்ல. உடல் ஆருயிர் நீங்கினால் வேறாகிவிடும். இரண்டும் சேர்ந்திருக்கும் போது தான் ஒன்றாகும். குடத்தை விட்டு நீர் நீங்கினால் பின்பு சேர்ந்து கொள்ளும் உடலை விட்டு நீங்கும் உயிர் ஒருபோதும் சேராது. உடம்பைத் தனதாகக் கருதும் ஆருயிர் கற்பனைகளுடன் இடையறாது ஓடிக்கொண்டே இருக்கும். அது மனமாகிய குதிரையின் மீதேறி உலகெங்கும் வலம்வரும். அப்பொழுது அறிதற்கருவிகளும், செய்தற்கருவிகளும் உறங்கிக்கொண்டிருக்கும். நெஞ்சம் துடித்துக் கொண்டிருக்கும். ஐந்து மலங்களால் துன்புறுத்தப்படும் ஆருயிர் தன்னைத் துன்புறுத்தும் மலங்களை ஐம்பாட்டில் காணும். வயதாலும், நோயாலும் மூப்படைந்த ஒருவர் தனது இறுதிக் காலத் துன்பங்களுக்குள் அவற்றைக் காண்பர். அதுபோல ஆருயிரும் ஐம்பாடாகிய ஐந்தவத்தையில் தன்னையும் சிவனையும் உணர்வதை இழந்து துன்பப்பட்டு எழுந்தும் நனவினில் அவ் உண்மைகளை உணர்ந்தவர் சிவத்துடன் ஒட்டியுறவாடி திருவடியை அடைவர்.

## மத்திய சாக்கிராவத்தை

**ந**னவில் நனவு என்று சொல்லப்படும் நிலையில் திரேதாயி என்ற நடப்பாற்றல் தொழிற்படும். இதுவே மறைப்பாற்றலாகும். நனவில் நிகழும் கனவில் தூமாயைக்குத் தொடர்பினராவர். நனவின் உறக்கத்திற்கு கன்மத்தொடர்பினராவர். பேருறக்கத்திற்குத் தூமாயைத் தொழிலினராவர். தூமாயை உழைப்புக்கருவியாகிய கலாதியில் அடங்கி நிற்கும். பேருறக்கத்தில் விழைவுக்கருவியாகிய அராகம் முனைக்கும். சுழுனையில் உணர்வுக்கருவியாகிய வித்தை முனைத்துக் கூடும். கனவு நிலையில் உழைப்பு முனைத்துக் கூடி மூலப்பகுதிக் கருவிகள் இருபத்தைந்துடன் தொழிற்படும். நனவு நிலையில் முப்பத்தைந்து கருவிகளுடன் தொழிற்படும்.





ஆணவத்தால் பீடிக்கப்பட்ட அகக்கண் குருடனுக்குத் தான் பார்க்கும் கண்களும் குருட்டுக் கண்களாகவே தொழிற்படும். அதுபோல ஒருமலம் உடையவர்களுக்கும், இருமலங்கள் உடையவர்களுக்கும், மும்மலங்களை நீக்கும் பொருட்டு கோலாக உடம்பினைச் சிவபெருமான் கொடுத்துள்ளான். குருடனுக்குக் கோல் கொடுப்பதை இது ஒக்கும். சிலந்தி தனது முழுத் தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய ஒரு வலையை அமைத்துத் தங்கியிருக்கும். அதுபோல சிவபெருமான் ஆருயிர் தனது தேவைகளைப் பூர்த்தி செய்ய உடம்பை அமைத்துக் கொடுத்துள்ளான். ஆருயிர் போகங்களை அனுபவிக்க ஐம்புலன்களைக் கொடுத்துத்தாலும் அவ்வுடம்பினுள் உடன் இசைந்து இருக்கிறான். அவ்வுடம்புக்கு அருள் வழங்கித் தன்னைத் தாங்கும் தகுதியையும் வழங்கியுள்ளான். சிவபெருமான் ஆருயிர்கள் உய்தற்பொருட்டு இருபத்தைந்து திருவுருவங்களை எடுத்து அருள்புரிகிறான். அப்படியான சிவபெருமானைத் தினமும் பாடிப்பணிந்து வணங்குபவர்களுக்கு இனிமையானவனாகி வேண்டும் வரங்களை அளித்தருள்வான். நாடிகள் பத்திலும் சிறப்பானவை இடப்பால் நாடியும், வலப்பால் நாடியாகிய பிங்கலையும் ஆகும். இவற்றின் உதவியுடன் ஆருயிர் மூலத்திடத்துள்ப்புகும். அங்கிருந்து நாடிகள் அத்தனையையும் இயக்கும். இவ்வாறு இயக்கும் ஆருயிர் இறுதியாகத் திருவடியை அடையும்.

**நா**டிகள் பத்தும், வளிகள் பத்தும் உயிர்ப்புப் பயிற்சியின் மூலம் ஒடுங்கும். அப்போது சிவனின் அருள் தாராளமாகக் கிடைக்கும். அதனால் ஆருயிர் அளவில்லாத இன்பத்தைப் பெறும். அறிதற் கருவிகள் ஐந்தும், செய்தற் கருவிகள் ஐந்தும், இவற்றிற்கான புலன்கள் பத்தும், அகப்புறக் கலன்கள் நான்கும், துரியமான ஆள் ஒன்றும், காலம் ஒன்றும், ஆண்டான் ஒன்றும், சிவனும் சேர்ந்து இருபத்தெட்டு மெய்களும் தத்துவங்களாகும். ஒரு நாளைக்கு இருபத்தோராயிரத்து அறுநூறு உயிர்ப்பை நாம் விடுகிறோம். இவற்றுள் அகத்தே தங்குவது ஏழாயிரத்து இருநூறாகும். இதன்படி ஒரு நாளைக்குச் செலவாகும் உயிர்ப்பு இருபத்தோராயிரத்து அறுநூறு. வரவாகிய உயிர்ப்பு ஏழாயிரத்து இருநூறு. மிகுதியான பதின்நான்காயிரத்து நானூறு உயிர்ப்புத் தினமும் செலவாகிறது. அதனால் வாழ்நாள் விரைவில் முடிந்துவிடும். அதனால் வெளியான இடத்தில் இருந்து சிவ நினைவுடன் யோகப்பயிற்சி செய்ய வேண்டும். முறையாகச் செய்தால் வாழ்நாள் நீடிப்பதோடு ஆரோக்கியமும் மிகும்.

**நா**ன்கு கோடியே நாற்பத்தெண்ணாயிரத்து ஐஞ்நூறு மெய்கள் சிறப்பாக உள்ளன. அவற்றைத் தொண்ணூற்றாறு என்பர். இவ் மெய்கள் அனைத்தும் இருபத்தைந்து மெய்களுள் அடங்கியுள்ளன. மெய்கள் தொண்ணூற்றாறு. இம் மெய்கள் பொதுவானவை என எல்லோரும் ஒப்புக் கொண்டபோதும் ஒப்புக் கொள்ளும் மெய் முறையில் வேறுபடுகின்றனர். அருஞ்சைவர் முப்பத்தாறு மெய்கள் தான் சிறப்புமிக்கவை என்று அறுதியிட்டுக் கூறுகின்றனர். சித்தாந்த சைவர் இருபத்து நான்கு மெய்கள் தான் உள்ளன என்று கூறுகின்றனர். வைணவரும் இருபத்து நான்கு மெய்களே உள்ளன என்று கூறுகின்றனர். சைவர்களுக்கு முப்பத்தாறு தத்துவங்கள். வேதாந்திகளுக்கு இருபத்தெட்டுத் தத்துவங்கள். வைணவர்களுக்கு இருபத்து நான்கு





தத்துவங்கள். மாயாவாதிகளுக்கு இருபத்தைந்து தத்துவங்கள். திருவருளின் துணையால் மெய்களின் உண்மையை உணர்ந்து அவை எல்லாம் வல்ல சிவபெருமானால் அருளப்பட்ட இரவல் பொருள் என்ற நினைவுடன், அவற்றைப் பேணி வணங்கும் மெய்யடியார்க்குச் சிவஞானம் கைகூடும். அவர் சிவமென விளங்கி வீற்றிருப்பர். முப்பத்தாறு மெய்களும் அறிவில்லாத பொருட்களாகும். அவற்றிற்கான அறிவை நந்தியெம்பெருமானே கொடுத்தார். அதனால் ஆருயிர்கள் அதற்கான பொருளை அறிந்தன. நனவின் நனவான ஐம்பாடுகளும், புலம்புடன் கூடிய ஐம்பாடுகளும், நனவு முதலாகச் சொல்லப்படும் ஐந்தும் தனக்கு வேறானவை என்று உணர்ந்து நிலைபேறில்லாத முப்பத்தாறு மெய்களும் வேறுஎனக் கண்டவன் சிவத்துடன் திருவருளால் ஒன்றி நிற்பன். ஐந்து மலங்களும் நீங்கப் பெறாதவன் அயன். மாயையாக்கம் தவிர்ந்த ஏனைய நான்கு மலங்களும் நீங்காதவன் அரி. ஆணவம், கன்மம், மறைப்பாற்றல் ஆகிய மூன்றும் நீங்கப்பெறாதவன் அரன். ஆணவம், மறைப்பாற்றல் ஆகிய இரண்டும் நீங்கப்பெறாதவன் ஆண்டான். ஆணவம் மட்டும் நீங்கப் பெறாதவன் அருளோன்.

## அத்துவாக்கள் (வழிகள்)

**மெ**ய்கள் முப்பத்தாறு. மந்திரங்களின் முடிவுகள் ஏழு. அவை நம, சுவாகா, சுவதா, பரு, வுவுசட்வசட் என்பனவாகும். எழுத்துக்கள் ஐம்பத்தொன்று. புவனம் இருநூற்று இருபத்து நான்கு. பதங்கள் எண்பத்தொன்று. கலைகள் ஐந்து. முடிவு ஏழு. உலகில் உள்ள மண்டிலங்கள் மூன்று. சிவகுருவின் மெய்ச்சீடர்களுடன் கலந்து நடப்பது இருபத்தைந்து மெய்கள். அவற்றுடன் அருமறையான உபதேசமொழிகளுடன் கூடியவர்களுக்கு கண்ணில் தெரியும் கருவிகள் தோன்றாது. அருள் வெளியில் ஈசன் புரியும் திருக்கூத்தைக் கண்டு வழிபடுபவர்களுக்குச் சிவமெய் ஐந்தும் சேர்ந்து சிவவண்ணமாகத் தோன்றியருளும்.

## சுத்த நனவாகி பருவம்

**ந**னவின் பருமைப் பகுதியே நுண்மையாகும். நுண்மையுடன் இருபத்தைந்து மெய்களும் தூமாயையான மாமாயையில் இருந்து வெளிப்பட்டவையாகும். அவற்றோடு தொழிற்படும் ஆருயிரின் நிலை தூநிலையாகும். அந்நிலை நனவிற் கனவு போன்றது. நனவில் உயிர்படங்கும் நிலையை அடைந்தவர் தூயநிலையிற் பிறந்தவராவர். அவர் திருவடிநினைவாகவே இருப்பார். இந்நிலையை ஞான நிலம் என்பர். நனவின் உறக்க நிலை தவழ்ந்தாரோடு ஒக்கும். நனவின் கனவு நிலை வளர்ந்து நடப்பவர்களுடன் ஒக்கும். நனவின் நனவு நிலை ஓடுவோரோடு ஒக்கும். இவையாவும் சிவனை அடையும் நற்றவமாகும். தூயநிலையை அடைந்தவர் தபோதனராவர். அவர் புரியவேண்டிய நோன்பு சிவமெய்களாகும். அவரது திருமேனி அருள்விளக்கமாகும். அவருடன் கூடவிருப்பது திருவருட் செறிவாகும். அவர் அறிவது சிவபெருமானின்





எண்குணங்களேயாகும். அவரின் நிலை இயங்குதிணை, நிலைத்திணையில் வாழும் உயிர்கள் அனைத்திற்கும் உரியநோன்புக் கிரியையாகும். திருவருள் நேரே அருள்புரியும் இடம் சிவமெய். சிவமெய்யே சிவதத்துவமாகும். அவற்றை அத்தன், அன்னை, அருளோன், ஆண்டான், ஆசான் என்பர். இவை தூமாயையில் உள்ளன. ஆணவம் உமியைப் போன்றது. மாலை தவிட்டைப் போன்றது. ஆருயிர் அரிசியைப் போன்றது. உயிர் சிவபெருமானுடன் பிரிவின்றி புணர்ந்து நின்றாலும் அது அரிசியை போன்றதல்லாது சிவனைப் போன்றதாகாது. அதனால் திருவருளால் பாசங்களை நீக்கி திருவடியை அடைய முயற்சி செய்தல் வேண்டும். ஆருயிர் பல்வேறு வகைப்பட்ட போதும் அதன் அறிவுநிலை ஒன்றாகும். அதாவது எல்லா உயிர்களும் சிவபெருமான் விளக்க விளங்கும் சிற்றறிவை உடையனவே. அதற்கு ஒப்பாகப் பசுக்களைக் கூறலாம். பல நிறமுடைய பசுக்களினதும் பால் வெண்மையானதே. அதுபோல ஆருயிர்களை வாழ்விக்கும் பேருயிரான சிவபெருமான் ஒருவனே. அவன் பசுக்களாகிய ஒருவனே. அவன் பசுக்களாகிய ஆருயிர்களை மேய்க்கும் ஆயன். பசுக்களை ஓட்டும் கோலைக் கீழே போட்டுவிட்டால் பசுக்கள் அடங்கா. பொறிகள் ஐந்தும் உடம்புள் வாழ்கின்றன. அப்பொறிகள் பறக்கும் காக்கைகளுக்கு ஒப்பானவை. பொறிகள் இளைத்தால் உடம்பும் இளைக்கும்.

**பொ**றிகள் ஐந்தும், அந்தக்கரணங்கள் நான்கும் அறியாமைவசப்பட்டு ஆருயிரைக் கெடுக்கும். அதனால் ஆருயிர் நெறிதவறி வாழ்ந்து ஏழ்நரகத்தில் விழுந்து மீளாத துன்பத்தை அடையும். ஆருயிர் அறியாமையால் ஆணவத்துடன் சேர்ந்து தன்நிலையை மறக்கும். இந்நிலை அப்பால் நிலையாகும். இவ் ஆணவத்தை அகற்றவே சிவபெருமான் சிவகுருவாக வந்தருள்வான். அது பேருறக்க நிலையாகும். பின் மாயையைப் பொருத்துவிப்பன். இந்நிலை உறக்கநிலையாகும். நனவில் கனவு வராது. அதனால் நனவில் ஐம்பொறிகளும் செயற்படும். நனவின் போது கனவு காணாத உறக்கத்தைச் சுழுத்தி என்பர். அப்போது மனம் முதலிய நுண்பொறிகள் செயற்படும். தன்னைச் சார்ந்துள்ள மாயையை நுகர்வதே பேருறக்க நிலையாகும். நனவில் அப்பால் நிலை தன்னை வேறு என்று உணர்வதாகும். பேருறக்க நிலையில் ஆளுடன் மட்டும் ஆருயிர் நிற்கும். அதன்பின் அது மாயையுடன் செல்லும்.

**பே**ருறக்கத்தில் ஆருயிர் தன்னளவில் அறிவாய் நிற்கும். அப்போது திருவருளுடன் கூடினால் ஆருயிரை முதிய அனல் என்பர். ஆருயிர் தினமும் ஐம்பாடு எய்தும். அந்நிலையில் செயப்படும் கருவிகள் முப்பத்தைந்து. கனவு நிலையில் தொழிற்படும் கருவிகள் இருபத்தைந்து. உறக்க நிலையில் செயற்படும் கருவிகள் மூன்று. பேருறக்க நிலை கொப்பூழில் நடைபெறும். இங்கு தொழிற்படும் கருவிகள் இரண்டு. உயிர்ப்படங்கும் நிலையில் தொழிற்படும் கருவி ஒன்று. பூதங்கள் ஐந்து. மனம், எழுற்சி, இறுப்பு என்னும் எட்டின் சேர்க்கையே நுண்ணுடலாகும். இதைப் புரியட்டகம் என்பர். இவ் எட்டும் சேர்ந்து தொழிற்படும் நிலை நனவாகும். கனவின் போது மனம், எழுச்சி ஆகிய மூன்றும் செயற்படும். உறக்கத்தின் போது எழுச்சியும் இறுப்பும் செயற்படும். பேருறக்கத்தின் போது எழுச்சி மட்டும் செயற்படும். நனவின் போது பொறிகள் ஒடுங்கியிருக்கும். இதனை ஒட்டாநிலை என்பர். நனவிற் கனவு என்பது நினைத்தலாகும். நனவில் உறக்கம் என்பது





மறத்தலாகும். நனவின் பேருறக்கம் என்பது மனதின் தொழிற்படங்கல் என்பது தொழிற்பாடு இன்மையாகும்.

**க**னவின்போது நனவு போலக் காண்பது கனவின் நனவு. கனவிற் கனவு கனவைக் கண்டு மறத்தலாகும். கனவில் உறக்கம் கனவைக் காணாமையாகும். கனவின் பேருறக்கம். உத்தேசமாகக் கனவு காணல். உயிர்ப்பு அடங்கலின் போது உத்தேசம் செயலின்றி நிற்கும். சுழுத்தி என்பது உறக்கத்தின் போது நனவு தோன்றாமையாகும். உறக்கத்தில் கனவு ஆருயிருக்கு உண்மை மட்டும் தோன்றுவதாகும். உறக்கத்தில் உறக்கம் என்பது சுட்டுணர்வும், சிற்றுணர்வும் அழிவடைதல். அந்நிலை முற்றுணர்வுள்ளவர்களுக்கே ஏற்படும். பேருறக்கத்தின் போது வரும் நனவானது உறுதியினை அறிந்து கொள்ளும் அறிவாகும். பேருறக்கக் கனவில் ஆருயிர் தன்னை அறிந்து கொள்ளும். பேருறக்கத்தின் கண் பேருறக்கம் தான் சிவனாகத் தோன்றுதல். ஆருயிர் சிவனிறைவில் ஒடுங்கும். சிற்றறிவு திருவருளால் முற்றறிவில் ஒடுங்கி நின்று அவ் அறிவினை அறிந்து கொள்ளல் அறிவில் நனவாகும், அறிவிற் கனவு என்பது எந்த எண்ணமும் இல்லாது அறிவில் ஒடுங்குவதாகும். இது தன்னை மறந்த நிலையாகும். அறிவுப் பேருறக்கத்தில் ஆருயிருக்குச் சிவன்தோன்றியருள்வான். சிவகுருவின் அருளால் ஆருயிர் உண்மைத் தன்மையை அறிந்து கொள்ளும். அதுவே பெருநிலையாகும். சிவகுருவின் அருளால் தான் எங்குமாம் என்ற உண்மை தோன்றும். அவ்வாறு தோன்ற ஐந்து மலங்களும் அழிந்து உண்மை அறிவில் ஆருயிர் நிற்கும். அதனால் நுண்ணிய நிலையை அடையும். சில ஊழிகள் கடந்தபின்புதான் உடம்பு நாமல்ல அது நமக்கு வேறானது நாம் அதனை இயக்குகிறோம் என்ற உண்மை ஆருயிருக்குப் புரியவரும். அது நம்மை இயக்கும் பேருயிர் ஒன்று உள்ளது என்ற உண்மையும் பல ஊழிகள் கடந்த பின்பு தான் தெரியவரும். அப்பேருயிர் சிவன் என்று உணர்ந்த பின்பு வேறு பொருட்களை நான் அறியவில்லை. எல்லாப் பொருட்களும் அவனிலேயே அடங்கி நிற்கின்றன என்றும் அறிந்து கொண்டேன்.

**சி**வபெருமான் கலப்பால் அனைத்து உயிர்களுடனும் ஒன்றாக இருக்கிறான். அதனால் அவன் உயிர்க்கு உயிராகிய உருவாகவும், அருவாகவும் உயிர்க்குள் இருந்து அருள்கிறான். உயிர்க்கு உயிராக நிற்கும் போது அவனை 'அருவன்' என்றும், உடலாய் நிற்கும் போது உருவன் எனவும் சொல்லப்படுகிறான். பொருட்தன்மையில் அவன் வேறாக நிற்கும் போது அயற்புணர்வாக நிற்பன். அப்போது அவன் அறிவாகவும், அறிவிற் பின்னிய செறியாகவும் நிற்பன். அவன் பேரறிவுப் பேராற்றலாகிய சக்தியுடன் என்றும் பிரியாது இருப்பதால்தான் உலகமும் உலகத்தில் வாழும் உயிர்களும் ஓவாது இயங்குகின்றன. சிவபெருமான் ஆருயிர்களின் உடலை இயக்குவதுபோல சிவையாகிய சக்தியையும் இயக்கியருள்கிறான். இந்த நிலையில் சிவன் உயிராகவும் சிவை உடலாகவும் போற்றப்படுகிறாள். சிவன் சிவையைத் தொழிற்படுத்தும் போது தான் உலகம் உண்டாகி உயிர்கள் வாழ்கின்றன. அதனால் உயிர்களுக்கு ஏற்படும் மாசான மலங்களை அகற்றுவதற்காக வினை, மாயை, மாயையாக்கம், நடப்பாற்றல் ஆகிய நான்கையும் சிவன் படைத்துள்ளான். அப்போது மலம் ஐந்தாகிவிடும். ஆணவத்துடன் மட்டும் ஆருயிர் ஒட்டியிருக்கும்





நிலையைப் புலம்புநிலை என்பர். இதுவே ஆருயிரின் உண்மை நிலையாகும். அதன்பின் நனவின் பேருறக்கத்தில் ஆருயிர் தனது நிலையை உணரும். இந்நிலை ஆணவம் அகலாத நிலையாகும். ஆணவம் நீங்கிய நனவின் நிலையில் பரனுண்மை வெளிப்படும். இது திருவருளின் அருளாகும். இதுவே சிவரூபமாகும். ஆருயிரும் பேருயிரான சிவமும் தொன்மையில் சேர்ந்த போதும் உயிரின் ஆற்றல் மலப்பிணிப்பால் மறைந்திருக்கும். அதுபோலவே மலப்பிணிப்பால் சிவனும் மறைந்திருப்பான்.

**தி**ருவருளால் மலம் நீங்கியதும் ஆருயிரின் அறிவு வளர்பிறையைப் போல வளரும். குழம்பிய மனத்துள் காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்று பகைகள் உண்டு. நெஞ்சுள் செவி, மெய், நோக்கு, நாக்கு, மூக்கு என்னும் மதயானைகள் ஐந்துள்ளன. அத்துடன் அரிமா, நரிமா, கரிமா என்னும் பன்னிரண்டுடன் கலந்து நிற்கும். நெஞ்சுள் இவை ஆடும், அடங்கும். இவற்றை ஓடுதல், ஒடுங்குதல் என்றும் கூறலாம். வளி பத்தாகும். நுண்ணுடம்புக் கருவிகள் எட்டு. இப் பதினெட்டுக் கருவிகளும் இருவினைகள் முளைக்கும் வித்துக்களாகும். இவற்றுள்ச் சிக்குண்ட மனத்தைத் தூய்மைப்படுத்த வேண்டும். நன்னெறி நான்மைச் செந்நெறியில் வாழ்ந்தால் சிவபெருமான் எழுந்தருளி அருள்வான். நனவின் கண் காணப்படும் கருவிகள் இருபது. அவை அறிதற் கருவிகள் ஐந்து, செய்தற் கருவிகள் ஐந்து அவற்றால் கொள்ளப்படும் புலன்கள் பத்து. இவ் இருபது கருவிகளுடன் ஆருயிர் செல்லும் போது நனவின் கருவிகள் விலகும். கனவகத்துக் கருவிகள் குற்றமுடையவை. அதனால் உதறித்தள்ளப்பட நினைவு ஒடுங்கி உறக்கத்தில் நிற்கும். உறக்கத்தில் நிற்கும் உயிர் திருவருளால் பேருறக்கத்தில் உலகத்துடன் பொருந்தி நிற்கவேண்டும். வழிபாடுகளை முறைப்படி செய்தால் நனவிற் செல்ல முடியும். அப்படியே சிலநாட்களுக்கு நிலைத்து நின்றால் திருவடியுணர்வால் மலங்கள் நீங்கித் தூய்மை அடையும். இதுவே ஆருயிர் நின்மலனாகும் நிலையாகும்.

**தூ**ய்மையடைந்து புனிதனான ஆருயிர் ஈசன் என்று அழைக்கப்படும். அதன்பின் ஆருயிர் சிவவுலக நுகர்வுகளை நுகரும். தூமாயை அருள் விளக்க வடிவங்களாக மாறும். திருவருளால் அவ்வடிவங்கள் அகலத் தூய சிவனாகிப் பேரொளிப் பெருமுதல்வனாக விளங்குவன். ஆருயிர்களின் உலகத்திற் காணப்படும் மூன்று மண்டலங்களையும் திருவருளால் கண்டுள்ளனர் அம்மாயாகாரிய நன்னாட்டை உரிமையாகக் கொண்ட சிவபெருமான் ஆவர். அவரை மாயநன்நாடன் என்பர். அவனை அவனருளால் அகத்துள்க் கண்டு மகிழ்வர். இவற்றை நம்பமுடியாது என்று கூறுவதற்கு யாருக்கும் துணிவில்லை. புள் என்று சொல்லப்படும் ஆருயிர்கள் அறியாமையால் புலம்பின. திருவருள் என்ற மாதை அறியாது மயங்கி அலைந்தன. ஆருயிருடன் வேறு பிரித்துக் காணமுடியாத பிணைப்பில் சிவபெருமான் இருந்தான். இவ்வுண்மையைத் திருவருளின் துணையால் அறிவோர் திருவடியைச் சூடிப் பெருமைகொள்வர். நிலைகள் ஆறும், தீமண்டலங்கள் மூன்றும் கண்டம் எனப்படும். இவற்றை ஆருயிருக்கு அளித்தவன் சிவபெருமான். இதைத் திருவருளால் அறிந்தவன் அனைத்துப் புவனங்களுக்கும் அதிபதி சிவன் என உணர்வான். விளக்கின் திரியைத் தூண்டி ஒளியைப் பெருக்க ஒருவன்





இருப்பது போல, ஆருயிரின் அறிவான மெய்யுணர்வைத் தூண்டுபவன் சிவபெருமான். விளக்குத் திரியின் தன்மையை உணர்ந்து அதை ஏற்றியவன் அதன் தேவைகளை நிறைவு செய்து ஒளியைப் பெறுகிறான். அதுபோல ஆருயிரின் தேவைகளை அறிந்து அவற்றிற்கு உதவும் விளக்காளனாகச் சிவன் செயற்படுகிறான். தூமாயையைத் தன்னறிவால் சுட்டி உணர முடியாது. திருவருட் கண்ணால் பார்ப்பவனே அதை அறிவான். அவ்வாறு அறிவதற்குத் திருவருளே துணையாக நிற்கிறது. அறிவுடைய ஆருயிர் மாயையிற் பொருந்திய மூலப் பகுதியோனாவான். திருவருள் ஆருயிரை மாயைக்குட்படுத்துவது மாயையில் அதை நிலைப்பிப்பதற்காக அல்ல. மாயையைக் கூட்டி மலத்தை பலவீனப்படுத்தி, அம் மலத்துடன் கூட்டி மாயையையும் மலத்தையும் அகற்றுவதற்காகவாகும். அழுக்கை அகற்றுவதக்காக அழுக்கைக் கரைத்து அதை அகற்ற நீரைப் பயன்படுத்துவது இதற்கு ஒப்பாகும். ஆருயிர் மாயையுடன் கூடாத நிலையைப் புலம்பு என்றும் கூடிய நிலையைப் புணர்வு என்றும், அதை அகற்றும் நிலையை புரிவு என்றும் கூறுவர்.

## கேவல சகல சுத்தம் (புலம்பு புணர்வு பரிவு)

திருவருளின் அருளால் ஆருயிர் தன்னை அறியும் நிலையைப் 'புரிவி' என்பர். இதற்கு ஆதியாகிய நடப்பாற்றல் உடல்கலன், உலகு, உணா என்னும் நான்கினை மாயையாக்கமாகப் படைத்தளிக்கிறது. இவற்றுடன் கலந்த ஆருயிர் புணர்வி எனப் பெயர்பெறுவான். படியாமல் இருப்பது புலம்பு நிலை. படிப்பது புணர்வு நிலை. இன்பமளிப்பது உறவு. துன்பத்தைத் தருவது பகை. இதற்குதாரணமாகப் படித்தவர் சகல வளங்களையும் பெற்று இன்புறுவர். படியாதவர் துன்பப்படுவர். இவை அவர்களின் செயல்களால் வந்தவை. இவற்றிற்கு ஆதாரமாவது திருவருளும், திருவருளின்மையுமேயாகும். பழமலமான ஆணவத்தைப் பாசம் என்பர். அதை நீக்குவதற்காக முப்பத்தாறு மெய்கள் அருளப்பட்டன. இம் மெய்களுடன் ஆருயிர்கள் கலந்து அன்புடன் நின்றன. இம் முப்பத்தாறு மெய்களையும் திருவருளின் துணையால் நீக்க வேண்டும். அவை நீங்கினால் மனம் புனிதமடையும். புலம்பு நிலையில் உள்ள உயிர் மாமாயையுடன் சேரும். அதனால் அது முப்பத்தாறு மெய்களுடனும் கூடும். அது கூடியதும் மாயாதனு விளக்கம் என்ற முறையில் ஆருயிர் அறிவைப் பெறும். அதனால் ஆருயிர் கருவிகளுடன் சேர்ந்து இயங்கும். அதனால் ஆருயிர் கருவிகளில் பற்றுக் கொள்ளும். இந்நிலை புணர்வு நிலையாகும். கருவிகளுடன் கூடியவர் புணர்வினராவர். இவர் கலைச் சகலர் என்றும் சொல்வர். இவர்கள் மும்மலப்பிணிப்பினராவர். அயன், மால் உட்படத் தேவர்கள் அனைவரும், பூமியில் வாழும் பூச்சி புழுக்கள் தொடக்கம் மனிதர்கள் உட்பட அனைவரும் மும்மலத்தவர்களே. தூமாயையில் உள்ளோர் இரு மலத்தவர். ஊழியின் முடிவான பிரளயத்தில் திருவருளால் ஒரு மலம் நீங்கியவர் இரு மலங்களை உடையவர் என இருவகையினர் இருப்பர். ஆணவ மலத்தை உடையவர்கள் ஒரு மலத்தார் எனப்படுவர். இவரை விஞ்ஞான கலர் என்பர். இவர்களை அட்டவித்தேசரெனக் கூறுவர். இவர்கள் எண்மராவர். இவர்கள் சிவனருளால் உள்ள மூலமலமான ஆணவமும் அகன்று





நாதமான ஒளியினையும் விட்டகல்வர். இவர்கள் திருவருளில் அடங்கி முனைப்பற்று திருவருளின் திருக்குறிப்பின்படி வாழும் தூயவராவர்.

**பு**லம்பு நிலையாகிய கேவலநிலை புலம்பிற்புலம்பு, புணர்விற்புலம்பு, புரிவிற்புலம்பு என மூன்று வகைப்படும். இவற்றைக் கேவலகேவலம், சகலகேவலம், சுத்தகேவலம் என்றும் கூறுவர். அவை இருட்புலம்பு, மருட்புலம்பு, தெருட்புலம்பு, அருட்புலம்பு என்பன. ஆருயிர் மாயையைச் சேர்ந்த பின்பே உவப்பாகிய விழைவு விளக்கமுறும். விளக்க முற்றதும் மாயைதானே அகலும். முப்பத்தாறு மெய்களும் அருளால் கருத்தில் இருந்து அகலும். அகன்றதும் அறியாமையாகிய ஆணவம் நீங்கி ஆருயிர் புனிதமடைந்து திருவடியைச் சேரும். உடல்மெய் இருபத்து நான்குடன் ஆளும் கூடி ஆருயிரில் ஒடுங்கும். ஆன்மா என்ற உணர்வு மெய் ஆறும் அனந்தரால் ஒடுக்கப்படும். ஏனைய மெய்கள் சிவனால் ஒடுக்கப்படும். அத்தன் மெய் சிவனாக நிற்கும் உடன் மெய் இருபத்தைந்தும் உணர்வு மெய் ஆறுடன் ஒடுங்கும். அவ்வுயிரின் அகத்தவமேன்மையால் ஆசான், ஆண்டான், அருளோன் மெய்கள் மூன்றும் ஒரு அன்னை அத்தன் பாதத்தில் ஒடுங்கும். ஒரு மலத்தை மட்டும் உடைய விஞ்ஞான கலர் தனிநிலையினராவர். இந்நிலை அருவநிலையாகும். இருமலங்களை உடையவர் பிரளயாகலர் எனப்படுவார். இவர் ஊழியாற் கட்டற்றவராவார். இந்நிலையை அருவுருவ நிலையாகும். மும்மலங்கள் உடையவர்கள் சகலர். இவர்கள் காணும் உருவினர்.

**வி**ஞ்ஞான கலரைத் தூண்டிச் செயற்படுத்துவது விந்து சக்தியாகும். அந்நிலையில் அவ்வுயிருக்கு உடலைப் பெறும். அவ்வுடல் மாமாயையில் இருந்து தோன்றிய மந்திர உடலாகும். பிரளயாகலருக்கு ஆணவம் மேம்பட்டும் ஏனைய மலங்கள் அடங்கி நிற்கும். அவர்களின் உடம்பு தூமாயையால் அமைந்தது. அவர் இருவினைகளையும் கடந்த இறைபணியாளராவர். தூய நிலையடைந்த ஆருயிர் பற்றற்று உறுதியுடன் தனித்து நிற்கும். இந்நிலை தூய புலம்பு நிலையாகும். இந்நிலையில் ஆருயிருக்குத் தன்னிலை தோன்றாது. அது சிவநினைவுடன் இருக்கும். ஆருயிர் கேவலநிலையில் மலத்துடன் காணப்படும். அந்நிலையில் ஆருயிரின் அறிவு விளங்கா. தூமாயையும், தூவாமாயையும் பரையும் அவரவரது செவ்விக்கேற்ற உடம்புகளாகவே அமையும். ஒரு மலம் உடையவர்களுக்கும், இரு மலங்களை உடையவர்களுக்கும் அமையும் உடம்பு தூமாயையில் இருந்து தோன்றுவதாகும். மெய்யுணர்வுள்ளவர்களுக்குத் திருவருளில் இருந்தே உடம்பு தோன்றும். மும்மலங்களையும் உடையவர்களுக்கு உடம்பு தூமாயையில் இருந்து தோன்றும். அவர்களின் செயல்களும் அவ்வவ் மாயைகளின் செயற்பாடாகவே அமையும். மும்மலக் கூட்டுள்ளவர்கள் பூமியில் வாழ்வர்.

**கே**வலமும், சகலமும், சுத்தமும் கேவலாதிகளாகும். இவை ஒவ்வொன்றும் முத்திறப்படும். அவை புலம்பிற்புலம்பு, புலம்பிற்புணர்வு, புலம்பிற்பிரிவு என மூன்று. புலம்பிற்புணர்வு, புலம்பிற்புலம்பு, புணர்விற்பரிவு என மூன்று. புரிவிற்புணர்வு, புரிவிற்புலம்பு, புரிவிற்புரிவு என மூன்று. இவ்வாறு அவை ஒன்பது வகைப்படும். இவற்றை முறையே கேவல கேவலம்,





கேவலசகலம், கேவலசுத்தம் எனவும், சகலசகலம், சகலகேவலம், சகலசுத்தம் எனவும், சுத்தசுத்தம், சுத்தகேவலம், சுத்தசகலம் எனவும் கூறலாம். இவ் ஒன்பதையும் ஆருயிர் கூடிச் சுத்தமடையும். இதைத் திருவருளாற் புரிந்து கொள்ளலாம். புலம்பிற் புணர்வு தூமாயையின் நிலைக்களனாகும். அப்புலம்பிற்பிரிவு பேருணர்வாகிய விஞ்ஞானமாகும். இந்நிலையே ஒரு மலமுடையவரின் நிலையாகும். அந்நிலையில் அவ்வுயிர் சிவபெருமானாக விளங்கும். புணர்விற் புலம்பு நனவின் அப்பாலாகும். புணவிற்புரிவு ஆருயிர் திருவருளுடன் கூடிய நிலையாகும். தூயபுணர்வின் கண் இம் மூன்று நிலைகளையும் காணலாம். தூய புரிவிற்புரிவு என்பது ஆருயிர் சிவனது திருவுருவை எய்துதல். புரிவிற்புலம்பு தவஒடுக்கம். புரிவிற்புணர்வு இன்பியலில் மூழ்கும் நிலையாகிய துரிய விலாசமாகும். நனவில் உறக்கம், நனவிற்பேருறக்கம், நனவின் உயிர்படங்கல் ஆகிய ஐந்தும் துன்பில் இன்பமாகும். ஆணவம், கன்மம், மாயை, மாயைசூக்கம், நடப்பாற்றல் ஆகிய ஐந்து மலங்களின் பிணிப்பும் மறையாது அகலும் சாக்கிரா கீதத்தில் தன்முனைப்பான ஆணவம் அற்றுப்போம். இந்நிலையில் ஆருயிர் சிவத்தை விளங்கித் திருவடியில் மூழ்கும்.

**ஒ**டுக்கமும் அப்பால் நிலையும் திருவருளால் சிறிதும் தோன்றாது. ஆருயிர் தான் நுகரும் இன்பம் திருவடியால் வந்தது என்று அறியும். அதன்பின் சித்தம் இயங்காது நின்றுவிடும். அதனால் செயல்களும் அற்றுப்போய்விடும் ஆருயிருக்குப் பிறப்பையும் முத்தியையும் சிவபெருமான் அருள்வது அவ்வுயிர்கள் செந்நெறியில் வாழ்ந்து அதனால் திருவடியின்பம் பெற்று மகிழவே. ஆருயிர் கருவிலேயே தூவாமாயையுடன் கலந்து மாயாகாரியப் பொருட்களை நுகர்வதற்கான வேட்கை உண்டாகிவிடும். பேருறக்கநிலை எட்டுப்பாகுபாடுகளைக் கொண்டது. அதில் நுண்ணுடம்பு கனாநிலையாகும். பருவுடம்பு நனவு நிலையாகும். ஆசை இசை நிறைவாகும். உயிர்ப்பு அடங்கும் போது ஆணவம் மட்டும் ஆருயிரைப் பிணித்து நிற்கும். பேருறக்கத்தின் போது தூவாமாயையைப் புணர்ந்து நிற்கும். உறக்கத்தின் போது இருவினைகளும் சேர்ந்து நிற்கும். கனவின்போது தூமாயை கூடி நிற்கும். நனவின் போது திரோதாயியுடன் ஐம்மலங்களும் பிணிப்புற்றிருக்கும்.

**மா**யாகாரிய உடம்பைப் பெற்ற ஆருயிர் உருவத்தைப் பெறும். அப்போது வினைப்பயனை அது அனுபவிக்கத் தொடங்கும். பொறிகள் புலன்களை நுகரும். அதை துற்று என்பர். எடுத்துக்காட்டாகக் கண் நுகர்வுப் பொறி. காட்சி நுகர்வு இவ்வாறு உடலில் உள்ள நுகர்வுப் பொறிகள் தமது உணவுகளை நுகர்கின்றன. ஆருயிர் அடிமை முறையில் விருப்பு வெறுப்பின்றி இறைவனைத் திருவருளின் மூலம் அடைய முயலும் தன்மையை இருவினையொப்பு என்பர். இந்தநிலை உடல், ஊழ்நுகர்விலும், உள்ளம் ஊழிமுதல்வனாகிய சிவபெருமானின் திருவடியை அடைதலிலும் காணமுடியும். இந்நிலையில் சிவபெருமான் சிவகுருவாக எழுந்தருள்வான். எழுந்தருளித் திருவைந்தெழுத்தை செவியுறுத்துவன். அப்போது இருண்மலம் அகலும். தூயநிலை உருவாகும். அருஞ்சைவர் மெய்களான முப்பத்தாறு மெய்களுடன் ஆருயிர் கூடி ஐம்பாட்டினை எய்தும். செவ்விவாய்ந்த ஆருயிர் தூமாயையில் வாழும் ஐவர் தம்நிலையை





விட்டு நீங்குவர். அவர்கள் நீங்கியதும் சிவபெருமான் ஆருயிருக்குத் தனது திருவடியை வழங்குவார்.

**ஒ**ருவன் உலக நூல்களைக் கேட்டு முன் குடும்பத்தையும் அதனோடு ஒட்டிய புறப்பொருள்களையுமே தனதுடமை என நினைப்பான். உலக நூல்களைப் பற்றிக் கேட்டறிந்த பின்பும் தன்னுடம்பையே உயிர் என நினைப்பான். அந்நிலையில் அவன் தனக்கு வேறாக ஒருவன் இருப்பதை உணரவில்லை. பின்பு மெய்யுணர்வைத் தரும். நூல்களைச் சிறிது சிறிதாகக் கேட்டு அந்நூல்கள் கூறியபடி வாழ்ந்து வந்தான். திருவருள் அவன் வசமானது. அதனால் தனது உண்மை நிலையைப் புரிந்து கொண்டான். நன்னெறி நான்மை வழியில் வாழ்ந்து துரியத்தைக் கண்டான். இந்நிலை சிவனுடன் இரண்டறக் கலக்கும் நிலைக்கு ஏதுவானதாகும். நனவு நிலையில் அப்பால் நிலை வந்து பொருந்தினால் மலமாகிய மயக்கம் கெடத் திருநோக்கம் செய்யும். அதனால் பிறப்பறுந்து போக வீடுபேறு கைகூடும். விருப்பும், வெறுப்பும் ஆருயிருக்கு இயல்பாக ஏற்படும்.

**உ**டன்மெய் இருபத்து நான்கும் தூவாமையை உடையன. உணர்வுமெய் ஏழும் தூவாமையையும் தூய்மையையும் உடையன. உணர்த்து மெய் ஐந்தும் தூய்மையானவையாகும். இவை முறையே அசுத்தம், சுத்தா சுத்தம், சுத்தம் என்று கூறப்படும். ஒரு மாயை பகுப்புவேறுபாட்டால் மூன்று பிரிவாக வேறுபடுகிறது. சிவதீக்கை பெறும் போதும் மும்முறை நீர் பருகும் போது, “போற்றி நாலாறுண்மை போற்றி ஏழ்மெய்யன்பு, போற்றி ஐந்தாம் அறிவு போற்றி” என ஓதுதல் வேண்டும். தூவாமாயையைச் செவியித்தாயாகவும், தூமாயையைத் தாயாகவும் கொண்டு பிறந்த மகவே உடலாகும். இதற்குத் தந்தை சிவபெருமான். அவனின் திருவருளால்தான் மாயாகாரிய உடல் பூமியை வந்தடைகிறது அதனால் தான் சிவனைத் தந்தை என்கின்றனர். இந்நிலையில் உயிர் உடம்பினைப் பெற்று புணர்வுநிலையை அடைகிறது. பின் திருவருளால் புரிவு நிலையை அடைகிறது.

## பராவத்தை

**மா**யாகாரியமான இவ்வுடலைப் படைத்து உடலில் நின்றும் செவ்வி நோக்கி ஆருயிரைப் பிரித்தருள்வான். அதற்காக அவன் மாயையுடன் கலந்து நிற்பதை அவனருளாலே அறிந்து கொண்டேன். வேண்டுதல் வேண்டாமை இல்லாத நிலையை உவர்ப்பென்பர். இது சிவபெருமானின் திருவருளாற்றலாகும். அவ்வாற்றலே பேரின்பமாகும். திருவருளால் விந்து என்று சொல்லப்படும் தூமாயையில் உயிரும், உடம்பும், உடம்பின் கூறுகளும் உண்டு. மெய்யுணர்ந்தவர்களே மெய்ப்பொருளின் உண்மையை அறிவார்கள். அத்துடன் திருவருளையும் பெறுவார்கள். அத்திருவருளின் துணையோடு சிவபெருமானை அறிந்து கொள்வர். இவ்வாறு சிவபெருமானை அறிந்து கொள்ளும் அறிவே மெய்யறிவாகும். அவர்களுக்குச் சிவன்





தீங்கனியாவான். தீங்கனி என்பது நமசிவயப் பழமாகும். பூதம் ஐந்து, பூதமுதல் ஐந்து, பொறி ஐந்து, புலன் ஐந்து இவை நான்குவகையாகச் சொல்லப்படும் ஐந்து சுவைகளாகும். இவற்றுடன் எண்ணம், மனம், எழுச்சி, இறுப்பு ஆகிய நான்குடனும் சேர்ந்த இருபத்து நான்கினையும் கடந்தநிலையில் ஆருயிர் பஞ்சனையில் துயிலும். அவ் ஆருயிரை விஞ்சையர் வேந்தன் என்பர். நடுநாடியில் தங்கியிருக்கும் உயிர்ப்பு ஆருயிருடன் கூடிக்கொள்ள ஆருயிர் ஒடுங்கி உறங்கும். இதை ஒடுங்கிய உறக்கம் என்றும், யோக நித்திரை என்றும் சொல்வர். இந்நிலையில் ஆணவம் சிவபெருமானது நஞ்சுண்டகண்டத்துள் ஒடுங்கும். அப்பால் நனவுநிலையில் ஆருயிர் தனித்து நிற்கும். அதன்பின் திருவருளோடு சேர்ந்து சிவனாகும். முன்பு திருவடியை அடைவதற்கு ஏதுவாகவும், துணையாகவும் நின்றுதவிய கருவிகள் யாவும் இந்நிலையில் ஆருயிரை விட்டு நீங்கிவிடும். அதன்பின் அவ்வுயிருக்கு யாவும் சிவனின் அருளால் கிடைத்துவிடும்.

**மா**யையின் மயக்கமான உலக பந்தபாசங்கள் திருவருளால் அறுந்துபோகச் சிவப்பேரின்பம் வந்து சேரும். அதன்பின் ஆருயிர் சிவநினைவாகயத்திகழும். அதன்பின் திருவருளின் ஆதிக்கத்தால் ஆருயிர் திருவைந்தெழுத்தை இடையறாது எண்ணினால் பொறி புலன்களைச் சிவன் அடக்கியருள்வான். அதன்பின் ஆருயிர் சிவனிடம் அடைக்கலமாகும். இந்நிலை சாக்கிரதுரியமாகும். இந்நிலையில் சிவபெருமான் அம்மையுடன் சேர்ந்து பெருங்கூத்தாடுகிறான். இதுவே அகக்கூத்தாகும். இவ் அகக்கூத்து சொல்லுலகைப் பற்றியது. இதுபோல பொருளுலகு பற்றிச் சிவபெருமான் திருவாலங்காடு, திருத்தில்லை, திருக்கூடல், திருநெல்வேலி, திருக்குற்றாலம் ஆகிய ஐந்து இடங்களில் திருக்கூத்தாடுகிறான். இத்திருக்கூத்து சிவயநம என்ற திருவைந்தெழுத்தின் சாரமாகும்.

**க**ருவுற்ற நாள் முதலாக வளர்ந்து காலம் நிறைவடையும் பொழுது உயிர் பிறக்கிறது. பிறப்பால் ஏற்படுவது தான் இவ்வுடல். ஆருயிருக்குச் செவ்வி வாய்த்ததும் சிவபெருமான் சிவகுருவாக எழுந்தருளி வந்து திருவைந்தெழுத்தாகிய வரத்தை அருள்வான். அப்போது ஆருயிர் கலப்பு நிலையை அடையும். அதன்பின் ஆருயிர் திருவடியில் அடங்கி இருவரும் ஒன்றாகி நிற்பர். இக்கலப்புத் தேனும்பாலும் கலப்பதை ஒக்கும். ஆருயிரின் பேருறக்க நிலையாகிய சீவதுரிய முதல் சிவதுரியம் ஈறாக நிலைகள் பத்தாகும். இப்பத்து நிலைகளையும் ஆருயிர் சிவபெருமானின் திருவடியில் தங்கியிருக்கும் போது நிலை பத்தும் அப்பால் நிலையொன்றுமாகப் பதினொன்றையும் நீக்கி ஆருயிர் இன்புற்றிருக்கும். பரம், சீலம் இவை இரண்டுக்கும் மேல் பரமம். அப் பரமத்திற்கு மேல் பரம் பரன். பரநனவு, பரக்கனவு இவ் இரண்டும் ஆருயிரின் பிறப்பை நீக்குவன. அதற்கு மேல் நந்தியிருந்தருள்வான்.

**எ**ப்போதும் இன்பவடிவினனாக இருப்பவர் பரமசிவன். சக்தி, பரநாதம், பரவிந்து, சதாசிவம், ஈசன், அரன், அரி, அயன் என்னும் ஒன்பது நிலையுள் நிற்பதும் சிவனே. இது பரநிலையாகும். இந்நிலையை எய்திய ஆருயிரும் இப்பெயர்களைப் பெறுவர். ஏழுவகையான உலகங்களும், பிறப்புக்களும் மாயாகாரியப் பொருட்களின் கலப்பென்றும், அவற்றுடன் ஆருயிர் கலந்திருப்பது





மெய்யுணர்வுக்கு ஏற்றதன்று என்பதை அறியாமையை உடையவர்கள் அறியமாட்டார்கள். உடல் அழியக்கூடியதென்றும், உயிர் பல பிறப்புக்களை எடுக்கக் கூடியது என்றும் அறியாமையை உடையோர் அறியமாட்டார். அவற்றை அறியச் சிவபெருமானைத் தொழ வேண்டும். பற்றற்ற மனதால் ஆராதித்தல் வேண்டும். திருவைந்தெழுத்தை முறைப்படி ஓதுதல் வேண்டும். அதற்குத் துணைபுரியும் சிவனது திருக்கோலங்களை மனதில் இருத்த வேண்டும். கல்வியறிவால் நற்றவநான்மை ஒழுக்கப்படி வாழ்ந்து வந்தால் அன்னையாகிய திருவருளம்மை அதை அறிவாள். அன்னை அறிந்தால் சிவபெருமான் அதை உணர்ந்து கொள்வான். அதனால் திருவடியின்பம் வந்தமையும்.

**ப**ல்வேறு விதமான பெறுமதிக்க ஆபரணங்களை அணிவதால் உடல் பூரிக்கிறது. மனம் மகிழ்கிறது. எல்லோரும் போற்றுகின்றனர். அவ் அணிகலன்களை அணியின் வேறுபாட்டுடன் காணும் போது பொன்னைப் பற்றிய எண்ணம் உருவாகாது. பொன்னைப் பற்றி ஆராய்ந்தால் ஆபரணத்தைப் பற்றிய எண்ணம் வராது. அதுபோல உடலையும் கலன் முதலியவற்றை ஆராயும் போது உயிரைப் பற்றிய எண்ணம் தோன்றாது. உயிரைப் பற்றி ஆராய்ந்தால் உடல் கலன்களைப் பற்றிய எண்ணம் எழாது. தேக்கம் மரத்தின் ஒரு பகுதியில் இருந்து சிற்பி ஓர் அழகு மிக்க யானைப் பொம்மையைச் செய்கிறான். அந்த யானைப் பொம்மையின் பேரழகைச் சிந்தித்தால் அந்த யானை செய்யப்பட்ட மரத்தின் நினைவு வராது. மரத்தைப் பற்றிச் சிந்தித்தால் யானையைப் பற்றிய எண்ணம் வராது. அதுபோல சிற்றின்ப மயமான உலக இன்பங்களை நினைத்தால் மெய்ப்பொருளான சிவபெருமானின் நினைவு வராது. மெய்ப்பொருளான சிவபெருமானை நினைத்தால் உலக இன்பங்கள் எதுவும் நினைவுக்கு வராது. அருஞ்சைவர் மெய்கள் என்று சொல்லப்படும் முப்பத்தாறு தத்துவங்களையும் உணர்ந்து கொண்டால் முற்றும் கற்ற நூலைப் போன்ற நிலை உண்டாகும். பின்பு நூல் தேவையில்லாத நிலை ஏற்படும். இந்நிலையில் ஆருயிரின் அறிவு சுட்டறிவாகவும். சிற்றறிவாகவும் இருக்கும். அந்நிலையில் ஆருயிர் அறிவுமிக்கதாக மாறும். அதனால் ஐந்து மலங்களும் நீங்கும். மலங்கள் நீங்கிய ஆருயிரைச் சிவன் தனது திருவடியில் சேர்த்துக் கொள்வான். துரிதமாகிய மேல் நிலையில் காணப்படும் மேல்நனவு, மேற்கனவு, மேலுறக்கம், மேற்பேருறக்கம், மேலோடுக்கம் என்ற ஐந்து நிலையையும் திருவருளால் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போது ஒலியாகிய நாதம் திருவருளால் தூமாயையில் இருந்து தோன்றும். அதுபோல மேனிலையும் தோன்றும். அப்போது போதம் ஒடுங்கும். போதம் ஒடுங்கியதும் சிவபெருமான் தோன்றுவான். ஆருயிர்கள் திருவருளால் ஐந்து மலங்களையும் நீக்கிச் சிவனை நாடிநிற்பதே துறவாகும். அதைத் தூய்மை தெளியக்காண்டல், சுத்தி, புரிவு என்பர். இந்நிலையை அடைந்ததும் சிவபெருமானிடத்து நாட்டம் அதிகரிக்கும்.

**இ**ருபத்தைந்து மெய்களே ஆருயிரின் உடலாகும். மூலப் பகுதியும், உணர்வு மெய்யும் நிலையில்லாதவை. திருவடியை அடைவதற்குக் கருவிகளான தூமாயை ஐந்தும் திருவருளால் ஆருயிரின் அறிவிற் காணப்படல் வேண்டும். அவ்வாறு காணப்பட்டால் தான் இவற்றில் வேறு





என்றும், இவற்றால் தனக்குப் பயன்கள் ஏதும் இல்லையென்றும், இவற்றின் மேல் நிலையே உய்யும் நிலை என்பதும் விளங்கும். இவற்றை அருளால் உணர்ந்த உயிர் தூய்மையடையும். நாதத்தைக் கடந்து அந்த நாதத்தை இயக்கும் சிவபெருமான் நாதப்பிரான் எனப்படுவன். ஆருயிருடன் பிரிவின்றி ஒன்றாகக் கலந்து நிற்கும் பருவுடல், நுண்ணுடல், முதலுடல் ஆகியவற்றை ஆருயிரை விட்டு அகற்றுவதற்காகச் சிவகுருவாகச் சென்றருள்வன்.

## முக்குண நிர்க்குணம்

**மு**க்குணங்களில் ஒன்றான சாத்துவிகம் அமைதியான குணமாகும். அது நனவாகும். இராசதக் குணம் கனவாகும். தாமசக் குணம் உறக்கமாகும். இம் மூன்று குணங்களும் அழிந்து அருட்குணமாக மேலோங்கி நிற்கும் நிலை நிர்க்குணமாகும். இது உலகினை மறந்து, உடலினைத் துறந்து சிவனே கதியென்று திருவருளில் ஆழ்ந்து நிற்கும் நிலையாகும்.

## அண்டாதிபேதம்

**ஒ**ன்றோடு ஒன்று மாறுபட்டு நிற்கும் அண்டங்கள் பலவாகும். அவ்வண்டங்களில் உள்ள கடல்கள் ஏழு. சிவபெருமான் இவ்வண்டங்களையே இருக்கையாகக் கொண்டு வீற்றிருந்தருள்கிறான். அவனையும் அண்டங்களையும் பிரிக்க முடியாது. அண்டங்களைத் தனது இருக்கையாகக் கொண்டு அமர்ந்திருக்கும் சிவபெருமான் அத்தன், அருளோன், ஆண்டான், ஆசான் ஆகிய ஐந்து வடிவங்கள் எடுத்து ஆருயிர்களுக்கு அருள்புரிகிறான். முப்பத்தாறு மெய்களுக்கு அப்பால் அழிவில்லாது நிற்பவன் சிவபெருமான் இத்தத்துவங்கள் அளவில்லாத அண்டங்களை விட எட்டு மடங்கு அதிகமானவையாகும். சிவன் சாவாமருந்தாவான். சாவா மருந்து என்பது அமிழ்தமான சிவமெய்யாகும். இது தூமாயையில் ஐந்து நிலைகளிற் காணப்படுவது. இந்த ஐந்து மெய்களையும் உணர்த்துமெய் என்பர். புருடனுடன் தூமாயை மெய்கள் ஐந்தும் கூடி ஆறாகும். இவ்வாறும் துரியாதீதத்திற் செயற்படும். இவை மிகவும் நுண்மையானவை. அதனால் இவற்றை அருவம் என்று கூறுவர். தூமாயை ஏழும் ஆசான் மெய்யும் சேர்ந்தால் எட்டும் உறக்கத்தின் போதே செயற்படும். ஆருயிர் கருவிகளுடன் கூடாத நிலையைக் கேவலம் என்பர். சிவபெருமான் மாயாகாரியக் கருவிகளைப் படைத்தருளியபோது ஆருயிர் அதனூடாகச் செல்லும். அதனால் ஆருயிர் சகல நிலையை அடையும். திருவருளால் புலம்பு நிலையைத் துறக்கும் போது ஆருயிர் சுத்தநிலையை அடையும். இந்நிலை நனவினை எய்தும் அப்பால் நிலையாகும். இவற்றுடன் கலந்து நிற்கும் ஆருயிர் தன்னை வேறாகக் காண்பது உயிர்க் காட்சியாகும். ஏழிற்பரை சிவனது வடிவம் எனக் காண்பது அருட்காட்சியாகும். யான் என்ற நிலை அகன்று செருக்கற்றுச் சிவபெருமானின் பெருநிறைவிற் கலத்தல் சிவக்காட்சியாகும். ஒருபோதும் சினங்கொள்ளாது வாழ்ந்து கொண்டு சிவபெருமானை நினையுங்கள். திருவருளின்





துணையுடன் சிவனைப் போற்றுங்கள். அதனால் செருக்கென்ற அகங்காரம் அகலும். திருவருள் வந்துசேரும்.

## நின்மலாவத்தை

**எ**ண்ணம், செயல், சொல் யாவும் தூயநிலையடைவதே நின்மலாவத்தையாகும். இந்நிலையை ஊமைக்கிணறு என்பர். இந்நிலையில் ஐந்துறுப்புக்களும் அடங்கும். இந்நிலையில் ஆருயிர் திருவடியில் ஒடுங்கும். பூதங்கள் ஐந்து. இவ் ஐந்து பூதங்களையும் இயைந்து இயக்கும் கடவுளரும் ஐவராவர். ஐம்பூதங்களில் ஒன்றான ஆகாயம் ஏனைய நான்கையும் இயக்கி அதற்கு மேல் விரிந்து நிற்கிறது. இக்கடவுளர் ஐவரும் உயிரினத்தவராவர். திருவடியை அடைந்து அங்கு பேரின்பமாக வாழும் உரிமை ஆருயிர்களுக்கு மட்டுமே உள்ளது. அதனால் ஆருயிரை மைந்தன் என்பர். உடல் மெய் இருபத்து நான்கும் ஆள் ஒன்றுமாக இருபத்தைந்தும் சார்ந்தவிடத்து ஆருயிர் என்றும் பெயர் உண்டு. கடவுளைச் சார்ந்தபோது பேருயிர் என்று சொன்னபோதும் அது சிவனின் அடிமையாகிறது. உயிர் நீங்கிய பின் ஆன்மா என்ற பெயர் இல்லாது போய்விடும். ஆருயிர் உடலுடன் கூடித் தொழிலில் ஈடுபடுவது உதயமாகும். இது நனவு மழுங்கலாகிய தொழிற்குறைபாடாகும். கனவும், கருவிகளும் ஒடுங்குதல் தொழிலின்மையாகும். ஆருயிர் சிவநினைவுடன் சிவனடியில் சேரும். அது திருவடியில் மூழ்கி இன்பவடிவிணனாக என்றும் இருக்கும்.

**ஆ**ருயிர் திருவருளால் மேல் நிலையை அடையும். அதனால் திருவடியில் உறைந்து சிவ நிறைவடையும். இது ஆருயிர் சிவனுடன் வேறறக் கலந்து நிற்கும். இந்நிலையில் எல்லாப் பொருட்களும் ஆருயிரின் அகத்துள் ஒடுங்கும். அதனால் எல்லாப் பொருட்களுள்ளும் ஆருயிர் விரவிநிற்கும். அப்பொழுது முப்பத்தாறு மெய்களும் திருவருளால் அகலும்.

**உ**லையிற் காய்ச்சிய இரும்பு தீவண்ணமாகத் திகழும் உலையை விட்டு அவ்விரும்பு எடுக்கப்பட்டால் பழையபடி மாறும். அவ்வாறு மாறிய போதும் கையில் பட்டால் சுடும். இதனை வாதனை என்பர். அதுபோல ஆருயிருக்கு அகக்கலன், புறக்கலன், அகப்புறக்கலன் ஆகிய முத்திறக் கலன்களும் சிவகுருவின் திருவருளால் முற்றாக நீங்கிய போதும் கருமத்துருவு என்ற பசை அறாது. பெரும் மறை திருவைந்தெழுத்தாகும். அது இரண்டுவகைப்படும் ஒன்று 'நமசிவய' மற்றொன்று 'சிவயநம' இவ்வெழுத்துக்களால் தோன்றும் சிவத்தோற்றம் முதல் திருவுருவத்தோற்றமாகும். அதுதான் ஆதியான திருவுரு. அதுவே ஐந்தொழிற் திருவுரு. கால் மணிவயிறு, தோள், முகம், முடி என்பன முறையே சிவயநம என்பதாகும். இத்திருக்கோலத்துடன் சிவபெருமான் எழுந்துவந்து அருள்வன். இந்நிலையில் ஆருயிரின் உடல், கலன், கருவிகள் யாவும் முற்றாக அகலும். அவை அகன்றதும் 'ஆனஅமலாதீதம்' என்ற பிணிப்பில்லாத நிலை கைகூடும். இந்நிலையில் சிவபெருமான் அருளை முழுமையாக அள்ளி அருள்வான். சிவன்





தேனாகவும், அம்மை பாலமிழ்தாகவும் ஆருயிரின் நெஞ்சில் உறைவர். தேன் என்பது அறிவாகும். பால் ஆற்றலாகும். உறைவு அன்பாகவும் இருந்து தித்திக்கும். இவை முறையே அறிவு, ஆற்றல், அன்பு என்பனவாகும்.

**தூ**ய நனவு நிலைக்கு ஆருயிர் உட்பட்டால் அது உலகியற் பொருட்கள் அனைத்தையும் ஒதுக்கி விட்டு திருவடியில் ஒடுங்கிச் சமாதி நிலையை அடையும். காதலை இருவருக்கிடையில் உண்டாக்கி அவர்கள் அன்பாக வாழ்ந்து திருவடியை அடையும் நோக்கை உண்டாக்கச் சிவபெருமான் ஆண்பெண்ணான இருவடிவங்களில் ஒருவடிவமான அன்னை அத்தன் வடிவம் கொண்டான். அதனால் ஆருயிர்கள் ஆண் பெண் என இருவுருப் பெற்றன. என்னையும் அவ்வடிவத்திற்குட்படுத்தி ஒடுக்கிக் கொண்டான். அதுவே அருட்கோலமாகும். ஆருயிர்கள் இருவினைகளின் பயனாக மாறிமாறிப் பிறந்து துன்பப்படுகின்றன. இவ்வாறு மாறிமாறிப் பிறந்திறந்து வருந்தும் உயிர்களின் துன்பத்தைப் போக்கவே சிவபெருமான் விரும்புகிறான். ஆருயிர்கள் அனைத்தும் இன்பத்தைப் பெறவேண்டும் என்பதே அவனது பெருவிருப்பாகும். ஐம்புலன்கள் என்ற மதயானைகளைத் திருவருளால் அடக்கி உயிர் என்ற திரியைத் திருவடி உணர்வு என்ற தீயால் கொழுத்திச் சிவபெருமானை இடையறாது நினைத்து வந்தால் இவ்வுலகத்திற்குச் செல்லும் வழி திறக்கும்.

**ஆ**ருயிரின் நெஞ்சு என்ற அரங்கில் சிவபெருமான் திருக்கூத்தை இடையறாது செய்து வருகிறான். அவனது திருவடி ஆடிய கால் என்று சொல்லப்படுகிறது. அதனால் உயிர்ப்பு அசைக்கப்படும். அவ்வுயிர்ப்பை நடுநாடி வழியாகச் செலுத்திச் சிவநினைவுடன் இருப்பார்க்கு சிவனது உடுக்கொலி நன்றாகக் கேட்கும். முற்பிறப்பிற் செய்த நற்றவப் பேற்றால் சிவபெருமானைத் திருவருளின் துணையால் கண்டுகளிக்க முடியும். அதற்காக உண்மையான நிலை அவனுக்கு அடிமையாதல் ஆகும் மக்களாகப் பிறந்ததன் பெரும் பயன் திருவடியை அடைதலே. அதற்காக அவனின் அடிமை நான் என்று உணரவேண்டும். அதுவே மேலான அறிவாகும். அதுவே மெய்யுணர்வும் ஆகும். திருவருளால் தன்னை மறந்து செயலற்று இருப்பது சமாதி நிலையாகும். இந்நிலை செயலற்றிருந்து சிவ இன்பத்தைப் பெற்றுக் களிப்பதாகும். அவர்களது செயல்கள், தொடர்புகள், அறவுகள் யாவும் சிவனில் உறைந்திருப்பதால் அவர்கள் செய்வது அவர்களுக்குத் தெரியாது. இந்நிலையில் மலங்கள் அகலும், எண்பெரும் குற்றங்களும் மறைந்துவிடும். சிவநினைவைத் தவிர வேறு எந்நினைவும் அவருக்கு இராது. ஆருயிரின் திருவருள் வீழ்ச்சியடையும். திருவடி கண்களுக்குப் புலனாகும். இந்நிலையில் அவ்வாருயிருக்கெனச் சிவனால் அருளப்பட்ட கட்டும், வீடும் தோன்றும். அதை ஆருயிர் உணர்ந்து கொள்ளும். அதனால் ஆருயிருக்குச் சிவனின் சோதி தோன்றும். ஒளியும், இருளும், பரையும் இவற்றை விளக்கும் நடப்பாற்றலாகிய பரையும், ஆருயிரும் அருளாலேயே உணரமுடியும். ஆருயிர் தலையளிப்பையும், அருளையும், தெருளையும் கடந்து திருவடியை அடையவைப்பது திருவருளாகும். அத்திருவருளே சிவப்பேரின்பமாகும்.





**பே**ரின்பப் பெருவாழ்வைத் தருவது திருவருளாகும். இந்நிலையை அடைந்த ஆருயிர் சமாதியடைந்து உடல் அழிவது, உயிர் அழிவில்லாதது, உடல் அழிய உயிர் திருவடியை அடையும் என்று உணர்ந்து திருவைந்தெழுத்தைக் கணித்துத் திருவடியை அடையும். தாம் நினைத்தபடி தீயசெயல்களைச் செய்து இன்பமடையும் கயவர்களுக்கு மெய்யுணர்வைத் தரும் நூல்கள் தேவை. நினைவுடன் அவன் நினைவாகவே இருக்கும் மெய்யடியார்களுக்கு மெய்யுணர்வைத் தூண்டும் நூல்கள் எதுவும் தேவையில்லை. நாம் அறியாமை வசப்பட்டுள்ளோம் அதிலிருந்து நீங்கிச் சிவனை அடையவேண்டும் என்று நினைப்பவர்களுக்கு மெய்யுணர்வு நூல்கள் கட்டாயம் தேவை. ஆருயிர் சதசத்தாகும். இதனைச் சார்பி என்றும் கூறுவர். ஆருயிருக்கு மெய்ப்பொருளான சிவபெருமானுடன் கூடுவதற்கு உரிமை உண்டு. அதனால் உயிரைச் சத்து என்பர். அதுபோல உயிர் மாயையுடன் கூடுவதால் அதற்கு அசத்து என்ற பெயரும் உண்டு. அதுபோல ஆருயிர் முற்றுநர்வுள்ள சிவத்துடனும், மாயை மலங்களுடனும் நிற்கும். அதனால் ஆருயிருக்குச் சிவசித் என்ற பெயரும் உண்டு. பேருறக்கத்தில் ஆருயிர் தூயதாக இருக்கும். அதுபோல உறக்கம், கனவு, நனவு என்ற மூன்று நிலைகளிலும் ஆருயிர் தூய்மையானதாக இருக்கும்.

**ஆ**ருயிர் தாமாக எதையும் அறியமாட்டாது. அறிவித்தாலே அது அறிந்து கொள்ளும். சிவபெருமான் ஆருயிர்களை ஆட்கொள்வதற்காகத் திருவருளைத் திருமேனியாகக் கொண்டிருக்கிறான். சிவனது திருமேனியிற் காணப்படும் திருவுறுப்புக்கள் திருவருளாற்றலாகும். உயிர்ப்பு திருவருளின் விழைவாகும். அன்பு, அறிவு, ஆற்றல் ஆகிய மூன்றும் ஆருயிருக்கு என்றும் உள்ளவையாகும். இவற்றை விளக்கவே சிவபெருமான் மாயையிலிருந்து நுண்ணுடல் பருவுடல்களைப் படைத்தருளினான். அதன்பின் ஆருயிருடன் கூட நின்று அவ்வுடல்களால் வரும் பயன்களை ஆருயிருக்குக் கொடுத்தருள்கிறான். இந்த நிலைதோன்றாத் துணையாக நிற்கும் நிலையாகும். அதனால் ஆருயிருக்கு உடலின் மீது பற்று உண்டாகிறது. இவையாவும் ஆருயிரை நன்னெறிப்படுத்தவே சிவன் செய்கிறான். அதனால் இவை ஆருயிரின் அடிமைச் செயல்களாகும்.

**தொ**ழில், விழைவு, அறிவு ஆகிய மூன்றும் பேருயிராகச் சிவபெருமானுக்கும் சிற்றுயிரான ஆருயிருக்கும் தொன்மையில் இருந்து இயல்பாகவே இருக்கிறது. சிவபெருமானுக்கு அவை தாமாகவே விளங்கும். ஆருயிர்களுக்குச் சிவபெருமான் விளக்கினால் தான் விளங்கும். சிவபெருமானும் திருவருளும் வேறானவை அல்ல. அதனால் திருவருளால் அவை விளங்கும். ஆருயிருக்குத் திருவருள் இயைந்து இயங்கினால் தான் அவை விளங்கும். இதற்கு மாயாகாரியக் கருவிகளும் ஒளியும் உறுதுணையாக இருந்து விளங்கும். நிலைபேறில்லாத, நிலைபேறுள்ள காரியங்களில் சிவபெருமான் கலப்பால் ஒன்றாக நின்றருள்கின்றான். இந்நிலை சிவனுக்கும் ஆருயிருக்கும் தொன்றுதொட்டே உள்ளது. இத்தன்மையால் சிவன் யாவையும் தானாகியும், பொருட் தன்மையில் அவன் வேறாகவும் நின்றருள்கிறான். அத்தன்மையால் அவன் யாவையும் அல்லனும் ஆகிறான். அதனால் அவனைத் திருவருளால் உணர்ந்தால் அவன் உயிருக்குள் உயிராக உடனாய் நின்றருள்வான். வேறு எவற்றாலும் அவனை அறியமுடியாது. ஆருயிருக்கு





உலகப் பற்றை ஊட்டுவதும் வனப்பாற்றல். அப்பற்றுக்களை அகற்றுவதும் வனப்பாற்றலே. வனப்பாற்றலாக பராசக்தியும் ஞானசக்தியும் ஆருயிருக்கு மெய்யுணர்வை உண்டாக்கிச் சிவபெருமானிடத்தில் அன்பு பூணவைக்கும். அதை உணர்ந்ததும் ஆருயிர் பற்றுக்களை நீக்கும். அதன்பின் ஆருயிர் திருவடியை அடையும். அருளால் ஐந்து மலங்களையும் நீக்கியோர் திருவடியை அடைந்து இன்புறுவர். ஏனையோர் பூமியில் பிறந்து இறந்து பிறந்து கொண்டிருப்பர். ஆருயிர்கள் தூமாயை, தூவாமாயை என்னும் இரு மாயைகளிலும் பொருந்திச் செயலாற்றும். அதுபோல ஞானசக்தியோடு பொருந்தி அறிவு விளங்கப்பெறும். பூமியில் துய்ப்பனயாவற்றையும் துய்க்கும். இவையாவும் திருவருளின் துணையால் நடைபெறும். செருக்குடன் செய்யும் பாவச் செயல்களையும், சிவ நினைவுடன் செய்யும் மெய்யுணர்வுச் செயல்களையும் அருளால் அறிந்து கொள்ள முடியாதவர்கள் அறியாமையுடைய அறியாதவராவர். தீயும், அதன் வெப்பமும் பொருளால் ஒன்றாக இருப்பினும் பண்பால் அவை இரண்டாகும். அதுபோலச் சிவபெருமானும் திருவருளும் ஒன்றாகும். ஆனால் அத்திருவருள் ஆற்றலான சக்தியாகும். அவ்வருள் மெய்பொருளோடு இருக்கும். அப்போது அது ஒன்றாகும். ஆணவக் கொடிய இருளாகும். அவ்விருளோடு மாயை, கன்மம், மாயேயம் என்னும் மலங்கள் கூடும். அம்மலங்களை அகற்றுவதற்காகத் திருவருள் அந்த இருள்மலங்களோடு கூடி மலங்களை அகற்றும்.

**சூ**ரியன் உதித்ததும் தாமரை முதலிய நீர்ப்பூக்கள் பொலிவுடன் மலரும். ஏனைய மொட்டுக்கள் மலர்வதற்குத் தயாராகும். சில உதிரும், இவையாவும் பூக்களால் நிகழ்த்தப்படுவதில்லை. சூரியனின் செயலால் நடைபெறுகின்றன. அதுபோலத் திருவருட்கலப்பால் அவன், அவள், அது என்றும் மூவகைப் பேதமும் தோன்றி அழிகிறது. இதுபோல உலகங்கள் யாவும் காலகதியில் அழியும். இவையாவும் திருவருளாலே செயற்படுத்தப்படுகின்றன. ஆருயிர்களுக்கு உலகுடன் உண்டாகும் ஒற்றுமை வேற்றுமைகளை பிறழ்வு என்பர். பேதம், அபேதம், பேதாபேதம் ஆகியவேறுபாடுகள் திருவருளால் நடைபெறுவன. அதுபோல ஆருயிர்களின் இயற்கை அறிவும், கல்வி அறிவும், செயற்கை அறிவுகளும் திருவருளாலேயே ஏற்படுகின்றன. அத்துடன் நாதமும், இந்நாதத்தைத் தொழிற்படுத்தும் பரநாதமும் திருவருளால் ஆவனவே. செயற்கைக் கருவிகளால் செய்யப்படும் பொம்மைகளை அமைத்து அவற்றைப் பொறிகளின் உதவியால் இயக்குவது பொய்க்கோலமாகும். படைப்பு முதலிய தொழில்களும் அயன், அரி, அரன் ஆகியோரால் நிகழ்வனவும் இத்தகையனவே ஆருயிருக்கு உடல், கலன், உலகு முதலியவற்றை உள்ளத்தாற் படைத்து அவற்றுடன் ஆருயிரை இணைத்து இயக்குவது திருவருள். அவ்வாறே அறிவைக் கொடுப்பதும் திருவருளே செவ்வி வாய்த்ததும் பிரிப்பின்றிப் பிரிவிப்பதும் திருவருள். பின் ஆருயிரைத் திருவடியிற் சேர்ப்பிப்பதும் திருவருள். எல்லாவற்றையும் செய்வது திருவருளாகும். மண்முதல் ஒலியீறாகச் சொல்லப்பட்ட முப்பத்தாறு மெய்களின் விளக்கங்களைக் கேட்டோ, வாசித்தோ, அறிந்த பின்பு அந்த நூல்களில் உள்ள பற்றைத் துறக்க வேண்டும். அவை எனக்கு உரியன அல்ல. அவை இறைவன் தந்த இரவற்கருவிகள் என்ற நினைப்பு உறுதியாக மனதில் இருத்தல் வேண்டும்.





ஆண்டவன் தந்த அறிவைப் பயன்படுத்தித் திருப்பணிகளைச் செய்ய வேண்டும். அவ்வாறு வாழ்வோன் உரவோன் ஆவான். இவன் அடிமை நிலைக்குட்பட்டுத் திருவடியை அடைவான்.

**ந**ன்னெறி நான்கையும் முறைப்படி பின்பற்றி ஒழுகுபவரை சீலத்தார், நோன்பினர், செறிவினர், அறிவினர் என்று சொல்லப்படுவர். அவர்களே சாரணர், சித்தர், சமாதியர், சாத்தியர் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் திருவடியை முறைப்படி சார்ந்தவராவர். அதனால் இவர்களைச் சாத்தியராகிய அறிவியர் மெய்ஞ்ஞான தத்துவ சாத்தியர் என்று சொல்லப்படுகின்றனர். இவர்கள் இறவாத இன்பத்தினராவர். சிவன் ஒருவன். ஆருயிர்கள் கணக்கில் அடங்காதவை. அவன் கலப்புத் தன்மையில் தான் என்றும், அவன் என்றும் வேறுபட நில்லாது நீற்றடியார் என்றும் நீர்மைபோல சிவத்தர் என ஒற்றுமையாகக் கூறுவர். அதனால் இந்நிலையில் உள்ளவர்கள் இருவேறு வகையாக உள்ளனர். இது கல்வி கற்றாரையும் கற்ற கல்வியையும் தானும் வேறு என எண்ணுவதை ஒக்கும். இவர்கள் அருளால் மேம்பட்டவராவர். திருவருளால் ஒருவர் எவ்வாறு தன்னை உணர்ந்து கொள்வாரோ, அப்படியே முதல்வனான சிவபெருமானையும் உணர்ந்து கொள்ள வேண்டும். அவனே உலகின் சிறந்த தலைவன். ஆருயிர் தனது தலைவனை உணர்ந்து கொண்டால் அவன் மிகவும் மகிழ்வுடன் உடனே தோன்றியருள்வன். இதுவே தலைப்படுதல் என்பதன் மெய்ப்பொருளாகும்.

**ஆ**ருயிர் திருவருளின் துணையுடன் தலைவனான சிவனைச் சாருதல் வேண்டும். அவ்வாறு சாராது விட்டால் சிவபெருமானும் சார்வதற்கரிய நிலைமையை உடையவனாவான். எதையும் நினைத்துக் கவலை கொள்ளாது நன்னெறி நான்மை வழியே சென்றால் சிவன் காட்சி தருவன். அதன்பின்பு ஆருயிரும் பேருயிரும் இருசுடர்களாக இயைந்து இயக்கும் உண்மை புலப்படும். அத்தகைய சிவபெருமான் என்னைத் தனது திருவடியில் அமர்த்தியுள்ளான். சிவனை நினைத்து மகிழும் மெய்யடியார்கள் அவனது திருவடியை அடைந்து பேரின்பமடைகின்றனர். சிவபெருமானின் திருவடியை நினையாதவர் பெருந்துன்பப்படுகின்றனர். தன்னுடலில் குடிகொண்டிருக்கும் உயிராகிய தம்மைத் திருவருளால் அறியாதவர்கள் சிவபெருமானையும் அறியமாட்டார்கள். இவர்கள் மீண்டும் மீண்டும் பிறப்பர். உடம்புடன் கூடி வாழும் உயிர் பெரும் இன்பங்களை அனுபவிப்பதாகப் பேசி இன்புறுவர். அப்படியான இன்பம் உண்டா? இன்பம் உண்டென்றால் இவ் இன்பத்தை அனுபவிப்பது உயிரா? உடலா? அவற்றை ஆராயாது விட்டுவிட்டு துன்பங்கள் யாவற்றையும் நீக்கிப் பேரின்பத்தினைத் தந்தருளும் சிவபெருமானை முழு மனதுடன் துதியுங்கள். சிவப்பணிகளைச் செய்யுங்கள். சிவப்பேரின்பம் வந்து சேரும்.

## 4. அறிவுதயம்

**தி**ருவருளால் தன்னையும் உலகின் முதல்வனான சிவபெருமானையும் அறிந்த ஆருயிருக்குப் பிறப்பு இறப்பு என்ற கெடுதல் உண்டாகாது. இத்தகைய சிவபக்தரது உள்ளத்தில் சிவபெருமான்





புகுந்து உறைந்து திருவடிப் பேரின்பத்தைக் கொடுப்பான். தொன்மையான மலங்களாலும், மருளாலும் ஆருயிர் தன்னை அறிவுள்ளவரென்று அறியாதிருந்தது. அதைத் தெரிந்த சிவபெருமான் ஆருயிர்கள் மேல் பேரன்பு கொண்டு, "ஆருயிர்களே நீங்கள் மலப்பிணிப்பால் உங்கள் அறிவையும், திறன்களையும் உணராது இருக்கிறீர்கள். அதன்பின் மாயையைச் சார்ந்ததால் மருள் கொண்டு உங்களைப் புரிந்து கொள்ளாது வாழ்ந்தீர்கள். உண்மையில் நீங்கள் அறிவுமிக்கோராவர்" என்று கூறியதன் பின் நான் எனது நிலையை உணர்ந்து கொண்டேன். அதனால் அவனது திருவடியை அடைந்து இன்புற்றிருக்கிறேன். ஆருயிருக்கு அழிவும் இல்லை. ஆக்கமும் இல்லை. சிற்றறிவுள்ள ஆருயிர்களுக்கு முற்றவுள்ள சிவபெருமானே நிலைத்த சார்பாகும். வேறு எதுவும் சார்போ உதவியோ செய்யாது. அவனைச் சாரும் வழிகளை இறைநூல்கள் விரிவாகக் கூறுகின்றன. அவற்றைக் கற்று அதன்படி வாழ்ந்து அவனைச் சார வேண்டும். அதுவே வாழ்வின் பெரும் பேறாகும். பெருங் காதலுடன் அவனது திருவடியைச் சார்ந்து நின்றால் வள்ளலான சிவபெருமான் வந்தருள்வான். அங்ஙனம் வருவது மாயாகாரியமான நிலையில்லாத உடலைப் பெற்றபோதும் சிவ நினைவுடன் வாழ்ந்து மெய்யுணர்வு அடைந்தோருக்கு அருளவே. உலகத்தவர் சிவனை நாடாது தமது அறிவு மேலானது என்று புலம்புவர். எது அறிவு, எது அறியாமை என்று பகுத்து உணரமாட்டார்கள். திருவருளால் சிவபெருமானை உணரும் ஆருயிர் திருவருளால் மேன்மையுற்று உயிர், அறிவு, அறியாமை என்பவற்றை அருளாற் கடந்து முற்றறிவு பெறும். அவ்வாறு பெறும்போது அறிவு, அறியாமை என்பவற்றை அறிந்து கொள்ளும். பேதைமையையும் புல்லறிவாண்மையையும் இரண்டினையும் கடந்து நீக்கியவனே மேலானவன். அவனே நன்னெறி நான்மை வழியில் வாழ்பவன். பொறிகளை நீக்கியவன். சிவவுணர்வின் ஒடுங்கி நிற்பவன். நல்லறிவுள்ளவர்களின் நெஞ்சம் அருள்வெளியாகும். அந் நெஞ்சம் தான் சிவபுண்ணிய அருந்தவ நிலைக்களமாகும். அந்தப் புனிதமான நெஞ்சத்துள் திருவருளம்மை சிவபெருமானுடன் எழுந்தருளியிருந்து அருள்வாள்.

**ஐ**ந்தொழில்களையும் செய்தருள்பவன் சிவபெருமான். ஆருயிர்களுக்கு வினைப்படி உடல்களை அளிப்பவனும் அவனே. அவன் தன்னை நினையாதவர்களை விட்டகன்று தூரமாக நிற்கின்றான். அன்பர்களுக்கு அருகிலிருக்கிறான். சிவபெருமானின் அருள் இல்லாவிட்டால் ஆருயிர்கள் தம்மை அறியமாட்டாது. திருவருளால் என்னை அறிந்த பின்பு என்னால் வேறு எதையும் அறிய முடியவில்லை. என்னை அறிந்தமையால் சிவநிறைவில் அடங்க முடிந்தது. சிவனும் என்னுடன் கூட இருக்கின்றான். உடலை மாயவிளக்கு என்று சொல்வார்கள். மாயாகாரியமான உடல், கலன், உலகு, ஊண் முதலிய பொருட்கள் விளக்குப் போல ஆருயிருக்குத் துணையாகவுள்ளன. அதனுடன் காணப்படும் எண்ணெய், அகல், திரி, தீ முதலியன போகநுகர்வாகவும் இருக்கின்றன. உடல் காலவரைக்குட்பட்டு அழியும். பெரும் சோதி விளக்கான சிவபெருமான் திருவடி விளக்கு. ஆருயிர்களுக்கு முற்றுணர்வினை முற்றுவிக்கும் உடம்பாகிய விளக்கு. திருவடிப் பேரின்பத்தைத் தரும் ஒளிவிளக்கு. அனாதியிலிருந்து பிறந்த எல்லா உயிர்களுக்கும் என்றும் நுண்ணுடம்புப் பிறப்பில் பிறந்தோர் ஐந்து மலங்களையும்





அகற்றியவராவர். அவர்கள் திருவருளால் தம்மைத் தெரிந்து கொள்வர். அதனால் அவர்கள் சிவபெருமானின் திருவடியை அடைந்தவராவர். இவர்களுக்குப் பிறப்புக்கள் இல்லை.

## 5. ஆறந்தம் (அறு முடிவு)

**ஆ**று வகையான ஈறும் ஒரு பெறு முடிவாகும். அவை முறையே மறைமுடிவு, முறைமுடிவு, ஒலிமுடிவு, அறிவின் முடிவு, செறிவின் முடிவு, உணர்த்துவதன் முடிவு எனப்படும். இம்மறை முடிவு செந்தமிழ் மறை முடிவாகும். நாதத்தின் முப்பத்தாறாவது மெய் ஓசை முடிவாகும். யோகாந்தம் என்பது நிலைக்களத்திருவுருவச் சேர்க்கை முடிபேயாகும். இவற்றைச் செயற்படுத்துவது திருவருளாகும். இவற்றை திருவருளால் அறிந்து கொண்டவர் புனிதமான தூயவராவர். மலமற்றவராவர். இவற்றைச் சிவகுருவின் மூலம் அறியாதவர்கள் பிறப்பு இறப்பையும் உலகின் ஒடுக்கத்தையும் தோற்றத்தையும் அறியாதவராவர். தானான வேதாந்தம் என்பது பயிற்சியால் யான் அதுவானேன் என்பதாகும். தான் என்ற சித்தாந்தம் திருவருளால் பாவனப் பயிற்சியைக் கடந்து தன்நாமம் கெடுவதாகும். சிவனுடன் ஆருயிர் அருளால் ஒன்று சேரும். அவ்வாறு சேரும் போது மனம், ஓசை முதலிய ஐம்பொறிகளும் மெய்களாகும். நூற் பயிற்சியால் ஆருயிர் தத்துவ உண்மைகளை உணரும். உணர்ந்தபின் அவற்றில் ஏற்பட்டிருந்த பற்றுக்கள் யாவும் அகன்றுவிடும். தூமாயை, தூவாமாயை இரண்டும் விலகும். ஆருயிர் புனிதமடையும். சுத்தமடைந்த ஆருயிர் திருவடியை அடையும். அயன், அரி, அரன், ஆண்டான், அருளோன், பரவிந்து, பரநாதம், முப்பத்தாறு மெய்கள் யாவும் நீங்கும். அப்போது ஆருயிருக்கு உண்மை புலனாகும். அதன்பின் அருளால் நாதாந்தத்தைக் கடக்கும். அகத்தே இருந்த காரிருள் அகல அருளுணர்வு தோன்றிப் பரவும். அப்போது நல்லறிவு வந்து சேரும். இயமத்தையும், நியமத்தையும் கைக்கொண்டவர் பின் அவ்விரண்டையும் கடந்த சமாதிநிலையை அடைவர். அதனால் அவர் சிவபெருமானுடன் பொருந்துவர்.

**நீ**க்கல் முதலிய ஐந்து கலைகளும், கொழுப்பு முதலிய ஏழுவகைப் பொருட்களும் மாயையில் ஒடுங்கும். இவ்வாறு ஒடுங்குவதை ஆராய்தலும், ஆராய்ந்து தெளிவடைதலும் காலாந்தமாகும். காலாந்தம் தெளிவடைதலல்லாமல் வேறு ஒரு வகையாலும் குறிக்கப்படும். அந்தம் நீங்கல் என்பன திருவருள் ஒளிக்குள் அமைத்தல் வேண்டும். அங்ஙனம் அமைப்பவர்களுக்குச் சிவபெருமான் பேரருள் புரிவான் அவை மந்திரம், தந்திரம், தெளிவு, உபதேசம், ஞானம் என்பனவாகும். திருவருளாற்றலே முறையும், மறையுமான ஆகமங்களும் வேதங்களுமாகும். அவ்வழியில் நின்றொழுகல் தந்திரமாகும். சகல குற்றங்களையும் நீக்கி மேன்மையுறச் செய்வது 'சிவசிவ' என்ற மந்திரமாகும். சிவகுருவின் திருவார்த்தை உபதேசமாகும். ஞானக்கலை என்று சிவபெருமானைச் சொல்வர். ஆன்றோரைப் பின்பற்றலை ஆகாரம் என்பர். அவ்வொழுக்கத்தை மீறாதிருக்கும் பேரன்பை நேயம் என்பர். இவ்விரண்டும் காலாந்தமாகும். இந்நிலையில் மௌனமாக இருந்து சிவனை நினைப்பவன் பெருந்தகைவனாவன்.





**ஆ**ருயிர் பேருயிரினுள் ஒடுங்குவதைச் சமாதிநிலை என்பர். இந்நிலையை ஆருயிர் அடைவதைக் காலாந்தம், நாதாந்தம், யோகாந்தம், போதாந்தம், சித்தாந்தம் என்று கூறுவர். சிறப்பாகச் சித்தாந்தத்தைக் காட்சி, காணப்படும் பொருள், காண்போன் என்ற முத்தி முடியும் எத்திறமும் நீங்காது கொள்ளும் நிலையுமாகும். இவையாவும் சிவபெருமானில் ஒடுங்கும். ஞாதுரு என்று சொல்லப்படும் காண்போனும், அவனது அறிவும் சிவனின் திருவடியில் ஒடுங்கும். அவ்வாறு ஒடுங்கியதும் மோனம் கைகூடும். இதுவே சிவானந்தமாகும். மெய்கலைகள் பதினொன்று, காலாந்தம் பதினேழு. கலையோடு முற்றாகக் கலந்து நிற்பது நாதமாகும். இச் சிவகலைகளைச் சிவகுருவே அருள்வார். ஆருயிர்களை உடைமைப் பொருளாகக் கொள்ளும்போது அவ்வாருயிர் அருளுயிராக மாறும். இதனால் திருவருளம்மை ஆவுடையாள் என்று அழைக்கப்படுவாள். சிவபெருமான் அவளைத் தன்னகத்துள் அடக்கிக் கொள்வான். அதன்பின் அவன் தேவர்களையும் உடைமைப் பொருளாக்கிக் கொள்வான். அவன் பெயர் சீர்நந்தியாகும். அதன் பின் அவன் சிவகுருவாக வந்து திருவடியைச் சூட்டியருளுவான். அத்தகைய முதல்வனை இடையறாது ஏத்தி வணங்க வேண்டும்.

**சி**வபெருமான் படிப்படியாக முப்பொருள் உண்மைகளை அருளிச் செய்துள்ளான். அவ்வுரை அரனுரை ஆகமமாகும். அந்த ஆகமம் சமய உண்மைகளை வகுத்துக் கூறுகிறது. அகச்சமயம், அகப்புறச்சமயம், புறச்சமயம், புறப்புறச்சமயம் என நான்காகும். பின் ஒவ்வொன்றும் அவ்வாறாக இருபத்து நான்காகவும் வகுக்கப்பட்டுள்ளது. இவையாவும் சமயப்புறம் என்றதனால் பெறப்பட்டன. இவையாவும் மாயை, மாமாயை என்னும் மாயாகாரியப் பகுப்புக்குள் அடங்குகின்றன. இம் முப்பத்தாறு மெய்களுக்கும் அப்பாற்பட்டது வேதாந்த சித்தாந்த மெய்மை. திருவருளால் ஆராய்ந்தால் வேதாந்தம் என்பது அகரம், உகரம், மகரம் ஆகிய மூன்று பதங்களை உடையன. இவை முறையே அருவும், உருவும், மருவும் ஆகும். அருவால் சிவபெருமானும், உருவால் வனப்பாற்றலாகிய அம்மையும், ஆதியும், மருவும் என்பதனால் மலமும், அம்மலத்தால் பிணிக்கப்பட்ட ஆருயிரும், அப்பிணிப்பை விலக்குதற்காகச் சிவபெருமானால் படைக்கப்பட்ட வினை மாயைகளும் குறிக்கப்பட்டுள்ளன. அகர உகர மகரங்களே ஓங்காரமாகும். இம் மூன்றும் ஆருயிருக்கு அறிவை விளங்கும் துணைக் கருவிளாகளும். ஆருயிர் பிரணவம் என்று சொல்லப்படும். ஓங்காரத்தை அடைத்து சிவபெருமானை ஒட்டியறிந்து நிலைத்த இன்பத்தைப் பெறும். அறிவின் முடிவே ஞானம். செறிவின் முடிவு யோகாந்தம். ஓசை முடிவாகிய நாதாந்தம் இன்பமாகும். பொதுவாக அறியப்படும் பொருள் ஞேயம். முடிந்த முடிவான திருவடியின்பம் முத்திரை மோனமாகிய திருவடியில் மூழ்குதலாகும். வேதாந்தப்படி உயிர் நுகர்வு நிலை ஏழாகும். இவ் ஏழும் ஆருயிரை விட்டு அகல ஓசைப் பிணிப்பில் உள்ள பற்று அறும். பற்றறுத்ததும் ஆருயிருக்கு நன்மை பயக்கும் தொம்பதம் ஏற்படும். தொம்பதம் என்பது ஆருயிரைக் குறிக்கும் நீ என்பதாகும்.

**தி**ருவடியுணர்வில்லாத சிலர் வடமொழி வேதம் தான் உண்மையானது என்று நம்பி வேள்விகளைப் புரிந்து அவத்தவஞ் செய்கின்றனர். அவ்வேள்வி தாழ்வானது மட்டுமல்ல





எப்பலனையும் தராதது. நாதத்தைத் தெய்வமாகக் கொள்வோர் நாதாந்த போதத்தை எய்துவர். அவர்கள் பதமுத்தியடைவர். பலர் திருவருளின் துணையால் சிவபெருமானை உள்ளன்புடன் வணங்குவர். அவ்வாறு வணங்கிச் சீர்மை எய்துவர். இவர்களுக்கு நாதாந்த முத்தியும் சித்தியும் எளிதாகக் கிடைக்கும். அண்டங்கள் அனைத்தையும் கடந்து அப்பால் அருளால் நோக்கினால் அங்கு ஒரு பேரொளி தோன்றும். அதற்கு உள்ளே ஓர் அறிவுப் பேரொளி உண்டு. அவ்வொளி திருச்சிற்றம்பலமாகும். இவ் அறிவுப் பேரொளியே பராசக்தியாகும். அவளைச் சிவபெருமான் திருமேனியாகக் கொண்டவன். அவன் கலப்பால் ஒன்றாகி நினறபோதும், பொருள் தம்மையால் வேறுபட்டும் நிற்கின்றான்.

**சி**வபெருமான் தங்கும் கோவில் ஆருயிரினது வெள்ளையுள்ளமாகும். அங்கு காணப்படும் குறிகளும், அடையாளங்களும், திருவுருவங்களும், பிறவும் சிவபெருமான் அன்பர்களின் உள்ளத்திற்கு எழுந்தருளிவரும் வாயில்களாகும். முதல்வனான சிவபெருமானை நாடாதவர்கள் ஆருயிரின் உண்மைத் தன்மையையும் நாடியறியமாட்டார்கள். நல்வினையையும் தீவினையையும் நாடமாட்டார்கள் தூமாயை, தூவாமாயை என்ற இரண்டையும் நாடார். சிவனையும் நாடார். உலகச் சிறற்றின்பங்களையே பெரிதாக மதித்து வாழ்ந்து பிறப்புக்கள் எடுத்துத் துன்பப்படுவர். தத்துவமசி என்னும் மறை தத், துவம், அசி எனப் பிரிந்து மூன்று சொற்களாக விளங்கும். இம் மூன்றினுள் தொம்பதம் நீ எனப்பொருள் தந்து ஆருயிர்களைக் குறிக்கும். பாசம் எப்போதும் ஆருயிர்களைப் பற்றி நிற்கும். அப்பாசம் அகன்றதும் நிலைபெற்ற பதி அறிவின் முடிவு நிலையாய் இயற்கைப் பேரறிவாகத் திகழும். இது தற்பதமாகும். ஆருயிரும் பேருயிரான சிவனும் இரண்டறக் கூடும் கூட்டத்தை அசி குறிக்கும். ஆருயிரைக் கொண்டே திருவருள் மலத்தை அகற்றுவிக்கும்.

**வே**தாந்தம், சித்தாந்தம் என்ற இரு பெரும் திருநெறிகளும் சிவபெருமானால் ஆருயிர்களுக்கு பெருவாழ்வை அமைப்பதற்காக வகுத்தவையாகும். ஏனைய நாதாந்தம், பேதாந்தம், யோகாந்தம், கலாந்தம் என்ற நான்கும் சிறப்பானவை அல்ல. அத்துடன் பெரும் பயனைத் தருவனவும் அல்ல. அதனால் அவற்றை அவம் என்பர். சித்தாந்தத்தைக் கைக்கொள்வதால் சீவன் முத்தியாகிய பிணிமையின்மை கைகூடும். அதனால் முத்தியாகிய திருவடிபேறும் கைகூடும். அதனால் அவரை முத்தி சித்தித்தவர் என்பர். சித்தாந்தமும் வேதாந்தமும் சிவனையே ஏற்றுள்ளது. சிவனைப் பரமன் என்றும் சொல்வர். சீவன் என்று சொல்லப்படும் ஆருயிர் நெஞ்சமான திருச்சிற்றம்பலத்திலும் வேதாந்த சிந்தாந்த செந்நெறிகளைக் காட்டும். இந்நிலையை அடைந்தவர்கள் சிவனது திருவடியை அடைவர். மெய்யுணர்வையும் நினைவையும் உருவாக்குவது சிவனது திருவுருவாகும். வேதங்களும் ஆகமங்களும் இறைவனை உணரச் செய்யும் மெய்மையான நூல்களாகும். இவ்விரு நூல்களின் உள்நின்று இறைவன் உணர்த்தத் திருவருள் கை வந்த மெய்யடியார்கள் வாயினால் மொழிந்து ஆருயிர்களைச் சிவமயமாக்குவர்.





**சி**றப்புயிராகிய ஆவி பராநந்தி எனப்படும். பராநந்தியின் அருளால் ஆருயிர் உறக்கம், அருள்நிலை உறக்கம், சிவநிலை உறக்கம் ஆகியவற்றை அடையும். இவையாவும் ஆருயிர் அனுபவிக்கும் இன்பங்களாகும். காலாந்தம் என்பது நாதாந்தம் கலையந்தம் என இருவகைப்படும். கலையந்தம் ஐந்தாகும். இவ்வைந்திற்கும் சிவபெருமானே முதல்வனாவான். அதனால் அவனை பஞ்சாந்தகனாம் என்று கூறுவர். அந்தங்கள் மாறுபட்டவை அல்ல. வேதாந்தத்தையும் சித்தாந்தத்தையும் கைக்கொண்டு ஒழுகினால் யோகாந்தம் கைகூடும். அந்நிலை ஏற்பட்டால் திருவடியை அடையலாம். மெய்யுணர்வு பெற்ற ஆருயிருக்கு ஐந்து மலங்களும் அற்றுப் போய்விடும். மலங்கள் அகன்றதும் ஆருயிர் அப்பால் நிலையை அடையும். அந்நிலையில் ஆருயிர் தன்னையும் சிவனையும் காணும் பேற்றைப் பெறும். ஆருயிருக்கு முதல்வனான சிவனைத் திருவருளாற் காணலாம். அப்போது ஆருயிர் அறிவாகிய திருவடியில் அடங்கும். இந்நிலையே மருளற்ற வேதாந்த சித்தாந்த அருள்மாண்பாகும். அதுவே நான் என்னும் ஆழ்ந்த நினைவினால் அவனே தானாகி நிற்கும் நிலையைச் சோகம் என்பர். வேதங்களையும் ஆகமங்களையும் சிவபெருமானே அருளிச் செய்தார். வேதங்கள் தான் உண்மையான வேதாந்தமாகும். ஆகமங்கள் சித்தாந்தங்களாகும்.

## ௬. பசுபதி பாசம் வேறன்மை

**ஆ**ருயிரை அறிவென்றும், பேருயிரை அறிவுக்கே அறிவு என்றும் கூறுவர். இவ்விரண்டும் தொன்மையிலேயே அறிவுக்கு அறிவாக விளங்கும் இயற்கை அறிவாகும். ஆருயிரின் அறிவினை விளங்கவிடாது தடைசெய்வது தொன்மையில் இருந்து ஆருயிரைப் பற்றி நிற்கும் பாசமாகும். பாசநீக்கத்திற்காகவே ஆருயிருக்கு மனிதப் பிறப்பு சிவபெருமானால் வழங்கப்பட்டது. பாசத்தால் கட்டுண்ட உயிரைப் பசுவென்பர். நீர்நிலைகளில் உள்ள நீரின் தூய்மையையும் தெளிவையும் மறைக்கும் பாசியைப் போல, ஆன்மாவின் அறிவையும், அன்பையும் மறைத்து நிற்கும் பாசத்தை ஆணவம் என்பர். பிரமன் முதலாகச் சொல்லப்படும் எண்ணிக்கையில்லாத பலகோடி உயிர்களையும் பசுவென்றே கூறுவர். பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையும் குறிக்கும். மலம் அகன்றால் பசுவாகிய ஆன்மா பதியாகிய இறைவனை அடையும். மலங்களான பாசப்பிணிப்பிலிருந்து விடுபட ஆருயிர் மூன்று விடயங்களைக் கைக்கொள்ள வேண்டும். அவை இன்பமும், பொருளும், அறனுமாகும். இம் மூன்றையும் கைக்கொள்ள நானெறியில் வாழவேண்டும். அவ்வாறு வாழ்ந்தால் முதலில் நோன்பும், அதன்பின் செறிவும் கைகூடும். அதனால் அறிவு மேலோங்கும். அறிவு வளரவளர மெய்யுணர்வு ஏற்பட்டுத் திருவடியை அடையும் நிலை உருவாகும். ஆணவ மலத்தை அகற்றுவதற்காகவே கன்மம், மாயை ஆகிய பாசங்களை ஆருயிருக்குச் சிவபெருமான் கொடுத்தருளினார். ஆருயிர்களை மெய்யுணர்வினால் விட்டகன்ற பசுபாசங்களை மெய்யுணர்வு பெற்ற ஆருயிர் ஏற்றுக் கொள்ளாது பதி, பசு, பாசம் என்பன பலவாக விரியும். அவ்வாறு விரிவடைவதைத் தடுக்க நந்தியெம்





பெருமானை வணங்கி அவரின் நினைவாக இருக்கும் சைவநற்சீலர்கள் இவற்றை நந்தியின் அருளால் விலக்கிவிடுவர்.

**சி**வபெருமான் அருட்சிவலிங்கமாவார். என்றும் சிவபெருமானைச் சார்ந்திருக்கும் பசு அருட்சிவக் கொழுந்தின் முன் வலிமை மிக்க ஆனேறு போல அசைவின்றி நிற்கும். அவ் ஆனேற்றின் பின்புறமாகக் காணப்படும் பலிபீடம் ஆருயிரிடத்து அருளால் விலகி யான் என்ற செருக்கடங்கி நிற்கும். இவை மெய்யுணர்வுள்ளவர்க்கே புலனாகும்.

**ப**தி, பசு, பாசம் என்ற முப்பொருளை நிலைவேறுபாட்டால் பிரித்து ஐம்பொருட்களாக அருஞ்சைவர்கள் அமைத்தனர் அதுவே சிவயநம ஆகும். பதியாகிய சிகரத்தின் நிலை வேறுபட்டதால் உகரமும் நகரமும் என விரிந்து மூன்றாயின. மலம், கன்மம், மாயைகளின் தொழில் மறைத்தலும், மறைத்தலுக்குத் துணை புரிதலுமாகும். அதனால் அவற்றை மகரம் என்று ஒன்றாக்கினர். யகரமாகிய ஆருயிர் வகர நகரங்களுக்கு நடுவால் ஒன்றாயின. வகரம் தாயாகவும், நகரம் செவிலித்தாயாகவும் சொல்லப்பட்டன. பதி, பசு, பாசம் என்ற மூன்றும் மீநிறைவு வீழ்நிறைவு இடைநிறைவு என்ற வகையில் ஒன்றினுள் ஒன்று அடங்கிவிட்டது. திருவைந்தெழுத்தை இடையறாது ஓதி வந்தால் நன்னெறி நான்மை வழியாகச் சிவபெருமான் பசு பாசம் என்பவற்றை நீக்கியருள்வான். இறைவனான பதியும் ஆருயிரான பசுவும், அப்பசுவைப் பிணித்த பாசமும் அருளால் நீங்கும் போது திருவடிப் பேறு கிடைக்கும். இத்திருவடிப் பேற்றை வழங்குபவன் சிவபெருமான்.

**ஆ**ருயிர்கள் மூவகைப்படும் அவை ஒருமலம், இருமலம், மும்மலம் ஆகிய மலப்பிணிப்பால் உருவானவை. மலங்களால் துன்பப்படும் ஆருயிர்களுக்கு அம்மலங்களை நீக்க வேண்டும் என்று சிவபெருமான் திருவுள்ளம் கொண்டு, அவற்றிற்கு வேண்டிய உடல், கலன், உலகு, உணவு முதலியவற்றைப் மாயாகாரியமாகப் படைத்தருளினான். அவற்றினூடாக ஆருயிர்கள் மெய்யுணர்வைப் பெற்றுத் தன்னை வந்தடைய வேண்டும் என்ற நல்லெண்ணத்தாலேயே இவற்றை மாயையிடமிருந்து படைத்து உயிர்களுக்கு அளித்துக் காக்கின்றான். அதற்காக நுண்மைத்தன்மை மிக்க ஐந்தொழில்களைச் செய்தருள்கிறான். அந்த நுண்மையான ஐந்தொழில்களால் ஆருயிர்கள் மலப்பிணியில் இருந்து விடுபடுகின்றன. விடுபடும் ஆருயிர் தூய்மையடைந்து திருவடியைச் சேர்கிறது. நுண்ணிய ஐந்தொழிலை விந்து, நாதம், சக்தி, சிவம், பரம் ஆகிய ஐந்தாலும் ஆக்குவிக்கிறான். இவ்வைந்து தொழில்களையும் சிவபெருமான் அருவம் நான்கு, அருவுருவம் ஒன்று, உருவம் நான்கு ஆகிய ஒன்பது உருவங்களை எடுத்துச் செய்தருள்கிறான். இவ்வுருக்கள் முறையே பரமசிவம், பராசக்தி, பரநாதம், பரவிந்து எனவும் ஐம்முகன் எனவும், ஈசன், உருத்திரன், மால், அயன் எனவும் கூறப்படுகிறது. படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல் ஆகிய நான்கு தொழில்களையும் சிவபெருமானில் இருந்து தோன்றிய திருவருளே செய்கின்றது. இத்திருவருளே ஆருயிர்களை மலப்பிணிப்பிலிருந்தும் விடுவிப்பது சிவபெருமான் ஆருயிர்களுக்கு வேண்டிய கருவிகளை மாயையில் இருந்தே படைத்தருளினான்.





பதி, பசு, பாசம் என்பவற்றின் உண்மைகளை அருளால் உணரும் போது பாசத்தில் இருந்து பசு பிரிந்து சென்றுவிடும். அதனால் திருவடியைப் பெறும். பதியான சிவபெருமான் ஆருயிர்களை மல நீக்கம் செய்வதற்காகப் பாசத்தை உண்டு பண்ணி. ஆருயிரை இருவினைகளுக்குட்படுத்துவான். அவற்றின் பயனாக வரும் இன்பதுன்பங்களை அனுபவிக்கச் செய்வான். காலங்கழிய நற்பாசமாகிய மறைப்பாற்றல் வந்துசேரும்.

**ஆ**ருயிர் நான் என்ற முனைப்புடன் செயற்படுவது ஆணவத்தின் முனைப்பாலயாகும். அவ் ஆணவத்தை நீக்க ஆருயிர் மாயைக்குட்பட்டு இருவினைப் பயன்களையும் அனுபவிக்கும் போது ஆருயிரின் மீது பேரன்பு கொண்ட சிவபெருமான் திருவடியை அடையும் வழிகளை அருளிச் செய்வான். இதனை உபாயமானதாகும் என்பர். நடப்பாற்றல் ஆருயிருக்கு வினை மாயைகளைக் கூட்டுவது மட்டுமன்றி ஆணவம் நீங்குவதற்காக தூயவனாகுவதற்கும் வழிவகை செய்யும். அழுக்கடைந்த ஆடைகளைத் தூய்மைப்படுத்த மேலும் அழுக்கான பொருட்களான சாணி, உவர்மண் என்பவற்றை அழுக்கான ஆடையுடன் சேர்த்து அழுக்கை நீக்குவது இதற்கு ஒப்பாகும். பாசத்துடன் சேர்ந்திருக்கும் ஆருயிர் முதல் பரமாகும். ஆருயிருக்குப் பாசம் பெரும் சுமையாகும். அப்பாசத்தை நீக்குவதற்காகப் பதி ஆருயிருடன் கலக்கும் போது பதியும் பசுவாகிறது. அருந்தவத்தவர்கள் ஆலமர் கடவுளிடம் அருளால் வந்தனர். வந்து தமக்கு மெய்யறிவை உணர்த்துமாறு கேட்டு வணங்கினர். ஆலமர் கடவுள் அவர்கள் கேட்டவற்றை உணர்த்திச் சிவதீக்கையும் செய்தருளினார். அவர், அவர்களது உடலைத் தீண்டி தீக்கையிட்டபோது அவர்கள் தம்மை ஆலமர் கடவுளுக்கு அர்ப்பணம் செய்தனர்.

## 7. அடிதலையறியும் திறங்கூறல்

**கா**லாகிய வழியையும், சிரசாகிய தலையையும் மெய்யறிவுள்ள நூல்களைக் கல்லாதார் அறியமாட்டார். அவர்கள் வீணர்களாவர். கால் என்பது திருவருளாகும். அனைத்திற்கும் மூலகாரணனாகத் திகழ்பவன் சிவபெருமான். அவனே திருவடியைத் தரும் சிவஞானமுமாவான். அவனே சிவத்தலைவன். சிரம் என்பதில் உள்ள சிகரமும், வழி என்பதில் உள்ள வகரமும் கூடினால் ‘சிவ’ என்றாகும். அச் சிவ என்பது செந்தமிழ் மறையாகும். இவற்றை உணராதவர்களே தலைகால் புரியாது தடுமாறுபவராவர். ஆருயிரின் உச்சியில் உள்ளது தலை. அது அடி என்ற கால் வழியாக உள்ளது. இவற்றை மெய்யுணர்வில்லாத மூடர் அறியமாட்டார். தலையடி என்பது ‘சிவ’ என்றும் செந்தமிழ் மறையாகும். இவற்றை உணர்ந்தோர் சிவமாவர். அகநிலை ஒளிக்கு அப்புறமாக அதன் மேல் விளங்குவது அறிவுப் பெருவெளி. அங்கு சிவபெருமான் வீற்றிருந்து அருள்கிறான். அவனது பேரொளியை வர்ணிக்க முடியாது. அவனது திருப்பெயரை உச்சரிக்கவும் முடியாது. அவனை எண்ணும் போது ஏதாவது ஓர் உருவம் மனதுள்த்தோன்றும். அவ்வுருவை அவனின் அருளாலேயே அறிந்து தெளிவடைய முடியும். அவ்வாறு தெளிவடைந்த ஆருயிர் திருவடியைச் சென்றடையும்.



திருச்சிற்றம்பலம்

**சி**வபெருமானது திருவடிமிக்க மேன்மையுடையது அது வேண்டியவற்றை வேண்டியளவு தருவது. அதனால் அதனைப் போற்றுங்கள். அதை இமைப்பொழுது கூட மறவாதீர்கள். அவனைப் போற்றுங் காலங்கள் நான்காகும். அவை காலை, நண்பகல், மாலை, நள்ளிரவு என்பனவாகும். இந்த நான்கு வேளையும் பற்றுக்கள் இன்றித் தொழுது அவனது திருவடியை அடையுங்கள். அவனது திருவடியை மனதில் பதித்து அதன் நினைவாகவே வாழுங்கள். அடியேனின் தலையில் சிவபெருமான் தனது திருவடியைச் சூட்டியருளினான். சூட்டியதும் மலங்கள் யாவும் நீங்கின. அவை நீங்கியதும் திருவடியுணர்வான சிவஞானம் மனதை நிரப்பியது. அதனால் திருவடியை அடைந்தேன். பெற்றோர் தமது பிள்ளைகளை பேணி வளர்ப்பதைப் போலச் சிவபெருமானும் தனது பிள்ளைகளான ஆருயிர்களின் கன்மவினைக்கேற்ப அவற்றிற்கு ஏற்ற வகையில் அருள்புரிகிறான். வினைகளுக்கு ஈடாக வரும் துன்பம் என்ற நோய்க்கு தக்க மருந்தை அவன் ஆருயிர்களுக்குக் கொடுத்தருள்கிறான்.

## ௮. முக்குற்றம்

**கா**மம், வெகுளி, மயக்கம் என்ற முக்குற்றங்களே ஆருயிரை வருத்தி வினைகளுக்குட்படுத்தி ஓயாத பிறப்பை உண்டு பண்ணுகின்றன. திருவருளால் இம் மூன்று குற்றங்களையும் விலக்கியவர் பிறப்பு இறப்புக்களில் இருந்து விடுபடுவர். முக்குற்றங்களையும் அருளால் நீக்க வேண்டும். அதை நீக்கினால் திருவடிப் பேரின்பம் வந்தமையும். அவ் இன்பத்தைப் பெற்றதும் 'ஓம்' என்ற பிரணவ ஒலி நீங்காது ஒலிக்கும். சிவஒளி உண்டாகும்.

## ௯. முப்பதம்

**பி**றப்புக்கும் இறப்புக்கும் உட்பட்டுத் துன்பங்களை அனுபவிக்கும் ஆருயிரைத் தொம்பம் என்பர். தொன்பம் என்பதும் துவம் என்பதும் ஒரு பொருளையே குறிக்கும். தவம் என்பது நீ என்ற பொருளை உடையது. அந்நீ, தத்பதமாகிய அது என்னும் சிவபெருமானை அருளாற் குறிப்பதாகும். இதன் பொருள் நீ அதுவாகிறாய் என்பதாகும். திருவருளால் ஆருயிர் தன் அறிவை விளங்கிக் கொள்வதற்கு உடலில் உள்ள மெய்கள் தொண்ணூற்றாறும் உதவும். அக் கருவிகளின் வேறுபாடுகள் பல. இவையனைத்தும் கருவிகளே தவிரக் கர்த்தா அல்ல. மெய்க்கூட்டங்களுக்குக் கர்த்தா சிவபெருமான். அவற்றை விளக்குவது திருவருளான அறிவாற்றலாகும். தற்பதம் சிவனென்றும், தொம்பதம் ஆருயிர் என்றும் தனித்தனியாக நிற்பது. அசிபதம் சேராத இடத்து அசிபதம் சேர்தல் என்பது ஆருயிர் சிவத்தைச் சார்ந்தது சிவமாக நிற்கும் நிலை. அந்நிலையில் திருவருள் வீழ்ச்சியுறும் இதனை நேரிழையாள் பதம் என்பர். இந்நிலையில் சிவபெருமான் வேறுபாடு இன்றிக் கலந்து நிற்பன். ஆருயிரான அணுவும் அவ் ஆருயிரைச் சிவத்துடன் சேர்க்கும் திருவருளும் பொருந்தி நின்றால் சிவபெருமான் ஆருயிருடன்





கலந்தருள்வான். அந்தநிலை பால், தேன், அமுது கலந்த இன்சுவையாக இனிக்கும். அவ்வினிப்பு நெடுங்காலம் நீடித்த போதும் தெவிட்டாது. பால், தேன், அமுது என்பன முறையே ஆருயிர், பேருயிர், சீரருள் எனக்கொள்க. தொம்பம் திருவருளை நம்பி வாழும் ஆருயிராகும். தற்பரம் என்பது ஆருயிரைச் சிவத்துடன் சேர்த்துவைக்கும் திருவருளாகும். ஆருயிரும் பேருயிரும் ஒன்றாகக் கலந்து தோன்றும் நிலை சிவமாகும். இதைச் சிறப்பு நிலை என்றும் சொரூப நிலை என்றும் கூறுவர். ஆருயிரின் வயது ஐம்பதைக் கடந்தபோதும் முப்பொருள் உண்மையை அது உணரவில்லை. அவர்கள் சிவத்தை அடைய முப்பதத்திடையே உயிர்ப்பைச் செலுத்தி செம்பரநிலையை அடைய வேண்டும். அது சிவனுடன் கூடும் யோகமாகும். ஆருயிர் அறிவு, அருள் நிலையால் நழுவப்பெறுமானால் மேற்பாட்டை அடையும். அப்போது பொறிகள் புலன்கள் ஓசை முதலியவற்றைக் விலக்கிவிட்டு நிற்கும். இந்நிலைவிட்ட நிலையாகும். இந்நிலையில் மேற்பாடு ஐந்தும் அகலும். அது அகன்றால் சிவபெருமான் வெளிப்பட்டு அருள்வான்.

## 10. முப்பரம்

**உ**டம்பின் அகத்தே தோன்றி வலம் சுழித்து எழும் மண்டிலங்கள் மூன்று உண்டு. அவை தீமண்டிலம், ஞாயிற்று மண்டிலம், திங்கள் மண்டிலம் என்பனவாகும். இம் மண்டிலங்களுக்குத் தலைவனான சிவபெருமானின் திருவருளால் ஏற்றுப் பொருந்தி இன்புற்றிருப்பார். குண்டலினியை உயிர்ப்புப் பயிற்சியால் எழுப்பி அதனுடன் கலந்து நின்று உணர்த்திருப்பர். சிவபெருமான் அவ்வவ் உயிர்களின் செவ்விக்கு ஏற்ப நந்தியுடன் நேரில் எழுந்தருள்வன். அவன் கன்றைத் தேடும் தாய்ப் பசுவைப் போன்ற துடிப்புடன் எழுந்தருளி வந்து ஆட்கொண்டருளுவன். அதன் பின் எண்குணவிளக்காக ஒளிவிட்டருள்வான். மெய்யுணர்வுள்ள செந்தமிழ் மறையை வெளிப்படுத்தியருளும் பகவனாராவர். அவனது திருவடியுணர்வால் பேரின்பப் பேறு நம்மை வந்தடையும். உலகப் பற்றுக்களை ஒழித்துச் சிவபெருமான் மீது பற்றுக் கொள்க. அதுவே திருவடியை அடைதற்குரிய வழியாகும். அவ்வாறு பற்றி நிற்கும் ஆருயிர் சிவப்பரமடையும். அவ்வாறு பற்றியே ஆருயிர் சிவபெருமானுடன் இரண்டறக் கலந்து இறவா இன்பமடையும். அவ்வாறானவர்களைப் ‘பரம்பரம்’ என்று அழைப்பர். திருவடியை அடைவதே ஆருயிருக்கு மேலான இன்பமாகும். இவற்றைத் திருவடியுணர்வால் திருவருள் உந்துவதால் அறிவதே நிலைபெற்ற மேலான அறிவாகும். நனவின்போது உழைப்பு, உணர்வு, உவப்பு, ஆள், மருள் என்ற ஐந்தும் செயற்படாது அகன்று விட ஆருயிர் தனித்து நிற்கும். அந்த நிலையைப் புலம்பு நிலை என்பர். அந்நிலையில் உணர்வுக்குள் உணர்வாகச் சிவபெருமான் கலந்து நிற்பான். அப்போது சிவபெருமானது திருவடியைத் திருவருளால் நினைவிற்கொள்ள அவ்வாருயிர் தற்பர சிவமாகத்திகழும். திருவருளால் ஆருயிர் தனது உண்மை நிலையை உணரும். இதைத் தற்காண்டல் என்பர். இது மலம் அகன்ற தூய நிலையாகும். அதனால் இதைத் தூயம் என்றும் நின்மலாவத்தை என்றும் கூறுவர். இந்நிலையில் ஆருயிர் சிவபெருமானிடம் இணைந்திருப்பதால் அதன் உணர்வுகள் உணர்ச்சிகள் யாவும் அகன்றுவிடும்.





## 11. பரலட்சணம்

**ஆ**ணவத்தால் பிணிக்கப்பட்ட ஆருயிர் கிடப்புநிலைக்குட்பட்டுத் திருவருளால் உண்மையை உணர்ந்து மெய்யுணர்வடையும். கிடப்பு நிலையில் ஆருயிர் அறியாமையில் இருந்தது. உண்மையை உணர்ந்தமையால் ஆருயிர் மல நீக்கமடைந்து தூய்மையாகும். தூய்மையடைந்த ஆருயிர் பரவுயிர் என்றும் சிறப்புயிர் என்றும் பெயர் பெற்றுத் திருவடியை அடையும். அவன் சிவஞானபோத வடிவினன். திருவருளின் துணையால் சிவஞான போதத்தின் உண்மைநிலையைப் புரிந்தோர் திருவருட் புண்ணியச் செல்வராவர். பேருறக்கம் நீங்கி அப்பால் நிலையை அடைந்தவர்களுக்கு ஓர் அரிய ஒழிவு உண்டாகும். அவ்வொழி வினைபெற்று ஐந்துவகையான மன்றங்களுள் ஒன்றான பொன்னம்பலத்தில் ஐந்தொழில் அருட்கூத்தை இயற்றும் சிவபெருமானை ஓங்கார வட்டத்துள்ளே காண்பவர்களுக்கு எவ்விதமான குற்றங்களும் இருக்கமாட்டாது. ஓங்கார வட்டத்துள் ஐந்தெழுத்தும் உண்டு. இவை ‘சிவயநம’ என்னும் ஐந்தெழுத்தாகும். இதை ஆராய்வோர் பெரும் பயனடைவர். சித்தர்கள் குழுஉக்குறியாகக் கந்தகத்தைச் செம்மையென்றும், இரசத்தை வெள்ளை என்றும் சொல்வது மரபாகும். செம்மையின் முன் வெண்மை மாற்றமடைவது போல அம்மைக்குரிய சிவபெருமானுடன் ஆருயிர் பிரிவின்றிக் கலக்கும். அதனால் ஆருயிரின் நுகர்வுணர்வு அடங்கிவிடும். தூய்மையான இயற்கை அறிவொளிப்பெருவெளி பாழ் எனப்படும். அப்பாழில் சிவமான பொன்மலை வெளிப்பட்டு விளங்கும். அப் பொன்மலையுடன் ஆருயிர் தன்னை மறந்து கலப்புறும். சிவபெருமான் ஆருயிர்களுக்கு அறிவு விளங்குவதற்காக ஊழி, ஊழ், உழைப்பு, உணர்வு, உவப்பு, உழைப்பது, உழல்வு என்ற மெய் ஏழை அருளியுள்ளான். இவை முறையே காலம், நியதி, கலை, கட்டுணர்வு, சிற்றுணர்வு என்பனவாகும். இவற்றால் வரும் சுட்டுணர்வும், சிற்றுணர்வும் ஒடுங்கும். இவையே தத்துவம் கெடுதல் என்பதாகும். இவை கெட தூமாயையும், தூவாமாயையும் வேறாகும். இவற்றைத் தொடரவிடாது அடக்கி அழிக்க வேண்டும். திருவருளால் இவற்றை அடக்கப் பரமசிவன் வெளிப்பட ஆருயிர் அவனுடன் கலந்து இன்புறும்.

**எ**ன்னை அறியும் அறிவு எனக்கில்லாதவாறு ஆணவம் மறைத்திருந்த நிலையில் சிவபெருமான் மாயாகாரிய உடம்பைத் தந்தருளினான். நந்தியின் அருளால் நான் என்னை அறிந்து கொண்டேன். அவனே என்னை அறிவுப் பெருவெளியில் நிலைப்பித்தான். அதன் பின் வெளிப்பட்ட திருவருள் ஒளியில் பேரின்ப வடிவினனான சிவபெருமான் தோன்றினான். தோன்றி எனது உயிர் தானாகத் திருவடியை அடைய அருள் புரிந்தான். நிலம், நீர், தீ, காற்று, வானம், சூரியன், சந்திரன் ஆகியவற்றைப் படைத்தருளியது ஆதிசக்தியான நடப்பாற்றலாகும். இவ் அனைத்தையும் தாங்கிநிற்பவன் சிவபெருமான். சிவமான பரனுடன் சக்தியாக பரையும் கூட நின்று அருளுவாள். அவள் பரனான சிவபெருமானின் உடலாவாள். அவள் தனது அன்பாற்றலினால் ஆதி ஆற்றல், அறிவாற்றல், தொழில் ஆற்றல், விழைவு ஆற்றல்களால்





ஐந்தொழில்களையும் விருப்புடன் நடத்துகிறாள். அது அவளது திருவிளையாடலாகும். இத்திருவிளையாடல் சிவபெருமானின் திருவுள்ளப்படியே நடைபெறுகிறது. திருவருள் ஆயுளைக் காத்தருள்வதற்காக ஆருயிருடன் உடன் நின்று காத்தற்பொருட்டு மேல், கீழ், பக்கம், மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவற்றுடன் சேர்ந்து விந்து என்ற ஒளி வடிவாக நின்று காத்தருள்கின்றது.

**அ**வ் அறிவாற்றல் பரையாகும். அப்பரை சிவத்துள் அடங்கி நிற்கும். நன்னெறி நான்மை மூலம் திருவடியுணர்வு உண்டாகும். அதற்காக விந்து ஞானம் மேலெழும். கருவிகளுடன் சேராது ஆருயிர் நிற்குமானால் அதற்கு ஏதும் விளங்காது. அதனால் திருவருள் அவற்றை விளக்கி அதன்மூலம் ஐந்தொழிலை ஆவியின்கண் புரிவதே அம்மையின் அருளாகும். உடல் ஒடுங்கும் காலத்திலும், உடல் தொடங்கும் காலத்திலும் வேறாகவே இருக்கும். அதுபோல் ஆருயிர் உடலோடு கூடியிருக்கும் போதும் அத் தன்மை வேறாக இருத்தல் வேண்டும். உடலின் அகத்தே ஆறு நிலைகள் உண்டு. இவற்றை ஆறு ஆதாரங்கள் என்பர். இவை துன்பங்களையே தரும். இவைபோன்று ஏனைய தத்துவக் கூட்டங்களும் துன்பத்தையே தருவன. அதனால் மெய்யுணர்வு பெற்றுத் திருவடியை அடைவதே நோக்காக இருத்தல் வேண்டும். திருவடியை அடையும் வரை தொம்பதமாகிய நீ என்னும் முன்னிலைப் பெயர் நீங்காது. திருவடியை அடைந்த ஆருயிர் தொம்பமாகிய நீயை விலக்கிப் படர்க்கைப் பொருளுடன் ஒன்றாகக் கலந்து அதனுள் அடங்கி, அதன் பெயரைப் பெற்று மகிழும். இதைப் பாழ் என்பர். அது பெரும் பேரொலியாகும். அதனுள் ஆருயிர் கலந்து நிற்கும்.

**ப**ழைய மறைகள் தூமாயைக்குரிய மேல் வெளியாகிய பரவானைச் சிவபெருமானின் திருவுடல் என்கின்றன. வளரும் பிறையை அறிவினை உடைய ஆருயிரின் அடையாளம் என்கின்றனர். தூமாயையைப் பொருந்தி உயிர் முழுநிலையாகிய தூய்மைநிலையை எய்தியதாகாது. ஐம்பூதங்களின் நடுவே சிவபெருமான் நின்றருள்கிறான். அதனால் தான் அவை இயங்குகின்றன. சிவனை மேரு என்பர். அத்தகைய பெருமைமிக்க சிவபெருமானைத் தமது நெஞ்சில் வைத்துப் பூசிக்கும் அருந்தவயோகிகளுக்குச் சிவனருள் வெளிப்பட்டு ஆட்கொண்டுநிற்கும்.

## 13. முத்துரியம்

**து**ரியத்தில் நனவு, கனவு, உறக்கம் என்ற மூன்றும் உண்டு. இதை ஆருயிர்த் துரியம் என்பர். சிவபெருமானை நினைத்துத் தொழுபவர்களுக்கும் கனவு, நனவு, உறக்கம் என்ற மூன்றும் உண்டு. அதைச் சிவதுரியம் என்பர். பரையிடத்தும் இம்மூன்றும் உண்டு. இதுவும் சார்ந்தவர் பொருட்டேயாகும். இவற்றை ஆருயிர்த் துரியம், திருவருட் துரியம், சிவதுரியம் என்பர். இம்மூன்றும் பேருயிரின் இனமாகும். ஆருயிரும் சிவமும் கலக்கும் இந்நிலை தொம்பத்துடன்





அசிபதம் கூடியதால் பெறப்படும். அதாவது நீ அதுவாகிறாய் என்பதே அதுவாகும். ஆருயிரானது நனவில் பேருறக்கமான துரியத்தில் நீ என்ற தொம்பமாக நிற்கும். ஆருயிரின் பேருறக்க நிலையில் உண்டாகும் நனவு, கனவு, உறக்கம் என்ற மூன்றினில் பராவத்தை முடிந்த விடயமாகும். அதுவே அந்நிலைக்குரிய நனவாகும். அதன்பின் உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் ஏற்படும். அணுவாகிய ஆருயிர் துரியத்து நான்கும், பரையாகிய திருவருட் பாட்டில் நிகழும் துரியத்து நான்கும் சிவதுரியம் என்று சொல்லப்படும் பரமா அவத்தையில் நிகழும் இரண்டையும் கூட்டி நான்கின் கலப்பையும் சேர்த்தால் அவத்தை பத்தாகும். நனவு, கனவு, உறக்கம் பேருறக்கம் என்ற நான்கும் ஆருயிர்த் துரியமாகும். இதுபோலவே பராவத்தையிலும் நான்கு உண்டு. இவற்றுடன் சிவநிலையின் போது பேருறக்கமும், உயிர்ப்படங்கலும் ஆகிய துரியம் துரியாதீதமுமாகிய இரண்டும் சேர்ந்து பத்தாகும். பத்துப் பாட்டில் பொருந்திய ஆருயிர்த் துரியம் என்றும் முப்பாடுகள் உண்டு.

**அ**வத்தை திருவடிப்பேற்றை அடையும் போது சிவகுருவின் திருவாக்கின்படி வாழ்ந்து வந்தால் திருவடியை அடையும் பேறு வாய்க்கும். துரிய நிலையாகிய அருள் நிலையில் இருங்கள். ஏனையோர்க்கு எட்டாத நிலையில் உள்ள சிவனை திருவருளால் உள்ளவாறு அறியுங்கள். அறிந்தால் அவன் வந்து கூடி மெய்யின்பம் தந்தருள்வான். ஆருயிர்கள் கனவு, நனவு ஆகிய இரண்டு நிலையிலும் மனம், புத்தி, அகங்காரம் என்னும் மூன்றும் நன்றாகத் தொழிற்படும். உறக்கத்தில் அறியக்கூடிய எண்ணம் ஒன்று உண்டு. கனவு, நனவு, உறக்கம் என்ற மூன்றும் அற்ற நிலையே துரியமாகும். அதன்பின் சிவபெருமானுடன் கலந்து நிற்கும் நிலை துரியாதீதநிலையாகும். நனவின் நனவு முதலான ஐந்து நிலைகளுள் நான்காவது நிலை துரியமாகும். மலமற்ற ஆருயிர் தூநிலைக்கண் நனவில் தனித்து நிற்கும். தானாக ஒப்பற்ற நிலையில் அது நிற்கும். அருளுடன் நிற்கும். பின் அருளோனுடன் புணர்ந்து நிற்கும். இந்நிலையில் ஆருயிர் சிவபெருமானைக் குறியாகக் கொண்டு நிற்கும். அருளோன் துரியமே சிவத்துரியமாகும். மூன்று துரிய நிலைகளிலும் தொம்பதமும் தற்பதமும் பேசப்படும். இந்நிலையில் செம்பொருளாக நின்று ஆண்டருள்பவன் சீர்நந்தியாவான்.

## 14. மும்முத்தி

**ஆ**ருயிர் பேறு துரியாதீதமாகிய அப்பால் நிலையாகும். பேறு என்பது முத்தியாகும். ஆருயிரின் செயல்கள் ஒழிந்ததும் அது அருட்செயல் வழி நிற்கும். சிவமுத்தி என்பது இயற்கை உண்மை அறிவு இன்பம் அனைத்தும் உள்ளடங்கிய பெருநிலையாகும். பிறப்பெடுத்த ஆருயிர் பிறப்பை அறுத்துச் சிறப்பாக வாழவேண்டும் என்று அறிவதே ஆவதறிவாதகும். முறையாக வழிபட்டுச் சார்பால் சிவமாகி விளங்கும் ஆருயிர் மும்மலங்கையும் அமைதி, ஆட்சி, அழுந்தல் என்னும் முக்குணங்களையும் திருவருளால் அடக்கி அகற்ற வேண்டும். அவ்வாறு அடக்கினால் ஆருயிர்ப்பேறு, அருட்பேறு, அருளோன் பேறு ஆகிய மூன்றும் வெளிப்படும். அவ்வாறு





வெளிப்பட்டதும் சிவபெருமான் ஆருயிரைச் சிறந்தவனாக்கி ஆட்கொண்டருள்வான். பொருளும், அருளும் போக்கில் மெய்ப்பொருளும் முறையே சித்தி, முத்தி, சிவம், சுத்தி எனப்படும். இவை முறையே தன்னைப்பற்றி வருவன, பிறவுயிர்களைப் பற்றி வருவன, தெய்வத்தைப் பற்றி வருவன, இவை மூவகைத் துன்பங்களையும் ஒழிப்பனவாகும். இம் மூன்றையும் தாபத்திரயம் என்னும் முத்தீ என்றும் சொல்வர். இவை அகன்றதும் சிவபெருமான் வெளிப்படுவர். அதன்பின் சமாதிநிலை ஏற்படும். அதன்பின் திருவடி இன்பம் கிட்டும்.

## 15. முச்சொரூபம்

**ஆ**ருயிரைப் பிணித்த ஆணவ மலத்தை நீக்குவதற்காக வேறு நான்கு மலங்களைச் சேர்க்க வேண்டியதாயிற்று. இது அருளால் நிகழ்வது. இம்மலங்களைச் சிவபெருமான் அகற்றியருள்வான். மலங்கள் அகன்றதும் ஆருயிரைச் சிவஞானம் வந்தடைந்து மேலோங்கும். அதனால் ஆருயிர் சிவோகம் அடையும். சிவோகம் அடைந்ததும் பந்த பாசங்கள் ஆருயிரைவிட்டு அகலும். அதன்பின் ஆருயிர் வீடுபேற்றை அடையும். மூவகையான ஆருயிர்களுக்கும் மாளிகையை ஒத்த மூன்று உடல்கள் உண்டு. அவை பருவுடல், நுண்ணுடல், முதலுடன் என்பனவாகும். இம் மூன்று உடல்களில் இருந்து முப்பத்தாறு மெய்கள் தோன்றும். இவ் மூன்று உடல்களிலும் உயிர்க்கு உயிராகக் கலந்து நிற்கும் சிவபெருமான் பேரொளிப் பிழம்பாகத் தோன்றுவன். அவனை அவனருளால் காணுதல் வேண்டும் பேரூழிக்காலத்தில் உலகம் ஒடுங்கம். அத்தகைய ஊழிகள் பல கடந்தன. ஆருயிர் அருள், அருளோன் என்ற மூன்றும் அருள்வெளியில் ஒன்றாக இணைந்தன. இம்மூன்றையும் அன்பு, அருள், அருளோன் எனவும் சீவன், பரம், சிவம் என்றும் சொல்வர். மலை முதல் மண் ஈறாகவும், யானை முதல் எறும்பு ஈறாகவும் உள்ள வேறுபாடுகளைச் சிவன் ஆருயிர்களுக்குக் காட்டியருள்கிறான். அவன் அருவாய், உருவாய், அருவுருவாய் எல்லாவற்றுடனும் கலந்து தோன்றியருள்வான். அருளே திருமேனியாகக் கொண்டு குவருவாக எழுந்தருள்பவன். மேலும் உயிர்கள் அனைத்துடனும் கலந்து அவ்வுயிராகவும் உருவாகவும் இருந்து அருள்பவன். ஆருயிர் படிகமணியின் நிறத்தையும் ஒளியையும் ஒத்தது. படிகத்தைப்போல ஆருயிரும் சார்ந்ததன் வண்ணமாக நிற்கும். ஆணவத்தைச் சார்ந்திருக்கும் போது அறியாமை உள்ளதாகவும், ஐம்புலன்களைச் சார்ந்தால் கூட்டறிவும், சிற்றறிவும் மிக்கதாக இருக்கும். அருள்வழி நின்றால் முற்றறிவு பெற்றுச் சிறப்புறும். அதனால் சிவகுரு எழுந்தருளி வந்து திருவைந்தெழுத்தை உணர்த்தியருள்வன். அதனால் ஆருயிர் முற்றறிவு பெற்றுத் திருவடியை அடையும். இதுவே ஆருயிர் சார்ந்ததன் வண்ணமாக நிற்கும் நிலையாகும். இவ் உண்மையைத் தத்துவம் அசி என்னும் மும்மறை காட்டுகிறது. உடல்மெய், உணர்வுமெய், உணர்த்துமெய்கள் மூன்றும் கழிந்துவிடும். இதை முப்பாழ் என்பர்.





## 16. முக்கரணம்

**தி**ருவருளால் ஆருயிர் உடல், உணர்வு, உணர்த்துமெய் ஆகிய மூன்றையும் பொருந்தும். இவற்றை பருவுடல், நுண்ணுடல், முதலுடல் என்றும் சொல்லலாம். தனக்குரித்தானவை என்று ஆருயிர் கருதிய அம் மூன்றையும் அது வேறு என்று ஆருயிர் உணரும். அதுபோன்று அருளோன், அருள், ஆருயிர் என்னும் சிவபர சீவர்களின் வேறுபாடும் ஒன்றெனல் ஆகும். திருவருளின் நினைவால் மூலத்தழல் ஒளியை ஓமென்று கணித்து ஒளிரச் செய்ய வேண்டும். அத்துடன் மேல்மூச்சையும், கீழ்மூச்சையும் அடக்க வேண்டும். உயிர்ப்புப் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். எந்நேரமும் சிவநினைவாக இருத்தல் வேண்டும். இவ்வாறு செய்யும் மெய்யடியார்கள் திருவடியைச் சார்வர். உள்ளம், உரை, உடல் என்பவற்றின் சோர்வை அகற்றி பெறும் அருள் நிலையைக் கைக்கனிபோலச் சிவபெருமான் தந்தருளினான். புருவநடுவில் மனோன்மணி நின்று அருளத் திருவருள் துணை செய்யும். அத்துணையால் ஒருமை உணர்ச்சி உண்டாகும். அவ் உணர்ச்சியால் செயலற்ற திருநிலை எய்தும்.

## 17. முச்சூனிய தொந்தத்தசி

**அ**து என்னும் தற்பரமும், நீ என்னும் தொம்பதமும், தான் அதுவாகிறது என்ற அசிபதமும் தொன்மையானவை. இம் மூன்றும் துரியத்தில் தோன்றும். இத்தோற்றத்தில் ஆருயிரும், பரமும், சிவமும் சேர்ந்து நிற்கும். இதைத் தொந்தத்தசி என்பர். இது தொம்பமாகிய நீ, தத்பத்மாகிய அது, அசியாகிறாய் என்று பொருள். தொம்பதம், தத்பதம், அசிபதம் ஆகிய மூன்றையும் அலசி ஆராய்ந்தால் கன்மம், மாயை, ஆணவம் என்ற மும்மலங்களும் நீங்குவதாகும். அதுபோல அமைதி, ஆட்சி, அழுத்தம் முக்குண நீக்கமும் நீங்குவதாகும். இவை நீங்கச் சிவபெருமான் தோன்றியருள்வான். அப்போது ஆருயிருக்கு அருள் வளர ஆரம்பிக்கும். அருள் வளரவளர மருள் சிறிது சிறிதாக அழியும். தொம்பத்தோடு காணப்படும் அசிபசுப் பொருளை உயிர்ப்பில் தோன்றக் கண்டு முன் ஓதியவாறு அவத்தைகள் பத்தையும் கருதுக. கருதி முடிவில்லாத அவத்தையை அவ்வாக்கியத்தால் செலுத்துமுறையில் வைத்து ஓதவேண்டும். அப்படி ஓதும் போது சிவத்தை முன்வைத்து ஓத வேண்டும். சிவத்தை முன்வைத்து ஓதுவது 'சிவயநம' ஆகும். சிவத்தை முன்வைத்து ஓதும்போது ஆருயிரின் அறிவு சிவத்தின் உண்மை அறிவு இன்பவடிவின் கண் செல்லும். அப்போது உபதேசத்தை மெய்யுணர்வால் களங்கமற்ற உள்ளத்துள்ச் செலுத்திடும். அதன்பின் ஆருயிர் திருவடியை அடைந்து அத்திருவடிக்கு அடிமையாகிவிடும். தவம்பரப் பொருளாகிய நீ அறியாமையாகிய பிணிப்பில் இருக்கும். அறியாமையை அகற்றச் சிவபெருமான் கலப்பால் ஒன்றாகத் திகழ்வன். திருவருளின் கண் அசிபதம் பொருள் தோன்றும். பொருளுரை உயிர்ப்பின் கண் பயிலும். தொம்பகமும், தத்பதமும், அசிபதமும் கொள்ளப்படும். அமைதி,





ஆட்சி, அழுந்தல் ஆகிய முக்குணங்களும், ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும் நீங்குவது அகர உகர மகரங்களினால் ஆகும். அவ் அகர, உகர, மகரங்கள் பத்தாய்ப் பகுத்தபாடுகள் மூன்றில் தமாமதுரியம் தோன்றும்.

## 18. முப்பாழ்

**உ**டலும், பொறிகளும் எண்ணம், மனம், எழுச்சி, இறுப்பு ஆகிய நான்கும் உயிர்ப்பும் ஆகிய ஏழும் மெய்யுணர்வைக்கண்ட விடந்துப் பாழாகும். இதைக் காரியப்பாழ் என்பர். இப்பாழ் ஏழாகும். இவ்வேழுபாழும் திருவருளால் அகலும். அனைத்தையும் உணர்ந்தவனாக இருக்கும் தன்மை, அனைத்திற்கும் காரணமாகும் தன்மை, அனைத்துள்ளும் உள்ளுறையும் தன்மை, அனைத்தையும் செலுத்தும் ஆணவத்தன்மை, அனைத்தையும் படைக்கும் தன்மை, அனைத்தையும் காக்கும் தன்மை, அனைத்தையும் துடைக்கும் தன்மை என்பனவே இவ்வேழுமாகும். இவ்ஏழும் அறிவுப்பாழாகும். காரிய காரண வருத்தங்கள் அகல உபசாந்தமும் அகலும். மாயைப் பாழ் என்பது மாயையின் உண்மையான நிலையைக் கண்டு விலகுதலாகும். சிவப்பாழ் என்பது ஆருயிரின் உண்மையான நிலையைக் கண்டு அகல்வதாகும். அருள்வெளிப்பால் என்பது அருளின் உண்மை நிலையைக் கண்டு அகலலாகும். இம்மூன்று பாழ்களையும் சேய முப்பாழ என்பர். சிவபெருமானது திருவடியைக் கூடுவதற்காக மாயை, உயிர், அருள் என்ற முப்பாழையும் கடந்து அவை அணைத்தும் காரணம் பற்றிய கற்பனை என அவற்றை நீக்கி எஞ்சிய உருவற்ற பாழில் ஒடுங்குகிறேன். செயலறலாகிய துரியம் அடங்கிய நிலையைச் சொல்லறும் பாழ் என்பர். பாழ் என்பது அறிதற்கரிய பரம்பரம் என்று எண்ணித் துதிக்கும் அருளாளர் அருநிலமாகும். இவ்வுண்மையை ஒரு சிலரே அறிவர். அருஞ்சைவர் மெய்கள் முப்பத்தாறையும் அறிய நமசிவய என்னும் செந்தமிழ்த் திருவைந்தெழுத்தை ஓதவேண்டும். அவ்வாறு ஓதும்போது நகரம் உணர்த்தும் மெய் ஐந்தாகும். அதனுள் ஆசான், ஆண்டான், அருளோன் என்னும் மெய்கள் மூன்றாகும். மகரம் உடன்மெய் இருபத்து நான்காகும். சிகரம் அத்தன் மெய்யாகும். வகரம் அன்னை மெய்யாகும். யகரம் ஆள்மெய்யாகும். இவ்மெய்களின் உண்மை அகலும் போது 'நமசிவய' வும் அகலும். திருவருள் 'ய' வென்று நிற்கும். அப்போது அது சிவயநம என அமையும். நமசிவய என்பதில் உள்ள யகரம். நம என்பதைக் கடந்து நிற்கும் நிலையே சிவயநம ஆகும். உடலினையே உயிர் என்றும் மெய்யுணர்வில்லாதோர் கூறுவர். அது ஒன்றுபட்டு நிற்கும் நிலையால் கூறுவதாகும். மெய்யுணர்வுள்ளவர்கள் உயிரைப் பற்றிய உண்மைகளையும் முழுமையாகத் திருவருளால் புரிந்து கொள்வர். ஏனையோர் பிறப்புகளுக்குள்ளாகி அவதிப்படுவர்.





## 19. காரியகாரணவு பாதி

**கா**ரிய உபாதியாகிய ஏழும் காரண உபாதிகளாகிய ஏழும், அவற்றால் ஏற்படும் துன்பங்களும் சுட்டுப்பெயர்களும் முழுமையாக அழிந்துவிட வேண்டும். அவை அழிந்தால் ஆருயிர் பரமசிவனின் திருவடியைச் சேரும். இவை நீங்கியதும் சிறப்பு நனவாய் கனவின் கண் நிகழும் நனவு உண்டாகும். அதுபோல ஆறாறு நீங்கி உறக்கம் வரும். அவ்வுறக்கம் திருவடியில் ஆருயிருக்கு ஏற்படும். அதனால் இதுவே திருவடிப்பேறாகிய நிலமாகும். ஆருயிரின் உயிருக்குயிராக விளங்கும் பேருயிரான சிவபெருமான் மாறுபட்ட காரண உபாதியின் உள்ளும் உடனாய் நின்று விளங்கும் ஆண்டவனாகவும் நிற்கின்றனன். அவனது பேரருளான உபமதியால் அல்லாமல் வேறு எவற்றாலும் கொடிய ஆணவத்தை அறுக்க முடியாது. இருள்மலமான ஆணவத்தின் வயப்பட்ட ஆருயிர் நீக்க முடியாத துன்பத்துக்குள் அகப்பட்டு வருந்தும். ஆருயிரின் ஆணவத்தை ஒழிக்கும் பொருட்டுத் திருவருள் ஆருயிருடன் கலக்கும். அத்திருவருளின் மகிமையால் படிப்படியாக ஆணவவல்லிருள் அகலும்.

## 20. உபசாந்தம்

**மு**த்திக்கு வித்தான வாயில் சிவஞானமாகும். சிவஞானமடைய வேண்டுமாயின் சிவபெருமானது திருவடியையும் சிவபெருமானின் மெய்யடியார்களின் திருவடிகளையும் பேரன்புடன் தொழவேண்டும். இதுவே சிவஞானத்திற்கு வித்தாகும். மனம் தன்வயப்படல் வேண்டும். மனம் அடங்க அது அருள் வழிநிற்கும். அதனால் மனம் திருவருளில் அழுந்திநிற்கும். காரியவருத்தம் ஏழும் தூவாமாயையுள் ஒடுங்கும். அதனால் ஆணவப்பசை அகலத் திருவருள் ஆருயிரை வந்தடையும். திருவருளில் ஆருயிர் மூழ்குவதே ஒடுக்கமாகும். ஆருயிர் திருவருளில் ஒடுங்கியதும் அது தூய்மையாகும். நிலைபெற்ற ஆவிக்காட்சி என்பது ஆருயிர் சிவபெருமானின் திருவடியிற் கூடுவதாகும். அவ் உணர்வில் ஒடுங்கி நிற்பது உபசாந்தமாகும். நலமான தொண்டுகள் விருப்புடன் புரிவதற்காகவே ஆருயிருக்குச் சிவபெருமான் உடம்பை அருளினான். இவ்வுடம்பு இறைவன் தந்த இரவற்பொருளாகும். இவ் உண்மையை மெய்யுணர்வால் புரிந்து அதனைப் பேணி வாழ்வதே தத்துவ சக்தி என்னும் மெய்த்தூய்மையாகும். திருவருளின் துணையால் மலங்களை நீக்குவதே மலத்தூய்மையாகும். அப்போது ஆருயிர் திருவருளால் தன்னை அடக்கி மனதைச் சிவனின் நினைவில் நிற்கவைக்கும். இது மும்மலத்தூய்மையாகும். இதுவே மும்மலச்சுத்தியுமாகும். ஒப்பற்ற சாக்கிராதீதம் என்பது சிவகுருவின் திருவடிப்பேறாகும். அத்திருவடியில் அடங்கி நிற்றல் உபசாந்தமாகும்.

**தி**ருவருளின் அருளால் வந்தமைந்த ஒழிவில் ஒடுக்கம், பசையறல், திருவருள் நினைவில் சேறல், பொருந்தும் சிவமாதல், சிவ இன்பம், அதில் தோய்தல், தோய்வு நினைவறகல்,





மேன்மைநிலை, இன்பத்தழுவல், அழுத்து நினைவகறல் ஆகிய பத்தும் நனவினப்பால் நலப்பாடாகும். நினைவறல் என்பது ஆருயிர் உலகப் பொருட்களில் உள்ள பற்றுக்களை முற்றாக அகற்றுவதாகும். திருவருள் நிறைவாகிய பரவலினால் ஆருயிர் தன்நிலை மறந்து திருவருளுடன் கூடிக் கலந்து நிற்கும். இதற்கு ஒப்பாகக் கடல்நீர் ஆவியாகி ஆகாயத்துள்ச் சென்று மழையாகப் பெய்து, பின் அது தரை, மலை முதலியவற்றைத் தாண்டி ஆறாக உருவெடுத்து மீண்டும் கடலை அடைவதைக் கூறுவர்.

## 21. புறங்கூறாமை

**மு**ழுநிலவில் காணப்படும் களங்கத்தை முயல் என்பர். அந்த முயலைக் கொல்ல நினைப்பவரை எல்லோரும் கேலி செய்வர். அதுபோல திருநீலகண்டத்தை உடைய சிவபெருமானை அவனது திருவருளால் காணமுடியாதவர்கள் ஒழிவிலொழுக்கத்தைக் கண்டோம் என்பர். கருடன் ஆகாயத்தின் உச்சியில் பறந்து கொண்டிருக்கிறது. அதேநேரம் ஆழமான ஒடுங்கிய புற்றுள் பதுங்கிப் படுத்திருக்கும் பாம்பு கருடனைக் கண்டு பயத்தால் நடுநடுங்குகிறது. அதுபோன்ற நெஞ்சமே நீயும் அடங்கியிருக்கும் வழியை அருளால் அறிந்து கொள். அதையுணராது நெஞ்சமே நீ வீண்பெருமை பேசுகிறாய். அதனால் பயன் ஏதுவும் வராது. பாய்ந்து வீராப்புடன் செல்லும் ஆறானது கடலை அடைந்ததும் அடங்கியிருப்பதைப் போல நீயும் அடங்கியிருப்பாயாக. போர்க்களம் சென்று எதிரியை அடக்கி வெல்வது சிறந்த அறிவாண்மை அல்ல. அது புல்லறிவாண்மையாகும். திருவருளால் அடக்கமுடையவராக வாழும் ஆண்கள் மருவலர் என அழைக்கப்படுகின்றனர். அவர்கள் சிவத்தைப் பேணி செய்யும் அகத்தவத்தின் மகிமையால் கருதியவையாவும் கைகூடும் அவர்கள் பிறர் கேட்பவற்றைக் கொடுக்கும் தருவலர்களாவர். கற்பகதருவைப் போலக் கேட்டதைக் கொடுக்கும் தர்மவான்கள் அவர்கள் சிவபெருமானே பெரும் முதல்வன் என்று நினைத்து வாழுங்கள். அப்படி நினைத்து வணங்கி வாழ்ந்தால் நீங்கள் விரும்புவதைச் சிவபெருமான் தந்தருள்வான். என் உயிரிலும் மேலான தலைவனான சிவனை நீங்காத நினைவுடன் வணங்குதல் எனது கடனாகும். அவனை நான் தூயமனத்தோடு பணிவேன். அவனை அன்புடன் நினைப்பவர்களின் நினைவில் என்றும் இருந்து இனிக்கச் செய்வான். நினைப்பாரைச் சாந்து நின்றருள்பவன் சிவபெருமான். சிவபெருமானின் திருவடியை நின்றும், இருந்தும், கிடந்தும் நன்றாக நினையுங்கள் அவனின் மீது புலன்களைச் செலுத்துங்கள். கடவுள் பலர் என்று மாறுபாடு கொள்ளாது ஒருவனே முழுமுதற் கடவுள் என்று தொழுங்கள். ஒருமனப்பட்ட நினைவோடு சிவனை வணங்குங்கள். உணர்வுக்கு உணர்வான நுண்ணறிவாய் விளங்குபவன் சிவன். அவனே ஏழு பிறப்புக்களுக்கும் காழின் கனியாவான்.

**வி**ண்ணவர்களாலும் அவர் தம் சுட்டறிவாலும் சிற்றறிவாலும் அறியப்பட முடியாதவன். அவன் வேறு இடங்களில் விளங்குகிறான் என்று எண்ணாது நம் உள்ளத்தில் வீற்றிருந்து அருள்கிறான் என்று நினைத்து வணங்கினால் அவன் இன்முகத்துடன் தோன்றியருள்வான்.





அதற்காகத் தியானம் செய்யுங்கள் முப்பொழுதும் அகத்தும் புறத்தும் அன்புடன் தொழுங்கள். அவ்வாறு தொழுவோர் முழுமுதல்வனான சிவனாவர். எனது தந்தையான சிவபெருமானின் திருவடியைப் போற்றி வணங்கினேன். திருவடியை இடைவிடாது நினைத்தேன். அவ்வாறு நினைக்க ஓர் ஓசை உண்டானது. அவ்வோசை உயிர்புப் பயிற்சியால் அகத்தில் அடிக்கும் மணிஓசையாகும். அவ்வோசை உடம்பெங்கும் கலந்து மெய்மறக்கச் செய்தது. எனது உள்ளத்தில் புகுந்து மகிழ்வுடன் வீற்றிருக்கும் நந்தியின் பெருமைகளை யாரும் உணர்ந்தறியவில்லை. என் நெஞ்சை நான் அறிவதுபோல என் நெஞ்சுள் நிறைந்திருக்கும் சிவபெருமானையும் நான் அறிவேன்.

**அ**கத்தவத்தின் மூலமே நான் அவனைக் கண்டு கொண்டேன். அவனது திருக்கோலங்களையும் கண்டு கொண்டேன். சிவனின் திருப்புகழ் ஒன்றே பெரும் புகழாகும். அவனது திருவடியுணர்வே ஒப்பில்லாத சிவஞானமாகும். அவனது திருவடி இன்பமே திருவாசகமாகும். இம்மூன்றும் உண்மை, அறிவு, இன்பம் ஆகும். இதை உணர்ந்து கொள்ளும் மெய்யன்பர்கள் சிவவுலகம் சென்று சிறப்பாக வாழச் சிவன் உதவுவான். தூய்மதியாகத் தம்மதிக்கு மதிகொடுப்பவன் சிவபெருமான். அயன், அரி, அரன் ஆகிய மூவரினதும் உலகப் பேறுகள் பதமுத்திகள் எனப்படும். அவை துன்பங்களைத் தந்து பிறப்பைக் கொடுப்பன. அவற்றைக் காணவேண்டுமென்று மெய்யடியார்கள் விரும்புவதில்லை. அவற்றைத் துன்பமான பிறப்புக்களைத் தருபவை என்று அவர்கள் நினைப்பதால் அவற்றை விட்டு அகன்றுவிடுவர். இது சுட்டிப்புலனாகக் கூடிய மாயாகாரியப் பொருட்களின் பாசம். அதற்குக் காரணம் ஆணவமாகும். ஆணவத்தை அருளால் மாற்றுபவர் திருவடியின் கீழ் வாழும் பூம் நிரந்தரக் குடியினராவர். இவர்கள் திருவருளால் சிவபெருமானை உணர்ந்த ஒண்மையராவர். இவரே சிவசித்தராவார்.

## 22. எட்டிதழ்த் கமலமுக்குண அவத்தை

**பு**றத்தே அமைக்கப்படுவது போல அகத்தினுள்ளும் என்புலக்காவலரை அமைக்க வேண்டும். நெஞ்சத்தாமரை இதழை எட்டாக அமைக்க வேண்டும். அதில் ஞாயிறும், தீக் கடவுளும், யமனும், நிருதியும், வருணனும், வாயுவும், குபேரனும், ஆண்டானையும் முறையே கீழ்ப்புலம், தென்கீழ்ப்புலம், தென்புலம், தென்மேல்புலம், மேல்புலம், வடமேற்புலம், வடபுலம், வடகீழ்ப்புலம் ஆகிய இடங்களில் அமைத்து எல்லோருமாகச் சேர்ந்து காவல் புரியுமாறு திருவருளால் ஆணையிட வேண்டும். மெய்யடியார்கள் ஆணையிடுவதற்குத் தகுதியானவராவர். அவர்கள் ஆணையிடுபவரே தவிர அவர்களை வணங்குபவர்கள் அல்லர். எட்டிதழ்த் தாமரை என்று விதந்து கூறும் உடம்பின் அகத்தே கழுமுனை நாடி மிகவும் நுண்ணியதாய் அமைந்துள்ளது. அத்தண்டினுள் அடங்கிய அறிவை அகத்தவத்தால் ஆய்வு செய்யுங்கள். அதுவே உய்யும் வழியாகும். அதன் பின் அப்பேரொளியை ஆராயுங்கள். நெஞ்சத்தாமரையை மூன்றாகப் பகுக்குக. அவை இதழ், கொட்டை, கொட்டை நடுவாகும் இம் மூன்றிலும் ஆருயிர் நிறைந்து நிற்கும்.





உலகத்தை உருவமாகக் கொண்டு திகழும் சிவபெருமானை சோதி விரிசுடர் என்பர். அவரை விராட் என்றும் அழைப்பர். எட்டிதழ்த் தாமரையில் கொட்டையும் நடுவும் அகமுள்ளனவாகும். அவ்விரண்டினுள்ளும் ஆருயிர் விளங்குகின்றது. அகத்தினுள்ளே அமுதத்தை ஊற்றாகக் கொண்ட சிற்றாறு ஒன்று உண்டு. அதுபோல அவ்வாறு நிறையும் நெஞ்சக்குளமும் ஒன்று உண்டு. அங்கு திகழ்வது சிவநிலையாகும். அங்கு நிலைபெற்றிருக்கும் அருள் அன்னையைக் கூறாகக் கொண்டு வீற்றிருப்பவன் சிவபெருமான்.

**எ**ட்டுத்திசைகளையும் அருளால் காவல் செய்பவர்கள் எண்மராவர். அவர்களது தேர்களும் எட்டாகும். பூதங்கள் ஐந்து, ஞாயிறு, திங்கள், உயிர் என்ற எண்பெரும் வடிவமமாகத் திகழ்பவன் சிவபெருமான். அறிதற் பொறிகள் ஐந்து, செய்தற்பொறிகள் ஐந்து, மனம், புத்தி, இறுப்பு ஆகிய பன்னிரண்டும் புடைபெயராது அசைவற்று நிற்கும் போது சிவபெருமான் தோன்றுவான். இதுவே எட்டிதழ்த் தாமரையில் சிவபெருமான் தோன்றியருளும் முறையாகும். எட்டிதழ்த் தாமரையின் கிழக்கு முதல் வடக்கு ஈறாகவுள்ள ஏழு இதழ்கள் ஆருயிர் வகை ஏழின் நிலைக்களமாகும். வடகீழ்பால் ஆண்டானின் நிலைக்களமாகும். கீழ் இதழ் சிவபெருமானின் நிலைக்களமாகும். மேலிதழ் ஆருயிரும் பேருயிரான சிவபெருமானும் வேறறப்புணர்ந்து நிற்கும் நிலைக்களமாகும். ஊழிகள் எண்ணில் அடங்காதவை. அவற்றுள் நல்ல ஊழிகள் ஐந்தாகும். அவை நீக்கல் முதலிய ஐவகைக் கலைகளில் நிகழும். ஐவகை ஒடுக்கமாகும். இவை அண்டத்துச் செல்லும் ஊழிகளாகும். உலகிடத்து எண்பேருருவாகத் திகழ்பவன் சிவன். உயர் வரை உச்சி என்பது ஆணையிடமாகும். அங்கு இடையறாது நீர் நிரப்பும் குளம் ஒன்று உண்டு. உள்ளம், உரை, உடல் என்பன முக்கரணங்களாகும். இவை மனமொழி மெய்களாகும். இவை தாமாக ஒடுங்கும் போது எந்நிலத்தில் நின்றாலும் இருந்தாலும் அவர்கள் சிவத்திருவுடையோராவர்.

## 23. ஒன்பான் அவத்தை ஒன்பான் அபிமானி

**சி**வபெருமான் கலந்து நிற்கும் நிலையினைப் பலவாறாகக் கூறுவர். அவற்றுள் இதுவும் ஒன்றாகும். அம்முறை விசுவன் முதலாகச் சாந்தன் ஈறாகக் கூறப்படும் நிலை ஒன்பதாகும். அவை விசுவன், தைசதன், பிராஞ்ஞன், விசோட்டன், பொன்கர்ப்பன், அவ்யாகிர்தன், இதயன், பிரசாபத்தியன், சாந்தன் என்பனவாகும். இவை அனைத்தும் பற்று நிலைகளாகும். அவத்தைகள் ஒன்பதாகும். அவை ஆருயிரின் நனவாதி மூன்று, ஆருயிரின் நனவாதி மூன்று, பேருயிரின் நனவாதி மூன்று. இவற்றைச் சிவசாக்கியம், பரசாக்கியம், சிவசாக்கிரம் என்பர். ஆருயிர் நனவு, ஆருயிர் கனவு, ஆரருள் கனவு, ஆரருள் உறக்கம் எனவும் மூன்றுண்டு. பேருயிர் நனவு, பேருயிர்க் கனவு, பேருயிர் உறக்கம் எனவும் மூன்றுண்டு. பிறப்பிற்கு வாயிலாகிய மலம், குணம் முதலியவற்றின் பற்றுக்களை அறுத்துச் சிவனைப் பற்றுதற்குரிய நான்னெறி நான்மை நற்றவமான உண்மை, அறிவு இன்பவடிவை மேற்கொண்டு சிவனது திருவடியை அடையமுயல வேண்டும். சிவனை .இடையறாது சிந்தித்தால் ஆருயிரின் முனைப்பாகிய ஆணவம் படிப்படியாக





அகன்று சிவபெருமானின் அடிமை என்ற நினைப்பு உருவாகும். அதன் பின் மும்மலங்களும் முற்றும் அற்றுப்போம். அவை அகலச் சிவபோதம் தலைப்படும். அப்போது ஆருயிர் திருவருளால் தன்னை முழுமையாக்கிக் கொள்ளும். ஆருயிர்களின் நற்பேற்றிற்காக பதின்நான்கு நூல்களை உலகிற்கு அளித்தவர் ஆலமர் செல்வன். அவரை இடையறாது நினைத்து ஏத்தினால் சிவபெருமான் வல்வினைகள் அனைத்தையும் அறுத்துக்காப்பான். மெய்கண்ட நூல்கள் பதின்நான்கு. இப் பதின்நான்கும் மேலோதிய பதின்நான்கு நூல்களுக்கும் ஒப்பாகும். அதனால் அவற்றை அருளால் கற்று மகிழவும்.

**ப**ண்டுதொட்டு ஆருயிர் நல்வாழ்வு எய்துதற் பொருட்டுச் சிவபெருமானை வழிபட்டுப் பல நூல்களைச் செம்பொருட் செல்வர் அமைத்தருளினார். அவை ஆறு என்று கூறுவர். அவ்வாறு வழிபடும் பொழுதுகளும் ஆறாகும் அவை மாலை, யாமம், அதிகாலை, விடியல், காலை, நண்பகல் என்பனவாகும். இக்காலங்கள் ஆருயிர்கள் வணங்குவதற்கு ஏற்புடைய காலங்களாகும். அவற்றுள் மிகுந்த பயனைத் தரக்கூடிய காலங்கள் இரண்டாகும். அவை உறக்கத்திற்குச் செல்லுங் காலம், உறங்கி விழிக்கும் காலம். இவ்விரு வேளைகளிலும் வழிபடுதல் முக்கியமானதாகும். அடியவர்கள் எவவுருவில் சிவபெருமானை வழிபட்டாலும் அவ்வுருவில் தோன்றி அருள்புரிபவன் சிவபெருமான். அவனே ஆதியான பரம்பொருள். அவன் கலப்பால் பராபரையாய், சோதியாய், பரமாய், உயிராய், கலையாய், மாயை இரண்டாய், வீடாய், திருவடிப்பேறாய் விளங்குபவன். இத்தகைய முறைமையுடன் கூடிய ஒன்பது வேறுபாடுகளுடன் சிவபெருமான் விளங்கியருள்கிறான்.

**ஆ**ருயிர்களின் சிந்தை தெளியாதது. குளப்பம் மிக்கது. அத்தகைய தெளியாத சிந்தையைத் தெளிவிக்கும் பொருட்டு மாறுபட்டவற்றைப் படைத்து அதன் மூலம் உய்த்துணர்ந்து தெளியவைப்பவன். ஆருயிர் செய்த நல்வினை, தீவினைப் பயனாகச் சொர்க்கத்தையும் நரகத்தையும் அளித்தருள்பவனும் அவனே. அவனருளால் தான் பூமியில் உயிர்கள் வாழ்கின்றன. இவற்றைத் தெளிவாக உணராதவர்கள் மீண்டும் உடல்களைப் பெற்று துன்பப்படுவர். அவத்தையுள் ஒன்பான் அபிமானி என்ற நிலையை அடைந்தவர் ஆதி தெய்வமாவர். ஒன்பது மெய்களின் செயல்கள் அறுந்தால் முத்துரியம் பெருந்தும். இவ்வாறு பொருந்தவைத்துப் பொருந்தி நிற்பவன் சிவன். அவன் நீங்காத சிவநினைவால் சிவனாவான். அதுவே சித்தாந்த சித்தியான திருவடிப்பேறாகும்.

## 23. சுத்தாசுகம்

**நா**சியின் நுனியில் இருந்து புறப்பட்டு வெளியேறும் உயிர்ப்பு பன்னிரண்டு விரலளவில் ஓடும். அவ்வாறு ஓடும் உயிர்ப்பின் இறுதியில் அமர்ந்திருப்பவன் சிவபெருமான். அதுவே அவனது இருப்பிடமென்று யாரும் அறியமாட்டார்கள். அங்ஙனம் இருப்பதாகப் பெருமறை சொல்கிறது.





எனினும் உறுதியாகக் கூற நாணியிருக்கிறது. அதுதான் அம்மறையின் இயல்பாகும். ஆருயிர்கள் செய்யும் செயல்களின் உரிமையும், மீண்டும் பிறவிக்கு வித்தான கன்மமும் கருதப்படும் பிறவிக்கு அருவினையாகும். இவற்றைத் திருவருளால் உணர்ந்த ஆருயிர் யான் எனது என்ற செருக்கை அகற்றித் தன் முனைப்பற்றுச் சிவனுக்குச் செய்யும் பணிகள் யாவும் சிவப்பணியாகும். இதனால் அவ்வுயிரைப்பற்றி நின்ற வினைகள் அகலும். மாயாகாரிய உலகில் காணப்படும் இன்பங்களை உண்மையானவை என்று மாயையால் மறைக்கப்பட்ட ஆருயிர் எண்ணி முதல்வனான சிவபெருமானை நினையாதிருக்கிறது. அதனால் சிவன் மறைபொருளாக விளங்குகின்றான். மாயையால் மூடப்பட்ட ஆருயிர் அவ்விருள் அகலத் திருவருளான தெருள் தோன்றும். அது தோன்றியதும் மறை பொருளாக இருந்த சிவன் தோன்றியருள ஆருயிர் திருவடியின் கீழ் ஒடுங்கும். இவ்வுயிர் மறையவல்லார் எனப்படும். இவர்களுக்கு அடுத்துப் பிறப்பதற்குரிய உடம்பு இல்லை. தற்பொழுது தங்கியிருக்கும் உடம்பு சிவனின் பணிக்குரிய சிவவுடம்பாகிவிடும். அதனால் அவ்வுடம்பு அவர்களுக்குரியது அல்ல. புருவநடுவில் இருக்கும் அமுத ஆற்றின் வழியாக உச்சித் தொளையை அருளால் அடைய வேண்டும். எந்நேரமும் சிவபெருமானை நினைத்துக் கொண்டே இருக்கவும். அதன்பின் திருவைந்தெழுத்தை ஓதவேண்டும். இதுவே அருளமுத ஆறு தங்குவதற்கான வழியாகும்.

**தீ**ட்டு தீட்டு ஆசூசம் என்று உழறுவர் அதன் உண்மையை அறியாதவர். அத்தீட்டு உண்டாகும் இடத்தின் பெருமையை அறியாதவர். அத்தீட்டுக் கருப்பையில் உண்டாவதாகும். அதுவே திருவடிப்பேற்றிற்கு வாயிலாக அமைந்த உடம்புக்குக் காரணமாகும் என்ற உண்மையைப் புரிதல் வேண்டும். இவ் உண்மையை அறிந்தவர் தீட்டு உண்டென்று கூறமாட்டார். இத்தீட்டானது சென்னெறி நான்மையின் முதற்படியான அருநியமத்தர் என்றும் சீலத்தாருக்குக் கிடையாது. அதுபோலச் சிவனை அர்ச்சிப்பவர்களுக்கும் இல்லை. திருவைந்தெழுத்தை ஓதுபவர்களுக்கும் இல்லை. சிவசிவ என்றும் நான்மறையை ஓதும் அறிவினர்க்கும் தீட்டு இல்லை. திருமுறை, திருமுறைகளை ஓதிச் சிவபெருமானை வழிபடும் மெய்யடியார்கு தூய்மையான திருவடியுணர்வு உண்டாகும். பூதமுதல் தன்மாத்திரையாகும். இவ் இரண்டின் முதலாகிய பாய அருளையும் தூமாயையையும் அருளால் பலர் அறிவதில்லை. அவ்விரண்டின் மூலமாகிய அருளையும் தூமாயையையும் அருளால் அறிவார்க்கு அவை இரண்டும் தூயனவாக இருக்கும். திருவைந்தெழுத்தின் பெறுபேறாக அகமும் புறமும் ஒளியாய் விளங்கும். சிவ விளக்கமான விழுத்தூய்மையை ஆருயிர் வாய்க்கப்பெறும். அதன் பயனாக எண்பெருபேறுகளும் கிடைக்கும். ஐந்தெழுத்தை வாட்படையாகக் கொண்டு இடையறாது ஒழுகுவது தூயநெறியாகும். ஊழ்வினை மெய்யடியார்களையும் வருத்தும். அவ்வினை அருளால் அகலத் திருவைந்தெழுத்தை ஓதவேண்டும். இருவினைகளாலும் சூழப்பட்ட கருமத்தவருக்கு இருவினைகளால் மாறிமாறிப் பிறப்புக்கள் உருவாகும் என்பதை அவர்கள் அறியமாட்டார்கள். சிவயநம என்பதன் நம என்பது வினைகளின் முதன்மை அகன்று அவ்வினை கடையில் தடையாக நிற்பதைக் குறிக்கும். சிவயசிவ என்பது வினைகள் அகன்று ஆருயிர் சிவபெருமானுக்கு அடிமையாவதைக் குறிக்கும்.





## 24. முத்திநிந்தை (பேற்றுப்பழிப்பு)

திருவருளால் செம்பொருட்டுணிவினரால் அருளப்பட்ட நூல்கள் அனைத்தும் திருவடிப்பேற்றால் பரகதி உண்டு என்று உறுதியுடன் கூறியுள்ளன. அப்படியிருந்தும் சிலர் அவற்றை உணரமறுக்கின்றனர். வேறு சிலர் ஒன்றுமட்டுமே உண்டு ஏனையவை இல்லை என்கின்றனர். இன்னும் சிலர் தாங்களே கடவுள் என்கின்றனர். சிலர் உண்டு என உரைத்துவிட்டுப்பின் இல்லை என்று மறுக்கின்றனர். இவர்கள் அனைவரும் மெய்யுணர்வு இல்லாதவராவர். இவர்கள் இம்மையிலும் மறுமையிலும் துன்பங்களையே அனுபவிப்பர். இதுவே நரகமாகும். இவர்கள் இரந்து கேட்டாலும் யாரும் பிச்சையிட்டார். உயிர்ப்பினையும் நாட்டத்தினையும் திருவருளால் ஒருமுகப்படுத்தி மனதால் சிவபெருமானைத் துதித்தேன். பற்றற்ற என்னைப் பற்றிய சிவனைப் பதியென்று அழைத்தேன். அதனால் யான் எனது என்ற செருக்கு அகன்றது. அதனால் திருவடியைப் பற்றிச் சிவனுடன் இருக்கிறேன். சிவபெருமானை ஆருயிருக்குக் காட்டி அவனுடன் கூட்டியருள்வது திருவருளேயாகும். சிவபெருமான் ஆருயிர்களைப் பிறவிப் பெருங்கடலைக் கடக்கத் துணையாகத் திருவருளாகக் கூட நின்றருள்கிறான். தாமரை நூலைப் போன்ற மென்மைத்தன்மை வாய்ந்த அன்பு என்ற நூலால் ஐந்தெழுத்தையும் நெஞ்சில் பதித்துப் பிணைப்பர். அதன் பின் நான்னெறியிற் சென்று திருவருட்காவலராவர். அவர்களின் நிலையைக் கண்ட சிவபெருமான் திருவடியை அடையும் வழியைக் காட்டியருள்வன். இவற்றைத் தீவியாளர்கள் உணரவும் மாட்டார்கள். மெய்யடியார்கள் நன்னெறி நான்மை வழிச்சென்று நந்தியின் திருவடியை அடைவர். அவனின் அருளால் முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் ஆகிய ஐந்து நிலங்களிலும் கோவில் கொண்டிருக்கும் சிவபெருமானை அங்கங்கு சென்று வழிபடுவர். இவற்றைத் தீவினையாளர்கள் கண்டும் அதைப்பற்றி நினைக்கமாட்டார்கள். வடக்கும் தெற்கும் சீருடைப்புலங்களாகும். வீடுபேற்றை அடையவுள்ள செந்நெறிச் செல்வர் இப்புலங்களை அடைவர். கிழக்கும் மேற்கும் பீடுடைய புலங்களாகும். இப்புலத்தையே அமரர்கள் விரும்புவர். அவர்கள் நாவினிலைந்தெழுத்தையே தினமும் ஓதுவர்.

## 25. இலக்கணாத் திரயம் (மும்மை இலக்கணை)

இலக்கணை என்பது ஒரு பொருளினது இயல்பை மற்றொரு பொருளுக்குக் கொடுப்பது. அதுவிட்ட விலக்கணை, விடாத விலக்கணை, விட்டும் விடாத இலக்கணை என மூவகைப்படும். நெஞ்சினைச் சென்றது என்று கூறின் அதுவிட்ட விலக்கணையாகும். புளி தின்றான் என்பது விடாத விலம்கணையாகும். பாயிருள் பருகி, பகல்காண் நெழுதரு பல்கதிர்ப் பகுதி என்பது விட்டும் விடாத இலக்கணையாகும். ஓங்காரமாகிய வில்லும் திருவைந்தெழுத்தாகிய நாணும்,





ஆருயிர் அம்புமாகத் திருவருளால் கோர்த்துச் சிவனான குறியை எய்துமாறு எய்த பின்பு புலன்களாகிய மதயானைகள் அழிந்தன. அதனால் ஆருயிரின் முனைப்பு அடங்கியது.

## 26. தத்துவமசி வாக்கியம்

**ஆ**ருயிர் செயலறலாகிய சீவதுரியத்தில் நீ என்ற தொம்பநிலையே ஆருயிருக்கு உள்ளது. அப்பாலாகும் அருட்செயலறல் என்னும் பரதுரியத்தில் ஆருயிருக்கு அதுவாதல் என்னும் தத்பதநிலையே உளதாகும். பொருந்திய சிவச்செயலாகிய சிவதுரியத்து சிவத்தழுந்தலாகிய துய்ப்பு நிலையுள்ளதாகும். இவை மூன்றும் சிவத்துய்ப்பில் அடங்கிவிடும். பற்றறலே உண்மையான சுத்தமாகும். இந்நிலை தொம்பச்சுத்தமாகும். ஒழிவொடுக்கத்துக் தற்பத உண்மையாகும். ஆருயிர் இவற்றை விட்டு நீங்கி சிவகுருவின் அருளால் சிறப்பான நீ அதுவாகிறாய் என்பதே தத்துவமசி என்றும் சொல்லுக்குரிய செம்பொருளாகும். துவந்தத் அசி என்ற சொல்லே தொந்தத்தசியாகும். அவற்றின் பொருள் உண்மை பெறுதற்பொருட்டு வந்த தன்மையுடையது இவ்வுடம்பு. தவக்குறிப்பான தத்துவமசி வேதாந்த விளக்கமாகும். சிவயநம என்பது சித்தாந்த விளக்கமாகும். வேதாந்தமும் சித்தாந்தமும் செம்பொருளாகும். தொம்பதம், தற்பரம், அசிபதம் என்பன துரியம், பரதுரியம், சிவதுரியம் என்ற முத்துரியங்களாகும். முப்பதமும் உயிர், அருள், சிவம் என்பனவாகும். மூவகைத் துரியத்துள்ளும் உய்ப்பது ஓமொழி மறையாகும். அம்மறையினை ஏனைய நினைவுகளைக் களைய பயின்றவுள்ளத்து திருவடியுணர்வு கைகூடும். அது கைகூடியதும் திருவடி இன்பம் கிடைக்கும். நனவு கனவு உறக்கம் பேருறக்கம் உயிர்ப்படங்கல் ஆகிய ஐந்தையும் நாதமான ஒலியின் முடிவில் தங்கவைக்க வேண்டும். அதன்பின் வேறுபாடு நீங்கிய மலத்தை வைக்க வேண்டும். அதன்பின் சிவநிலை கைகூடும். நாதமுடிவில் ஒடுங்கும் நிலையைச் சாந்தநிலை என்பர். அதுபோலச் சிவனையும் நாதமுடிவில் வைத்து வணங்கவேண்டும்.

**சி**வபெருமான் எல்லாவற்றையும் உள்ளடக்கி நிற்கின்ற அகலப் பரப்பினை உடையவன். மேலும் முழு வளர்ச்சிப் பான்மையினை உடையது. அத்துடன் நினைவுக்கும் அப்பாற்பட்டவன். தனக்குத் தலைவனின்றித் தானே காரணமாய், ஆருயிரின் செவ்வி நோக்கி வெளிப்பட்டருள்வன். வடமொழியாளர்கள் நீ அதுவானாய் என்றும் தொம்தத் அசி என்ற உரையே பேருரை என்பர். அது நீ ஆனாய் என்றும் தத்துவம் அசி என்றும் பேருரையே சீர்மையும் முறைமையும் செறிந்த பேருரையாகும். அது சிவம் நீ ஆருயிர் அசி இருக்கிறாய். நும்பின் எம்மை நுழையப்பணியே என்னும் சீர்மையாலும் இறைவனை முற் கூறவேண்டும் என்ற முறையினாலும் தென்னெறியாளர் கூறும் தத்துவமே சிறப்பானது. இந்நெறிப்படி வாழ்ந்தால் சிவபெருமான் பேரின்பவடிவமாகத் தோன்றி அருள்வான். ஆருயிர் திருவருளால் பரமாகிய நிலையை அடையும். அதன்பின் சிவபெருமானின் நிலையை அடையும். வாய், நாசி, புருவம், மந்தகம், உச்சி என்ற ஐந்து இடங்களிலும் சிவ விளக்கம் தோன்றும். நெற்றியின் நடுவை மத்தகம் என்பர். நெற்றியின்





நடுவாகிய மந்தகத்துச் சமனை உன்மனை என்னும் திருவருள் மனைகள் உண்டு. இவை இரண்டையும் நடம் என்றும் வனப்பாற்றல் என்றும் கூறுவர்.

**ஆ**ருயிருக்குச் சுட்டறியும், சிற்றறிவும் எட்டுவது கட்டு நிலையாகும். இவை அகலாவிட்டால் ஒட்டு நிலை ஏற்படாது. மலம், அறியாமை இரண்டினையும் திருவருள் தூய்மை செய்து அகற்றும். மெய்ப்பொருள் நூல்களைக் கற்றுணர்ந்த மேலோர் மெய்களாகிய தத்துவங்களின் தோற்றமுறையை ஆராய்வர். அவற்றின் பொருள் நுட்பங்களையும், அவற்றின் பண்புகளையும், கலப்பையும், ஒடுக்கத்தையும் ஆராய்ந்து உணர்ந்து கொள்வர். அவர்கள் இவற்றை ஆராய்ந்து தெளியத் திருவருளே துணைசெய்யும். அப்பு என்பது திருவருளையும், அனல் என்பது சிவபெருமானையும் குறிக்கும். அதனால் தான் அவர்கள் இரண்டையும் ஆராய்வர். அவற்றின் கலப்பு என்பது அருளும் சிவமும் கலந்து அருளோன் என நின்று ஆருயிரையும் அனைத்து உலகங்களையும் தொழிற்படுத்துவதாகும். நெஞ்சே நீ பண்டுதொடக்கம் சிவபெருமானின் திருவடியை எட்டு உறுப்புக்களும் நிலத்தில் படும்படி விழுந்து திருமுறைபாடி தொழுது நினைத்தவற்றையெல்லாம் பெற்று வாழ்வதற்கேயாம்.

**தி**ருவருளால் எனது உள்ளத்தில் இருந்து வெளிப்பட்ட சிவபெருமான் இவன் எனது அடியவன் என்று அறிவித்தான். அதன்பின் தனது திருவடியைத் தந்து பேரின்ப மூட்டினான். உலகில் உள்ள மாயாகாரியப் பொருட்களைத் திருவருளால் உணர்தேன். அதனால் இருளில் மூழ்கித் துன்பப்பட்டேன். பின் அவனருளால் இருளில் இருந்து நீங்கித் திருவடியை அடைந்தேன். திருவருளால் பேரொளிப்பிழம்பான சிவத்தைக் கண்டேன். கண்டதும் அவனைப் பற்றிக் கொண்டேன். ஐம்பொறிகள் போன்று எண்ணம், மனம், எழுச்சி, இறுப்பு என்னும் உட்கலக்களையும் அந்தக் கரணம் ஆகியவற்றை அருளால் சார்ந்த ஆருயிரும், உலகமும், உலகியற் பொருட்களும் சிவபெருமானின் திருவுள்ளத்தால் ஆடுகின்றன. சிறந்த ஒழுக்கத்தையும் திருநெறியையும் கைக்கொண்டு வாழவேண்டும். அவ்வாறு வாழ்ந்தால் திருவடியை அடைந்து எங்கும் பரந்த சிவனைப் போன்று சிறப்பாகக் காணப்படும்.

## 27. விசுவக்கிராசம் (உலகுயிரொடுக்கம்)

**ப**ளிங்கின் நிழலும், உடலின் நிழலும், பிறநிழல்களும் உச்சிக் காலத்தில் புலனாகாது. அதுபோல ஆருயிரும் பிறவா நிலையை அடைந்த போது திருவருளில் கலந்துவிடும். இந்நிலை சாயாபுருடன் அழியும் நிலையாகும். வானவெளியை ஒரு மனதுடன் உற்று நோக்கினால் முதலில் நிழலுருவம் தோன்றும். பின் பயிற்சியால் தன்னில் கலந்து கரைந்துவிடும் என்று சிலர் கூறுவர். நீரில் தோன்றி அழியும் நீர்க்குமிழிபோல உடலும் அண்டத்தில் உள்ள மெய்யாகிய தத்துவங்களின் இனமாகத் தோன்றிய அம்மெய்களின் இனமாகத் தோன்றி அம்மெய்களில் கலந்துவிடும். கலக்கவே அதனுள்த் தங்கியிருந்த உயிர் திருவளோடு கலந்துவிடும். கற்பூரம்





கொளுத்தப்பட்டு எரிந்தபின் எச்சமாக எதுவும் காணப்படாது. அதுபோல உடம்பும் நுண்தன்மை எய்தி நுண்மெய்க்குள் அடங்கும். ஆருயிரும் உடலும் திருவருளால் ஒன்றாக இருந்தன. அதற்குக் காரணம் ஆருயிர் சிவபெருமானின் திருவடியை அடைவதற்காகவே தேனும் இன்னமுதும் படைக்கப்பட்டது. ஆருயிர் உண்பதற்காகவே தேனும் இன்னமுதும் தேக்கிலையின் கல்லையில் நிற்பது மானிடர் பருகுவதற்காகவே. தேனையும் அமுதையும் உண்டபின் கல்லையை வீச அது உக்கி மண்ணோடு மண்ணாகிவிடும். அதுபோலச் சிவத்தையடைந்த ஆருயிர் சிவத்துடன் கலந்துவிடும். கலந்ததும் அவ்வுயிரும் சிவமும் சிவையும் புகலிடமெய்யாவிடும்.

**ஆ**ருயிர் வினைக்கு ஈடாக உடம்பகத்துப் புகுந்துவிடும். பெருகிவரும் ஆற்றுக்கு அணைகட்டினால் அந்நீர் கட்டுப்பட்டு ஒருவழிப்படுவது போலவும், அடுப்பிலிருந்து வெளிவரும் புகை எங்கும் பரந்து செல்லாது அடக்கப்புகைக் கூண்டை அமைப்பது போலவும் உடலில் இருந்து வெளியேறிய உயிர் திருவருளால் எங்கும் பரந்து நிற்கும். அது திருவடியைக் கண்டு அதனுள் ஒடுங்கும். இவ்வுடல் மலத்துடன் சேர்ந்தது. அதனால் அழியும் தன்மை வாய்ந்தது. அதற்கிடையில் ஊழி முடிவடைந்தால் அழியும். அதனால் அவ்வுடலை அழியாவுடல் என்பர். இவ்வுடலால் இறைவனைத் தொழுதல் வேண்டும். அதற்கு உலகப் பொருட்களில் பற்றில்லாமை வேண்டும். பற்றுக் கொண்டால் உலகியலைக் கடக்க முடியாது துன்பப்படும். இவ்வுயிர் உயர்வாகப் பிறந்தும் வழியறியாமையால் உயர்வல்லாத ஓரறிவு உயிராகிய நிலைத்திணைப் பொருளோடு பேசப்படும்.

**சி**வபெருமான் எங்கும் நீக்மறச் செறிந்து நிற்கின்றான். அத்துடன் உயிர்களோடு உயிர்க்குயிராகக் கலந்து நிற்கின்றான். உலகம் அழியாது அதை ஒடுக்கிப் பின் தோற்றுவித்தும் அருள்கிறான். திருவருளாலேயே இவ்வுண்மைகளை அறியமுடியும். ஆருயிரின் செவ்வியினை அளந்தறிந்து அதன் சிற்றறிவினைத் தனது முற்றறிவில் அடங்குதலாகிய வாங்குதலைச் செய்கிறான். பின் அவ்வுயிரை தூய்மைப்படுத்தி அங்குமேலோங்கி நிற்கிறான். அதனால் அவ்வுயிர் பரன்தாள்சேர் அடிமைப்பரன் என அழைக்கப்படுகிறது. அதன்பின் உயிர் உலகநுகர்வை இழந்துவிடும். சிவனோடு புணர்ந்த ஆருயிர் அறிவுவெளியானவனாகிறான். யானை உண்ட விளாம்பழத்தின் உள்ளே எதுவும் இராது. அது பூரணமாக இருக்குமே தவிர உள்ளே எதுவும் இராது. அதுபோல உயிரும், திருவருளும், சிவனும் துரியத்தின் மேல் அனைத்துலகங்களும் சிவனால் மாறுதல் செய்து ஒடுக்கப்படும். அவ்வாறு செய்தாலும் சிவனில் எந்த மாறுபாடும் தோன்றாது. தன்னிடமிருந்து வெளிப்படுத்தப்படும் அருளாற்றல்களையும் அவ் அருளாற்றலுடன் விரவிய ஆருயிரையும் தனது திருவடியின் கீழ் ஒடுக்கி அருளினன். அவன் ஞானத்தால் அறியும் ஞேயாந்தத்தில் நந்தி இருந்து அருளினான்.



திருச்சிற்றம்பலம்

## 28. வாய்மை

**ப**ற்றற்ற சிவபெருமானின் மீது பற்றுவைத்து ஏனைய பற்றுக்களைத் தவிர்ப்பதே பெருநெறியாகிய திருநெறியாகும். 'நமசிவய' தொக்கடம் 'சிவசிவ' ஈறாகக் கூறப்படும். திருவைந்தெழுத்தும் செவியறிவுறுத்தலாகிய நல்லுபதேசமாகும். அதனால் ஆருயிர் செம்மையுறும். சுடச்சுடரும் பொன்போல ஒளிவிடும். தன்மீதுள்ள குற்றங்களை அகற்றுமாறு சிவபெருமானிடம் முறையிட அவன் அவற்றை அகற்றியருளச் சமாதிநிலை வந்துசேரும். மலத்தொடக்குகள், மாயையின் தொடக்குகள் முதலிய எல்லாத் தொடக்குகளும் திருவருளால் அகலும். மெய்யுணர்வு ஏற்பட்டால் சூரியனது ஒளியில் எல்லாவற்றையும் இருந்த இடத்தில் இருந்து கொண்டே கண்டுகளிக்கலாம். அதைவிடுத்துச் சிலர் நூலுணர்வாலும், நுண்ணுணர்வாலும், உய்த்துணர்வாலும் அறிய முற்படுகின்றனர். அதனால் பயன் எதுவும் உண்டாகாது. முற்றறிவுள்ள சிவபெருமானை வணங்கி அவனருள் பெற்றால் திருவடிப்பேறு உண்டாகும்.

**அ**றியவேண்டியவையாவும் அவன் திருவடியிலே புலனாகும். திருவடியுணர்வுடைய ஒருவர் உலக முதல்வராகும் தகுதியைப் பெற்றவராவார். அவரே உலகிற்கு மெய்ப்பொருளை உணர்த்தும் மெய்மையானவருமாவார். மிகச் சிறப்பாகத் திருவைந்தெழுத்தைக் கணிப்பதால் ஆருயிர் சிவபெருமானுடன் ஒன்றாக ஒடுங்கும். சிவனின் மீது விருப்பம் கொண்டால் ஆருயிரின் உள்ளத்தைச் சிவன் தனது அரியாசனமாக்கிக் கொள்வார். சிவபெருமான் மீது பற்றின்றிப் பேரன்பு வைத்தவர் மெய்கலந்தவராவர். மெய்கலந்தவர்களுடன் சிவபெருமான் பேரன்பு கொள்வான். எவ்வேளையிலும் பிரியாதிருந்து அருள்வான். அவனை இடையறாது நினைத்தால் அப்பயிற்சி மிகுதியால் உயிர் உடலைவிட்டு நீங்கி வெளிமேவும் போது திருவைந்தெழுத்தை ஓதி அவனது திருவடியில் சேரமுனையுங்கள்.

**இ**ளம்பருவத்திலேயே திருவடி மீது பேரன்புவையுங்கள். காலையும், மாலையும் அவனைத் தொழுங்கள். அவ்வாறு தொழுதால் ஊழ்வினையால் வரும் துன்பங்கள் நீங்கும். திருவடிப் பேரன்பு காரணமாகத் திருவருள் வந்துசேரும். அப்போது நந்தி பேரருள் செய்வான். திருவருளால் ஒன்பது வாயில்களையும் அடைக்க வேண்டும். அப்படி அடைத்தால் உயிர்ப்பான குதிரையைச் தொடர்ந்து செலுத்தும் பேறான அகத்தவப்பயிற்சி உண்டாகும். ஆருயிர் நினைத்த வடிவத்தில் எழுந்தருளி அருள்பவன் நந்தி. அதனால் அவனை முழுமனதுடன் வணங்குங்கள். அவன் பொய்ப்பொருட்களில் பற்றற்றவர்க்குப் பேரருள் கொடுப்பவன். சிவபெருமானின் திருவடித் தாளினை பேரன்புடன் உள்ளத்தில் இருத்தல் மிகவும் இலகுவானது. அப்படியான அவனை துதிப்பாரில்லை. உலகமாயப் பொருட்களில் பற்றுக் கொண்டு துன்பம் மிகுந்த தம் உடம்புக்கு மேலும் மேலும் துன்பத்தையே கொடுக்கின்றனர். நன்னெறி நான்மையில் அறிவாகிய உணர்வு





நெறியே சிறந்ததாகும். அந்நெறியால் சிவபெருமானை ஆராதியுங்கள். அதனால் திருவடியை அடைந்து இன்புறும் மேன்மையான வாழ்வைப் பெறலாம்.

**அ**த்தகையோர் அகத்தும் புறத்தும் சிவப்பொலிவுடன் திகழ்வர். சிவனருள் என்ற தெவிட்டாத அமிழ்தினும் இனிய சிவப்பழம் ஒன்று உண்டு. அச்சிவப்பழத்தை ஆருயிர் உண்ணா வண்ணம் காமம், வெகுளி, பற்று என்ற கொடிய பறவைகள் புகுந்து தடை செய்கின்றன. அவற்றைத் திருவருளால் அகற்றிவிட்டுத் தெவிட்டாத சிவக்கனியை உண்ணுங்கள். திருவடியுணர்வை அறுக்கும் ஐம்புலன்களையும் அருளால் அறுத்தருள்பவன் சிவன். அவனே ஆருயிர்களின் பிறப்பையும் துன்பங்களையும் நீக்குபவன். அதனால் அவனைத் தொழுங்கள். வினைகளால் வரும் துன்பங்கள் யாவற்றையும் அகற்றித் தன் திருவடியிற் சேர்த்து இன்புறவைப்பான். மேற்சொன்னவற்றிற்குத் துணையாக இருப்பது உடம்பாகும். அவ்வுடம்பை நல்ல முறையிற் பயன்படுத்திச் சிவபெருமானிடம் ஒப்படைக்க வேண்டும். அதுவே மேலான தவமாகும். அவ்வாறு செய்தால் சிவபெருமான் தனது திருவடியுணர்வால் அறிவு நிலத்தில் உயர்ந்து செல்லுமாறு அருள்வான்.

## ௨௯. ஞானிசெயல்

**ஞா**னமெய்ந்நெறி தான் 'நமசிவய' என்ற செந்தமிழ் வேதம். அதனால் அந்நெறியில் வாழ்வதே ஆருயிரின் கடனாகும். அதனால் ஊழ்வினை அகலும். தன்னை நினைத்துத் தன்னை அடைந்து பேரின்பமடைவதற்காகவே ஆருயிர்களுக்குச் சிவபெருமான் ஊழ்வினையைக் கொடுத்தருள்கிறான். திருவைந்தெழுத்தை நினைக்கும் மனதுள் ஊழ்செல்ல அஞ்சும். இருவினையொப்பும் மலச் செவ்வியும் வாய்த்தால் ஆருயிருக்குத் திருவருள் வீழ்ச்சியடையும். இது சிவனின் அருளாலேயே நடைபெறுகிறது. ஆருயிர் சிவனருளால் முதலில் தன்னை அறிந்து கொள்ளும். அதன் பின் எஞ்சு வினைகளை அகற்றும். அவை அகலத் திருவடி இன்பம் தேடி வந்தடையும். மனம், வாக்கு, காயம் என்ற மூன்றும் சிவநினைவின்றி தொழிற்பட்டால் பல வினைகள் வந்து சேரும். முக்கியமாகப் பிறப்புக்கள் பலவும் வந்துசேரும். இவ்வினைகள் யாவும் சிவநினைவுடன் இருந்தால் அற்றுப் போய்விடும். நிற்றலும், இருத்தலும், கிடத்தலும், நடத்தலும், ஓடலும் செய்யும் போதும் சிவநினைவுடனே செய்தல் வேண்டும். உலகின் முதல்வனான சிவபெருமானை அந்தம் என்று அழைப்பர். ஆருயிர் அந்தமாகிய தன்னுள்த் தங்குவதற்காகவே அவன் அத்தமாக நின்றருள்கிறான். அதனால் ஆருயிர் பிறப்பற்று நிட்டையினை எய்தும்.



திருச்சிற்றம்பலம்

## ௩௦. அவாவறுத்தல்

**உ**யிர்ப்புப் பற்றியும் நடுநாடி பற்றியும் பேசிப்பயனில்லை. ஆசையும், செருக்கும் நீங்காத ஒருவர் பெருந்துன்பப்படுவர். அதனால் ஆசைகளையும், செருக்கையும் அறுங்கள். அவற்றை அறுத்தால் சிவபெருமானை அடையலாம். சிவபெருமான் இருக்குமிடம் அன்பினால் தூய்மையடைந்து அருளினால் ஒளிரும் ஆருயிரின் உள்ளமாகும். சிவபெருமான் ஆருயிர்களுக்குத் திருவடிப்பேற்றை அளிப்பதற்காகவே சிவப்பொலிவுமிக்க மாடங்கள், மண்டபங்கள், கூடங்கள், கோவில்கள் போன்ற இடங்களில் வீற்றிருக்கிறான். இவை அனைத்தும் அவனை நினைவூட்டும் கருவிகளாகும். இவை மாடிக்குச் செல்லும் படிகளை ஒத்தவை. அங்கு சென்று வணங்கும் போது ஆசைகளை அறுத்துவிட்டு வணங்குங்கள் ஆசைதான் துன்பங்களுக்கான வித்துக்களாகும். ஆசை அதிகரிக்க அதிகரிக்க பெரும் நெடும் துன்பங்கள் வந்துசேர்ந்து வருத்தும். ஆசைகளை விட விட இன்பம் பெருகும். ஐம்பூதங்களின் வாயிலான விளைவதும், வேறுபடுவதுமான ஊண், உடை, உறையுள் என்பவற்றில் கொண்டுள்ள பற்றை முற்றாக நீக்கி அவற்றில் இருந்து வரும் பெருவேட்கையைத் துறப்பதே மெய்ந்நெறியாகும். திருவடியுணர்வைப் பெறுவதே சிறப்பானதாகும். அவ்வுணர்வு எம்மைச் சிவபெருமானிடம் அழைத்துச் செல்லும். பல ஊழிகள் கடந்து சென்றுவிட்டன. வானோரும் அவ்வூழிகளில் மாண்டனர். மானிடர் அவாவுக்குட்பட்டுப் பிறந்திறந்து துன்பப்படுகின்றனர்.

**நெ**டுங்காலமாக நீங்காது நின்று துன்பப்படுத்தும் இருவினைகளையும், மும்மலங்களையும் தியான மூலம் அருளால் தூய்மையடையும். ஆருயிரின் ஐம்புல விரிவும் நீங்கும். நீங்கியதும் திருவருள் வெளிப்பட்டு அவ்வுயிரைத் தன்னுள் அமிழ்த்தும். அமிழ்ந்ததும் ஆருயிர் திருவடியுணர்வைப் பெறும். அந்நிலையே சிவஞான நிலையாகும். இந்நிலையில் நிற்பவர்களே சிவஞானியாவர். இவர்கள் மெய்யுணர்வுத் தூய்மைபெற்றவர்கள். இந்நிலைப்பட்ட ஆருயிருக்கு முத்தி கைகூடும். பெண் மயக்கமான காமம் நீங்கினால் அட்ட சித்தியாகிய பேறு கிடைக்கும். தன்னைச் சிவனாக நினைத்து மெய்யுணர்வுள்ளவர் நீறிட்டால் பார்ப்பவர்கள் அவரைச் சிவனாகவே எண்ணுவர். அம்முறையில் ஆருயிராகிய இவன் அவனாகிறான். அந்த முறையால் இவனை ஈசன் என்றே சிவனடியார்கள் எண்ணுவர். இவ்வுண்மையை அருளால் உணராதோர் பல்வேறு வகையான பிறவிகளுக்குட்பட்டு ஓயாது துன்பமடைவர். ஆருயிருக்கு உடம்பையும், உலகங்களையும் சிவபெருமான் படைத்தளிப்பதை கொதிக்கின்றவாறு எனக் கூறுவர். துடைத்தருள்வதைப் பதிக்கின்றவாறு என்று கூறுவர். ஆருயிர்களின் உணர்வினுள்ச் செய்யப்படும் மறைத்தல் அருளலும் சிவனால் செய்யப்படும் ஐந்தொழினுள் அடங்கும். இவ் ஐந்து தொழில்களையும் சிவனது திருவாணைப்படி ஐவர் செய்கின்றனர். மெய்யுணர்வுள்ளோர் இவ் ஐவரையும் ஒருபோதும் விரும்பமாட்டார்கள். விரும்பியவர்களுக்குப் படைக்கப்பட்ட உடம்பிற்குக் காரணம் வினையேயாகும் என்று நூலால் உருவகித்தார்.





## 31. பக்தியுடைமை

**தி**ருவடியுணர்வாகவும், திருவைந்தெழுத்தாகவும் நிற்பவன் சிவபெருமான். அவனே அனைத்து உயிர்களுக்கும் ஆதாரமானவன். அவனே மெய்யன்பர்களால் போற்றிப்புகழ்ந்து வழிபடும் பதியுமானவன். சீலம், நோன்பு செறிவு என்றும் முத்திறத்தாலும் மெய்யறிவு பெற்ற சிவனடியார்களுக்குத் திருவருளால் அடிமையானவர்கள் அறிவு நெறியினராவர். தன்முனைப்பற்று அருள்வழி செல்லும் திருவடியுணர்வுள்ளவர்களுக்குச் சிவபெருமான் நீரைவிடக் குளிர்மையானவனாகக் காட்சி கொடுத்து மகிழ்விப்பான். தன்முனைப்புற்று மருள்வழியில் செல்பவர்களுக்குச் சிவபெருமான் தீயைவிட வெப்பமானவனாக வீற்றிருந்து வருந்துவான். அவ்வாறு வருந்துவது அவர்கள் மருள் வழியைக் கைவிட்டு அருள் வழியிற் செல்வதற்கே யாம். மெய்யுணர்ந்தவர்களே இவற்றை உணர்வர் ஏழு உலகங்களுக்கும் அத்தனான சிவனே முதல்வனாவான். அவன் ஏழு உலகங்களிலும் நீக்கமறப் பரந்துள்ளான். அவன் மெய்யன்பர்களின் பக்தியில் வெளிப்பட்டருள்வான். பசுக்கன்று தனது தாயைப் பாசம் பொங்க அம்மா என்று அழைப்பதைப் போல அன்பு மிகுதியால் கனிந்து அழைத்தேன். என்னுள்க் குடியிருக்கும் உயிரான நாதனை கனிந்துருகி அழைத்தபோது அவனும் கனிவாக அமர்ந்திருந்தான். நான்னெறி நான்மை நற்றவத்தின் பலத்தால் வந்த அருளால் அவனுள்ப் புகுந்தேன். அவனும் என்னை ஏற்றுக் கொண்டான்.

**ஆ**ருயிர்கள் சிவபெருமான் மீது இறவாத இன்ப உணர்வோடு இறைபணி புரிகின்றன. அவ் ஆருயிர் புரிவது சிவப்பணியாகும். திருவாணை அகத்தில் இருந்து அறிவில் தோன்ற திருவடிப் பேற்றினை ஆருயிரின் அறிவு, அன்பு, ஆற்றல் ஆகிய மூன்றும் சிவபெருமானை அவனது திருவருளால் அவனின் நினைவாகவே இருக்குமாறு செய்யும் இதுவே ஆருயிரின் அறிவு நிகழ்ச்சியாகும். ஆருயிர் சிவனின் மீது கொள்ளும் பேரன்பு காரணமா அழியாத இன்பம் வந்துசேரும். அவ் அன்பில் ஆருயிர் அழுந்தும். இதுவே ஆருயிரின் அன்பு நிகழ்வாகும். அதன் பின் ஆருயிர் அவன் நினைவாக அவனைப்பற்றி நிற்கும். அதுவே ஆருயிரின் ஆற்றல் நிகழ்வாகும். இவையாவும் சிவப்பணிகளாகும். அதன் பின் ஆருயிர் முற்றுணர்வு பெற்று ஆண்டான் அடிமை என்னும் நிலைக்குட்படும். அதன்பின் ஆருயிர் செய்யும் பணிகள் யாவும் திருப்பணிமட்டுமல்ல திருவடியைச் சேர்ப்பிக்கும் பணிவுமாகும். அதன்பின்பு ஆருயிருக்கு எப்பணியும் இல்லை. இது மெய்ப்புணர்ப்பின் மெய்ப்பொருளாகும். உடம்பைப் புள் என்பர். அப்புள் அழியாது நெடுநாள் வாழவேண்டும் என்று எண்ணிக் காயகற்பம் தேடிப் பலர் அலைவர். பாம்பு என உருவகிக்கப்படும் குண்டலினியும் உயிர்ப்புப் பயிற்சியால் பத்து வகையான இன்னிசை முழக்கம் அகத்தே முழங்கும். அப்போது அமிர்த ஊற்றுப் பெருகும். அதைப் புருவநடுவில் ஏற்றுதல் வேண்டும். கட்டு, ஒட்டு ஆகிய இரண்டிலும் நின்று அருள்புரிபவன் நந்தி. ஒட்டு நிலையை அடைய நந்தியின் திருவருள் வேண்டும். அவனின் துணையுடன் செம்பொருள் நூல்கள்





வழியாக ஒழுகிப் பிறப்பை அறுக்க வேண்டும். ஆருயிருக்கு என்றும் துணையாக இருப்பது திருவருள் வானவர்கள் அருளால் இன்பமடைபவர்கள். பொருளால் இன்பமடைபவர்கள் தானவர். யாரும் வழிபட்டு மேன்மையடைய ஏதுவானவன் சிவபெருமான். அவனைக் கானவனா வேடன் என்பர். அவனை வழிபடுங்கள் அவன் உடம்பின் அகத்தும் உயிருக்குள் உயிராகவும் இருந்து அருள்பவன்.

## 32. முத்தியுடைமை

**வீ**டுபேற்றை முத்தி என்பர். திருவருளால் முப்பத்தாறு மெய்களும் நமக்கு வேறு எனவும் கருவி எனவும் அவையாவும் சிவபெருமானின் உரிமை என்றும் மீண்டும் அவற்றை உரிமை கொள்ளக்கூடாதெனவும் அருளால் உணர்ந்து கொள்ளல் தத்துவச் சுத்தியாகும். இவர்கள் செய்யும் பணிகளெல்லாம் சிவநினைவுடன் செய்யப்படும் சிவத்திருப்பணியாகும். ஆருயிர்களை இருபெரும் கரங்களை உடைய அரிய பறவையாக உருவகஞ் செய்துள்ளனர். இரு கால்கள் என்பது உழைப்பும் ஒழுக்கமும் ஆகும். அருமையான சுவைமிக்க திருவடியென்னும் கனியைத் தேடி ஆருயிர்கள் வாழும். அவ்வாறு வாழும்போது காமவசப்பட்டு இழவினைத் தரும் விளக்கினைப் போல் துன்பங்களைக் கொடுக்கும் உலகப்பற்று என்ற கைவிளக்கினை ஏற்றி எண்ணம், மனம், இறுப்பு என்னும் நால்வரும் ஆருயிரைத் தம் வழிக்கு இழுக்க விரும்புகின்றனர்.

## 33. சோதனை

**சி**வபெருமானது திருவருட் கடலிலே மூழ்கியமையால் அவனருளால் மாயமருளையும், இருளையும், இருவினைகளையும் ஒருங்கே விடுத்தேன். யான் எனது என்றபற்று யாம் என மாறிற்று. அதையும் விடுத்தேன். அதனால் என்னைக் கரம் திட்டனம் என்றனர். அதனால் எதையும் செய்யாதவனானேன். அதனால் இயல்பாகவே விளங்கும் உண்மைப் பேறறிவுடைய சிவனின் அருமறையாகிய திருவைந்தெழுத்தை ஓதி நிறைவாக உள்ளவனானேன். அதனால் அவனது திருவடியிலே அவனருளாலே அடியேன் அவனோடு கூடிவிட்டேன். மெய்யுணர்வுடன் நந்தியை நினைத்தேன். அதனால் அவனது அழிவில்லாத திருவருள் என்னோடு பொருந்தியது. பொருந்தியதும் அவனுடன் வேறறப் புணரும் புணர்ப்பாய்ப் புணர்ந்தேன். அதனால் சிவம் என்றும் பெயரைப் பெற்றேன். காற்றில் உண்டாகும் ஊறும், கரும்பில் உண்டாகும் கட்டியும், பாலில் உண்டாகும் நெய்யும், பழத்தில் உண்டாகும் சுவையும், பூவில் உண்டாகும் நறுமணமும் பிரிவற நிற்கின்றன. அதுபோலச் சிவபெருமானும் அனைத்துயிர்களுக்கும் அனைத்து உலகங்களுக்கும் நீங்காத காவலனாக இருக்கிறான். அவன் அகல் நிறைவாகவும், ஆருயிர்கள் அமைநிறைவாகவும் அனைத்துப் பொருள்களும் அடங்கு நிறைவாகவும் அமையுமாறு கலந்து நிற்கின்றான்.





**ஆ**ருயிர் பெண்தன்மை எய்தி நற்றவத்தால் சிவபெருமானை நாடவேண்டும். அவ்வாறு நாடி என்றும் இன்பமாக இருக்கும் வழியைக் காணவேண்டும் என்று அருளம்மை திருவுளம் கொண்டாள். அவளே மேருமலையில் சிவபெருமானை நோக்கி அருந்தவம் புரிந்தவள். அதை உணர்ந்த சிவபெருமான் அவளது விருப்பத்தைப் பூர்த்தி செய்ய அவளைத் திருமணம் செய்து தனது மேனியின் இடப்பக்கத்தைக் கொடுத்தருளினார். ஆருயிர் பெண்தன்மை எய்துவதென்பது ஆண் என்பதிலிருந்து ஒரு மாத்திரை குறைவதாகும். உண்மை அறிவு இன்பப் பண்புகள் அடங்கிய வல்லானை, நற்றவத்துள் நடுநின்று அருளும் நலத்தினை, அனைத்துயிர்களுக்கும் அகலாது நின்று திருவருளால் நன்மை புரியும் நல்லோனை, நடுநிலை தவறாது நயம் புரிந்தருளும் நந்தியை இருளும் மருளும் ஒரு சிறிதும் இல்லாத புனிதனை அன்புடன் நாடுங்கள். அவ்வாறு நாடினால் அவன் தனது திருவடியைப் பரிசாகத் தந்தருள்வான். அமரர்களுக்குக் கூடத் தன்னைக் காட்டிக் கொள்ளாத சிவபெருமான் ஆருயிர்களுக்குத் திருவடிப்பேறளிக்கத் தன்னைக் காட்டிக் கொள்வான். அந்தவகையில் அவன் எனது இவ்வுலகத் தந்தையாக இருக்கிறான். அவன் செம்பொருள், நலம் புரியும் விழுப்பொருள், செவ்வழியாகச் சென்று சேர்வதற்குரிய சிவலோகமாகிய அம்மையுடன் வீற்றிருக்கும் அரும்பொருள்.

**அ**வனே நந்தியாவான் சிவகுருவாக எழுந்தருளி வந்து எனக்கு அறுவழி ஆய்வு செய்தருளும் போது நல்ல நாதனாகி என்னுடன் தொடர்ந்து நின்றருளினான். என்னுடன் ஒன்றாகி நீக்கமற நின்றருளினான். எந்தையான அவன் பொருள் தன்மையால் கடந்து நின்று திருவடியைச் சேரும் வழியைக் காட்டியருளினான். மும்மலங்களாகிய மாயப்படைகளைத் திருவருளாகிய திருவைந்தெழுத்தென்ற ஞானவாட்படை திருவாணைப்படி மும்மலங்களையும் அழித்தொழிக்கும். அதனால் திருவடியுணர்வு தழைத்தோங்கும் அவ்வாறு ஓங்கும் போது சிவபெருமானுடன் இரண்டறக் கலக்கும் நிலை உருவாகும். சிவகுருவாக எழுந்தருளி வந்த சிவபெருமான் திருவைந்தெழுத்து என்ற கூரிய சக்தி மிக்க வாளைத் தந்துதவினான். அதை உயிரிலும் மேலானதாக நினைத்துச் செயற்பட்டேன். அதனால் நான் அவனது திருவடியை அடைந்து அவனானேன். பிறப்புக்கு வித்தான இருள்மலத்தையும், அதனால் உண்டாகும் இருவினைகளையும், இருவினைகளால் வரும் துன்பங்களையும் சிவகுரு அகற்றி அறனெறிகளை மனதிற் புகுத்தினார். அதனால் ஆருயிர்கள் திருவடியை அடைந்தன. சிவமான பெருவாழ்வைப் பெற்றன. பெற்ற நற்பேற்றால் பெரும் செய்கைகளைச் செய்யும் தீரர்களான சதுரர் ஆயினர்.

**- எட்டாம் தந்திரம் முற்றும் -**